ஜனவரி 2025

# ஞானம்

கலை இலக்கியச் சஞ்சிகை 296

விலை : ரூபா 100/=

25ஆவது அகவையில் ஞானம் கலை இலக்கியச் சஞ்சிகை சிறப்புக் கட்டுரை





கவிஞர் செங்கதிரோன்

சிறப்புக் கட்டுரை

## உணர்ச்சிக் குறிகள் (EMOJI)

ஓர் அறிமுகம்



பகிர்தலின் மூலம் விரிவும் ஆழமும் பெறுவது ஞானம் !

ஒளி:25
சுடர்:08
296

# பகிர்தலின் மூலம் விரிவும் ஆழமும் பெறுவது ஞானம்!

வெள்ளத்தின் பெருக்கைப்போல் கலைப்பெருக்கும்
கவிப்பெருக்கும் மேவுமாயின்,
பள்ளத்தில் வீழ்ந்திருக்கும் குருடரெல்லாம்
விழிபெற்றுப் பதவிகொள்வர்.


## ஆசிரியர் குழு

ஆசிரியர், ஸ்தாபகர் : தி. ஞானசேகரன்

இணை ஆசிரியர் : ஞானம் ஞானசேகரன்

நிர்வாக ஆசிரியர் : ஞானம் பாலச்சந்திரன்

ஓவியர் : கிறிஸ்டி நல்லரெத்தினம்



## தொடர்புகளுக்கு

**தொ.பேசி.** ☞ 0094-71-7362862
0094-11-2586013

**மின்னஞ்சல்** ☞ editor@gnanam.info

**அஞ்சல்** ☞ 3B-46th Lane, Colombo-6,
Sri Lanka

**வங்கி விபரம்** ☞ G. BALACHANDRAN
Acc. No. - 009020348846
Hatton National Bank,
Wellawatha Branch.
Swift Code : HBLILKLX

**சந்தா விபரம்** ☞ **ஒரு வருடம்**

| | |
|---|---|
| Sri Lanka (LKR) | 1000 |
| Australia (AU$) | 50 |
| Europe (€) | 40 |
| India (Indian Rs.) | 1500 |
| Malaysia (RM) | 150 |
| Canada ($) | 50 |
| UK (£) | 40 |
| Singapore (Sin. $) | 50 |
| Other (US $) | 50 |


*⊙ஞானம் சஞ்சிகையில் பிரசுரமாகும் படைப்புகளின் கருத்துகளுக்கு அவற்றை எழுதிய ஆசிரியர்களே பொறுப்பானவர்கள்.*

*⊙புனைபெயரில் எழுதுபவர்கள் தமது சொந்தப் பெயர், தொலைபேசி எண், முகவரி, ஆகியவற்றை வேறாக இணைத்தல்வேண்டும்.*

*⊙பிரசுரத்திற்குத் தேர்வாகும் படைப்புகளைச் செவ்வைப்படுத்த ஆசிரியருக்கு உரிமையுண்டு.*

*⊙படைப்புகள் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு மின்னஞ்சலில் அனுப்பப்படவேண்டும்.*

*⊙ஞானம் சஞ்சிகையானது பொதுவெளி (Public Domain) பதிப்புரிமை உடையது.*

## இதழினுள்ளே.....




⊙ **கவிதைகள்**

| | |
|---|---|
| ஷெல்லிதாசன் | 08 |
| வில்வரசன் | 08 |
| உடப்பூர் வீரசொக்கன் | 08 |
| அகளங்கன் | 15 |
| மொழிவரதன் | 20 |
| தம்பிலுவில் ஜெகா | 20 |
| ரஹென்றி வேர்ட்ஸ்வேர்த்-லோங்பெலோ / அன்னலட்சுமி இராஜதுரை | 40 |
| ஜின்னாஹ் ஷரிபுத்தீன் | 44 |
| ஜலீலா முஸம்மில் | 49 |
| மகாதேவ ஐயர் ஜெயராம சர்மா | |

⊙ **சிறுகதைகள்**

| | |
|---|---|
| ந. பார்த்தீபன் | 09 |
| கிறிஸ்டி நல்லரெத்தினம் | 16 |
| சுந்தரிமணியன் | 35 |
| பாலரத்னம் சரண்யா | 45 |

⊙ **கட்டுரைகள்**

| | |
|---|---|
| இரண்டாம் விசுவாமித்திரன் | 03 |
| தேவராசா கஜீபன் | 11 |
| கே. எஸ். சுதாகர் (நினைவோடை) | 19 |
| ஞானம் பாலச்சந்திரன் | 21 |
| வாகரைவாணன் | 33 |
| வெலிகம ரிம்ஸா முஹம்மத் | 37 |
| ஏலையா க. முருகதாசன் | 41 |

⊙ **பத்தி**

| | |
|---|---|
| பேராசிரியர் துரை மனோகரன் | 50 |

⊙ **வாசகர் பேசுகிறார்** 52

# ஆசிரியர் பக்கம்

## உயரிய இலக்கியம் ஓர் அருமருந்து..!

அன்புடையீர், 21ஆம் நூற்றாண்டில் கால் நூற்றாண்டு ஓடிவிட்டது.

சென்ற நாற்பது – ஐம்பது ஆண்டுகளில் தொழில்நுட்பத்தில் ஏற்பட்ட அதிவேக வளர்ச்சியானது (Exponential Growth), நாம் வாழும் **வாழ்க்கைமுறையில் மாற்றங்கள் ஏற்பட எடுக்கும் கால இடை வெளியை, குறைக்கத் தொடங்கியுள்ளது.** 2000களின் தொடக்கத்தில் எமக்கிருந்த வாழ்க்கைமுறை இன்றில்லை. கடைக்குச் சென்று உணவருந்திய காலம் மாறி, வீட்டிற்கே உணவு வந்துவிடுகிறது. சந்தைக்குச் சென்று மரக்கறி வாங்கிய காலம் மாறி, வாயிற்படிக்கே பொருட்கள் வந்துவிடுகின்றன. நினைத்தவுடன் கண்டங்கள் கடந்து வாழும் உறவுகளின் முகம்பார்த்து உரையாடமுடிகிறது. இத்தகு மாற்றங்களின் பட்டியலோ மிகமிக நீண்டது.

ஆயிரம் ஆண்டுகளுக்குமுன்னர் காணப்பெற்ற மனித வாழ்க்கைமுறையில் மாற்றங்கள் ஏற்பட சில நூற்றாண்டுகள் எடுத்துள்ளன என்பதை அறியமுடிகிறது. உதாரணமாக பத்தாம் நூற்றாண்டில் காணப்பெற்ற வாழ்க்கைமுறைக்கும், பதினொராம் நூற்றாண்டின் வாழ்க்கைமுறைக்கும் இடையில் பாரிய மாற்றங்கள் இருந்துள்ளதாகத் தெரியவில்லை. இதனை இலக்கியச் சான்றுகளின் மூலமும் கண்டுகொள்ளலாம். ஐரோப்பியரின் வருகைக்குப் பின்னர், வாழ்க்கைமுறையில் மாற்றம் ஏற்படுவதற்கு தேவையான கால இடைவெளி குறையத் தொடங்கியது எனலாம். பதினேழாம் நூற்றாண்டுக்கும் பதினெட்டாம் நூற் றாண்டுக்கும் இடையில், வாழ்க்கைமுறையில் மாற்றங்களைக் காணமுடிகிறது. தொடர்ந்துவந்த காலங் களில், இந்த இடைவெளி மேன்மேலும் குறைவடையத் தொடங்கியது.

தற்போதைய நிலையில், நாம் இன்று கட்டும் ஒரு வீடொன்றில் திருத்தங்களைச் செய்யாது அடுத்த பத்து ஆண்டுகளுக்குப் பின்னர் வாழமுடியுமா? என்பது கேள்விக்குறியே! வாழ்க்கை முறையில் மாற்றங்கள் ஏற்பட எடுக்கும் கால இடைவெளியானது, அத்துணை தூரம் சுருங்கிவிட்டது. இதனால், **எதிர்காலத்து வாழ்க்கைமுறை எவ்வாறு இருக்கும்? என்பதை அனுமானிக்கவோ திட்டமிடவோ முடியாதுள்ளது**.

அதுமட்டுமன்றி தொழில்நுட்ப வளர்ச்சியானது, விரும்பியவற்றை உடனடியாகப் பெறக்கூடிய அல்லது உடனடியாகச் செய்யக்கூடிய கட்டமைப்பை ஏற்படுத்திவிட்டது. இது **பொறுமையற்ற மனோநிலை**யையும், **பெறுமதி உணராத மனோநிலை**யையும் மக்களிடையே தூண்டி வளர்க்கிறது.

மேலும், தொழிநுட்பத்தினால் அதிகப்படியான தகவல்கள், பொருத்தமற்ற தகவல்கள், தேவையற்ற தகவல்கள் என்பன காட்டாற்று வெள்ளம்போல் அள்ளியடித்துவந்து விரல் நுனியில் குவிகின்றன. இதனால், **தகவல் அதிசுமை மனோநிலை**யினாலும் (Information Overload) மனிதர்கள் திக்குமுக்காடுகின்றார்கள்.

இவையனைத்தும், மனிதர்களுக்குச் **சலிப்பு மனோநிலை** ஏற்படக் காரணமாகிவிடுகிறது. 21ஆம் நூற் றாண்டில் வாழ்ந்துகொண்டிருக்கும் மனிதர்கள், சலிப்பு மனோநிலையில் உழல்வதாக ஆய்வாளர்கள் கூறுகின்றனர். எதிலும் சலிப்பு; எந்நாளும் சலிப்பு. பத்து வயதுக் குழந்தைகூட “எனக்குச் சலிப்பாக இருக்கிறது” (I am bored) எனக் கூறுவது சர்வசாதாரணமாகிவிட்டது.

சலிப்பு மனோநிலைக்கு ஓர் அருமருந்தாக அமைவது, உயரிய நல் இலக்கியங்களில் மூழ்கித் திளைத்த லாகும். தமிழ், இலக்கிய நெஞ்சங்களே..! உங்கள் அனைவருக்கும் இனிய புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்!

அட்டைப்பட அதிதி

# கவிஞர் செங்கதிரோன் இலக்கிய அரசியலின் தளராத போராளி



முத்தமிழ் வித்தகர் விபுலாநந்த அடிகளார் பிறந்த காரைதீவு மண்ணிலே தம்பியப்பா கனகம்மா தம்பதியினரின் புதல்வனாக 13.12.1950 இல் கோபாலகிருஸ்ணன் பிறந்தார். தமிழ் இலக்கிய நெடும்பரப்பில் செங்கதிரோன் என நன்கு அறியப்பட்டவர். அவரின் வாழ்வு நமக்கெல்லாம் முன்மாதிரியானது. அவர் பற்றியதே இக்கட்டுரையாகும்.

தந்தையின் தொழில் நிமித்தம் குழந்தைப் பருவத்திலேயே காரைதீவிலிருந்து குடும்பத்தோடு அம்பாரை மாவட்டத்தின் தென் கோடியான பொத்துவிலுக்கு இடம்பெயர்ந்தார்.

கிழக்கின் மண்வளமும் செந்தமிழின் பண்வளமும் அவரை நன்கு போசித்து வளர்த்தது. கவிஞராக புனைகதை எழுத்தாளராக சஞ்சிகை ஆசிரியராக, பேச்சாளராக, நூல் திறனாய்வாளராக, கலைஞராக, அரசியல் செயற்பாட்டாளராக, என்று ஓய்வின்றிப் பணியாற்றிய அவர் கிழக்கு மண்ணின் இலக்கிய அடையாளமாக நிமிர்ந்து நிற்கிறார்.

## கல்வி

பொத்துவில் மெதடிஸ்த மிசன் தமிழ் கலவன் பாடசாலையில் தனது ஆரம்பக் கல்வியை பெற்றுக் கொண்டார். வகுப்பில் முதல் மாணவனாக வந்த இவர் ஐந்தாம் வகுப்புப் புலமைப் பரீட்சையில் சித்தி பெற்றார். மட்டக்களப்பு வந்தாறுமூலை மத்திய மகா வித்தியாலயத்தில் விடுதியில் தங்கி க.பொ.த உயர்தரம் விஞ்ஞானப் பிரிவில் (1962-1968) தனது கற்றல் செயற்பாடுகளை மேற்கொண்டார். அக்கல்லூரியே செங்கதிரோனின் செழுமையான ஆளுமை வளர்ச்சிக்கு அத்திவாரமிட்டது எனலாம்.



**இரண்டாம் விசுவாமித்திரன்**

## தொழில்

1968இல் நீர்ப்பாசனப் பொறியியல் டிப்ளோமா பயிற்சிநெறிக்கு 'நீர்ப்பாசனப் பயிலுனர்' ஆகத் தெரிவாகி குருநாகல் மாவட்டத்திலுள்ள கல்கமுவ என்னும் இடத்திலுள்ள நீாப்பாசனப் பயிற்சிக் கல்லூரியில் ஆங்கில மொழியில் பொறியியல் டிப்ளோமா பயிற்சி பெறச் சென்றார். இப்பயிற்சிக் கல்லூரிக் காலத்தில் தமிழ்க் கலாமன்றத்தின் செயலாளராகவும் செயற்பட்டார்.

இருவருடப் பயிற்சியை முடித்து நீர்ப்பாசனத் தொழில்நுட்ப உத்தியோகத்தராக 01.02.1971 இல் நியமனம் பெற்று இருபத்து மூன்று வருடங்கள் சேவையாற்றி 04.07.1994 இல் ஓய்வு பெற்றார்.

சுனாமிக்குப் பின்னரான காலத்தில் நான்கு வருடங்கள் (2005-2008) 'யுனெப்ஸ்' (UNOPS) நிறுவனத்தில் மட்டக்களப்பு மாவட்டத்தில் பிரதேசப் பொறியியலாளராகப் பணியாற்றினார்.

அதன் பின்னர் கிழக்கு மாகாணப் பாலர் பாடசாலை கல்விப் பணியகத்தின் மட்டக்களப்பு மாவட்டச் செயற்பாட்டுப் பணிப்பாளராகக் (2010 - 2013) கடமையாற்றினார். இக்காலகட்டத்தில் இவர் ஆற்றிய பணிகள் பலராலும் விதந்து பேசப்பட்டது. கிழக்கு மாகாண பாலர் பாடசாலைக் கல்விக்கென பாடத்திட்டமொன்றைத் தயாரிப்பதில் இவரது பங்களிப்பு பெரியது.

மட்டக்களப்பில் பேர்பெற்ற சீனித்தம்பி குடும்பத்தைச் சேர்ந்த ***சுசீலாதேவி*** என்பவரை மணமுடித்தார்.

தன்னுடைய அரசியல் ஈடுபாடு காரணமாகவும், நாட்டில் நிலவிய அசாதாரண சூழ் நிலையாலும், நாடுகடந்து சிலகாலம் அஞ்ஞாதவாசம் புரிந்து மீண்டும் இலங்கை திரும்பி கொழும்பில் இருபது வருடங்கள் குடித்தனம் நடத்தினார். மனைவி சுசீலா கொழும்பு றோயல் கல்லூரியில் கணித ஆசிரியையாக வேலை பார்த்தவர். அவர்களின் ஏகபுத்திரன் தன் மனைவி மற்றும் இருகுழந்தைகளுடன் வெளிநாட்டில் வேலை செய்கிறார்.

2010இல் கொழும்பிலிருந்து கிழக்கு வந்த செங்கதிரோன் தம்பதியினர் தற்போது மட்டக்களப்பில் வாழ்ந்து வருகின்றார்.

## இலக்கியச் செயற்பாடுகள்

செங்கதிரோன் கவிதை, சிறுகதை, புதினம், உருவகக்கதை, கட்டுரை, திறன்நோக்கு, ஆய்வு, பத்தியெழுத்து, சிற்றிதழ் ஆசிரியம் என்று பல்துறைகளிலும் தனது ஆற்றலை வெளிப்படுத்தும் கலை இலக்கியச் செயற் பாட்டாளராகத் திகழ்கிறார்.

மட். வந்தாறுமூலை மத்திய கல்லூரியில் மாணவனாக இருந்தபோது 'கலை அமுதம்', 'தேமதுரம்'ஆகிய கையெழுத்துச் சஞ்சிகைகளின் உருவாக்கத்தோடு அவரது இலக்கியச் செயற்பாடுகள் துளிர்விடத் தொடங்கின.

நீர்ப்பாசனப் பயிற்சிக் கல்லூரியில் பயிலுனராக இருந்த காலத்தில் (1969) இவரை இதழாசிரியராகக் கொண்டு 'அருவி' என்ற சிறப்பு மலர் வெளிவந்தது. அதில் 'நற்கவிதை வேண்டும்'என்ற செங்கதிரோனின் கவிதை பிரசுரம் கண்டது. அவரின் முதலாவது அச்சேறிய கவிதை இது. இன்றும்கூட இணையத்தள நூலகங்களில் 'அருவி' சஞ்சிகையை வாசிக்க முடியுமாயுள்ளது.



தமிழ்ப்பற்றும் இனத்தின் மீதான நேசமும் கவிதைகள் எழுத அவரைத் தூண்டின. 'சுதந்திரன்' பத்திரிகையில் அவரது தமிழுணர்ச்சிக் கவிதைகள் களம் கண்டன. .செங்கதிரோனின் கவிதை வெளி விசாலிக்கத் தொடங்கியது.

சொல், பொருள், உத்தி, சொல்லும் பாங்கு என அவர் கவிதைகள் தனித்துவக் கோலம் பூண்டன. கவிதைகளின் எல்லா வடிவங்களும் அவரிடம் கைகட்டிச் சேவகம் புரிந்தன.

கவிதைபற்றிய அவரின் இயலுமையை ருசுப்படுத்தலின்றி எழுமாறாகப் இங்கு பேசவில்லை. 'கவிதை கேளுங்கள்' என்ற தலைப்பில் முகநூல் வழியான இணைய நிகழ்ச்சியொன்றில் 30.07.2021இல் அவர் ஆற்றிய உரையைக் கேட்டால் இன்னும் கூடுதலான தகவல்கள் பெறலாம்.

கவிதைகளின் வெளிப்படுத்தலுக்காகப் பெரும்பாலும் அவரின் பணிகள் இருந்தன. மட்டக்களப்பிலிருந்து வெளிவந்த 'வயல்'(1984) என்ற மாசிகையின் ஆசிரிய குழு உறுப்பினராக இருந்ததும் 2001 – 2004 காலப்பகுதியில் 'ஓலை' என்ற மாதாந்த சஞ்சிகையை வெளியிட்டு கொழும்பு தமிழ் சங்க வரலாற்றில் இடம் பிடித்ததும் மேலதிக தகவல்களாகும்.

1984இல் வீரகேசரியின் 'இலக்கியச் சாளரம்' பகுதியில் இவரால் தொடக்கி வைக்கப்பட்ட 'வேண்டாம் புதுக்கவிதைப் போக்கு' என்ற கவிதைச் சமர் இன்றுவரை பேசப்படுகின்றது.

மலேசியாவின் தலைநகரான கோலாலம்பூரில் 1987இல் நடைபெற்ற ஆறாவது உலகத் தமிழாராய்ச்சி மகா நாட்டில் 'தமிழும் விஞ்ஞானமும்' என்ற தலைப்பில் இவர் சமர்ப்பித்து வாசித்த ஆய்வுக் கட்டுரை இவரது புலமையை நிறுவியது.

காலத்துக்குக் காலம் வெளி வந்த இவரின் நேர்காணல்கள் இவரின் இலக்கியச் செயற்பாடுகளின் கனபரிமாணத்தை நன்கு பேசக்கூடியன. குறிப்பாக இலண்டன் தீபம் தொலைக்காட்சி, இலங்கை வானொலியின் இதய சங்கமம், சக்தியின் களம், நேத்ராவின் உதய தரிசனம் என்பன இதற்கான பதிவுகளாகும்.

## செங்கதிர்

தனது சொந்த முயற்சியில் 'செங்கதிர்' என்னும் கலை இலக்கியப் பண்பாட்டுப் பல்சுவைத் திங்கள் இதழைக் கொண்டு வந்தார். 2008 ஜனவரியிலிருந்து 2013 ஜனவரி வரையான ஐந்து வருடங்களில்

இச்சஞ்சிகையின் அறுபத்தியொரு இதழ்கள் வெளிவந்தன.

விசுவாமித்திர பக்கம், கதை கூறும் குறள், விளாசல் வீரக்குட்டி, சொல்வளம் பெருக்குவோம், தமிழறிவோம், காசிஆனந்தன் நறுக்குகள் போன்ற தொடர் அம்சங்களோடு கற்றறிந்த பெருமக்கள் பலரிடமிருந்து ஆக்கங்கள் பெற்று வெளியிடப்பட்டன. இளைஞர்கள் மகளிர் என்று புதிய தலைமுறையினருக்கும் பக்கங்கள் ஒதுக்கப் பட்டதுடன் செங்கதிர் கிழக்கிலங்கை சஞ்சிகை வரலாற்றில் முக்கிய இடத்தையும் பிடித்துக் கொண்டது.

உலகத் தமிழ் சிற்றிதழ்கள் சங்கம் தமிழ்நாடு குற்றாலத்தில் ஒழுங்கு செய்த ஐந்தாவது வருடாந்த மகாநாட்டில் இச்சஞ்சிகை 'அய்யன் திருவள்ளுவர் இலக்கியப் பேரவை விருது-2010' பெற்றுப் பெருமை கண்டது. நாடு கடந்து செங்கதிர் பேசப்பட்டது என்பதை உலகச் சிற்றிதழ்கள் சங்கத்தின் இந்த மகாநாடு காண்பித்தது. இதுகேட்டு புலம்பெயர் நாடுகள் உட்பட உலகெங்கும் பரந்துபட்டு வாழ்ந்த செங்கதிர் வாசகர்கள் மனம் குளிர்ந்தனர்.

## இலக்கியக் கண்ணகி

செங்கதிரோனைப் பேசும் எவரும் அவரின் முன்னெடுப்பில் நடைபெற்று வரும் கண்ணகி இலக்கிய விழா பற்றிப் பேசாமல் இருப்பதில்லை. 'கண்ணகி கலை இலக்கியக் கூடல்' என்ற அமைப்பை நிறுவி சிலப்பதிகாரக் கண்ணகியை இலக்கியக் கண்ணகியாக வெளிக்கொண்டு வந்தார். பொதுமக்களின் ஆதரவோடு 2011-2019 வரையான காலத்தில் ஒன்பது கண்ணகி இலக்கிய விழாக்களை நடத்தினார். முதலாவது விழா மட்டக்களப்பில் 18.06.2011இல் கோலாகலமாக இடம்பெற்றது. அன்றிலிருந்து கிழக்கு மண்ணில் மக்கள் மனங்களில் செங்குட்டுவனாக வாழ்கிறார்.



விழாவில் வெளியிடப்படும் 'கூடல்' என்ற சிறப்பு மலர் சிலப்பதிகாரம் மற்றும் கண்ணகி வழக்குரை காவியம் தொடர்பில் ஆய்வறிஞர்களிடமிருந்து பெற்ற கட்டுரைகளைத் தாங்கி வெளிவந்தமை கண்ணகி இலக்கிய விழாவின் இன்னுமொரு 'பிளஸ் பொயின்ற்' ஆகும். இதுவரை ஏழு பரல்கள் (விழா மலர்கள்) வெளிவந்துள்ளன.

## அரசியல் செயற்பாடுகள்

செங்கதிரோனின் கலை இலக்கிய சமூக இயங்குதலுக்கும் அப்பால் அவர் ஒரு அரசியல் செயற்பாட்டாளரும்கூட.

அகில இலங்கைத் தமிழரசுக் கட்சி, தமிழ் இளைஞர் பேரவை, தமிழர் கூட்டணி, தமிழர் விடுதலைக் கூட்டணி (பொதுச்சபை) ஆகியவற்றின் முன்னாள் உறுப்பினரான இவர் அகில இலங்கை தமிழர் மகாசபையின் செயலாளர் மற்றும் கிழக்குத் தமிழர் கூட்டமைப்பின் தலைவர் ஆகிய பதவிகளில் இன்றும் இயங்கி வருகிறார்.

பாராளுமன்றத் தேர்தல்களிலும் அவர் போட்டியிட்டார். தேர்தல் வெற்றியிலும் கொள்கையே முக்கியம் என்று விசுவாசித்ததனால் வெற்றியைச் சுவைக்க முடியாமல் போனது சமூகத்தின் துர்லபமே.

'அரங்கம் நியூஸ்' இணைய இதழில் தம்பியப்பா கோபாலகிருஸ்ணன் என்ற தன்னுடைய இயற்பெயரில் முன்னர் தொடராக எழுதிய 'சொல்லத் துணிந்தேன்' மற்றும் வாக்குமூலம் ஆகிய அரசியல் பத்தி எழுத்தும் தற்போதும் எழுதிவரும் 'சொல்லித்தான் ஆகவேண்டும்' என்ற அரசியல் பத்தியும் நடுநிலை தவறாத கண்ணோட்டம் காரணமாக எல்லாத் தரப்பினரையும் ஈர்த்து வருகின்றது

அண்மைக் காலத்தில் செயற்படத் தொடங்கிய 'தமிழ் மக்களுக்கான மாற்று அரசியல் அணி' என்ற அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் என்ற பதவியில் அவர் செயற்பட்டு வருகிறார் என்பது அவரின் சமகால அரசியல் இயங்குநிலையின் திசையாகும் என்பதை விளங்குதல் சிரமமல்ல.

## நூலாக்க முயற்சிகள்

தமிழர் அரசியலில் மாற்றுச் சிந்தனைகள் (கட்டுரைகள்) இவிளைச்சல் (காவியம்), சமம் (உருவகக் கதைகள்), யாவும் கற்பனையல்ல (சிறுகதைகள்) ஆகிய நான்கு நூல்களை வெளியிட்டுள்ளார்.

## தமிழர் அரசியலில் மாற்றுச் சிந்தனைகள்

அரசியல் சார்ந்த தனது கொள்கைகளை தொடராக அச்சு இதழ்களில் எழுதி வந்த செங்கதிரோன் அவற்றைத் தொகுத்து தமிழர் அரசியலில் மாற்றுச் சிந்தனைகள் என்ற தலைப்பில் நூலாகத் தந்தார்.

இந்நூல் வெளியீட்டின்போது அரசியல் சித்தாந்தங்களைப் புறந்தள்ளி பலரும் கலந்து கொண்டமை அவரின் அரசியல் சித்தாந்த ஓர்மைக்குக் கிடைத்த வெற்றியாகும்.

## விளைச்சல் (காவியம்)

கவிஞர் ***நீலாவணன்*** பட்டமரம், வடமீன், வேளாண்மை ஆகிய மூன்று காவியங்களை எழுதியவர்.

அவர் தனது நடுத்தர வயதில் நம்மை விட்டுப் பிரிந்ததும் வாழ்ந்த காலத்தில் அவரது எந்தவொரு நூலும் வெளிவந்திருக்கவில்லை என்பதும் நமது கொடுப்பினை. இந்த அவதியிலே நீலாவணனின் வேளாண்மை முற்றுப் பெறாத காவியமாயிற்று.

வேளாண்மை முற்றுப்பெற்ற காவியமே என்று கருதிய ***வ.அ.இராசரத்தினம்*** தனது அச்சகத்தின் ஊடாக 1982இல் வேளாண்மை காவியத்தை வெளியிட்டார்.

இந்த நிலையில்தான் வேளாண்மையின் நீட்சியாக செங்கதிரோனின் விளைச்சல் காவியம் 2017இல் வெளிவந்தது.

வேளாண்மை காவியம்பற்றி மலையக எழுத்தாளர் ***மு.சிவலிங்கம்*** அவர்கள் தினக்குரல் பத்திரிகையில் 26.05.2019இல் எழுதிய கட்டுரையின் ஒரு பகுதி இது. அதனை வாசிப்பதன் ஊடாக விளைச்சல் காவியத்தின் கனதியை விளங்கிக் கொள்ளலாம்.

"இலக்கிய உலகில் தொடர் காவியமோ தொடர்கதையோ படைப்பாளனின் மறைவை யொட்டி ஸ்தம்பித்துவிட்டால் அந்தப் படைப்பை சக படைப்பாளன் ஒருவன் தன்னந் தனியாக சிரத்தை எடுத்து மிகத் துணிச்சலோடு அந்தப் படைப்பின் அதே வடிவத்தில் அந்தப் படைப்பின் நோக்கத்தை யூகித்து அந்தப் படைப்பாளனின் அதே எழுத்து நடையில் பூரணப்படுத்திவிடும் ஒரு கைங்கரியம் இன்றுவரை தமிழ் இலக்கிய உலகில் நடந்திருக்கவில்லை. அந்த வியப்பான இலக்கியப் பணியை கவிஞர் செங்கதிரோன் செய்து முடித்ததில் நமது இலக்கியத்தில் ஒரு புதிய கலாச்சாரத்தை உண்டு பண்ணியிருக்கிறார் என்றே சொல்லலாம்"

மேற்படி கூற்று வேளாண்மையின் தொடர்ச்சியாக செங்கதிரோனின் விளைச்சல் காவியம் வெளிவந்தமையின் முக்கியத்து வத்தை தெரியப்படுத்துகின்றது.

## சமம் (உருவகக் கதைகள்)

செங்கதிரோன் எழுதி வெளியிட்ட மற்று மொரு தொகுப்பு 'சமம்' என்ற உருவகக் கதைக் கோவையாகும். அது 2022இல் வெளியானது.

ஸ்ரீ லங்காவின் தமிழ் இலக்கியப் பரப்பில் மிகவும் அரிதாகவே உருவகக் கதைத் தொகுதிகள் நமது வாசிப்புக்குக் கிடைக்கும் அரிதானவொரு சூழ்நிலையில்தான் செங்கதிரோன் 'சமம்' என்ற உருவகக்கதைத் தொகுதியை நமக்குத் தந்தார்.

இத்தொகுதியில் முப்பது கதைகள் அடக்கம். பெரும்பாலான கதைகளினது உயிரிழையாக தனிமனித 'ஈகோ'வின் நிழல் தலைகாட்டி நிற்கிறது சூழலியலின் வனப்பு, இயற்கை நிகழ்வுகள் மற்றும் மாணவர்களுக்குப் பயன் விளைக்கும் வகையில் கதைகள் சடைத்துள்ளமையும் உருவகக் கதையின் பல்வேறு நுட்பங்களை தன்னகத்தே கொண்டு நிமிர்ந்துள்ளமையும் அர்த்தமுள்ள தலைப்புகளும் பொருத்தமான ஓவியங்களும் உருவகப் புனைவு மொழியும் பாலுக்குள் நெய்யாகப் பதுங்கியிருக்கும் போதனைகளும் சமம் தொகுப்பின் சிறப்புகளாகும். பின் நவீனத்துவத்தின் பார்வையில் உருவகக் கதைகளை அணுகும் புதிய எத்தனங்கள் மேற்கிளம்பி வரும் இன்றைய சூழ்நிலையில் சமம் தொகுதியின் வரவு நிகழ்ந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

## யாவும் கற்பனையல்ல

பல்வேறு சந்தர்ப்பங்களில் இவர் எழுதிய சிறுகதைகளைத் தொகுத்து 'யாவும் கற்பனையல்ல' என்ற தலைப்பில் தொகுதியொன்றை (2023) வெளியிட்டார். சிறுகதைப் பரப்பில் இத்தொகுதி பலரது கவனத்தையும் ஈர்த்தது. மனித வாழ்வின் அன்றாட செயற்பாடுகள் இவரது கதைகளில் முக்கிய இடத்தைப் பிடித்துக் கொண்டமைபற்றி எழுத்துலகப் 'பெரும் புள்ளிகள்'சிலாகித்துப் பேசியமை தொகுதியின் சிறப்பெனக் கொள்ளலாம்.

## புதினங்கள்

செங்கதிரோன் ஆக்க இலக்கியத் துறையின் பல்வேறு கூறுகளிலும் தனது ஊழியத்தினை வழங்கியவர். அவர் புதினங்களையும் எழுதினார். 'அரங்கம் நியூஸ்', 'அக்கினிக்குஞ்சு' போன்ற இணைய இதழ்களில் 'கனகர் கிராமம்' என்ற தொடர் புதினம் சுவைஞர்கள் பலரினதும் ஆவலைத் தூண்டி இன்றும் வெளிவந்து கொண்டிருக்கின்றது.

## பட்டங்கள் – விருதுகள் – பெருமைகள்

செங்கதிரோனின் இலக்கிய ஊழியத்தை அங்கீகரித்த தமிழிலக்கிய உலகம் பல்வேறு பட்டங்களையும் விருதுகளையும் பதவிகளையும் அவருக்கு வழங்கி மகிழ்ந்தது.

கொழும்பு தமிழ் சங்கம் 2012இல் நடாத்திய உலகத் தமிழ் இலக்கிய மகாநாட்டில் அரங்கத் தலைவராக மற்றும் பேச்சாளராகக் கலந்து கொண்டு பாராரட்டுச் சான்றிதழ் பெற்றமையும் அதே சங்கத்தினர் 2016 இல் ஏற்பாடு செய்த சிலப்பதிகார ஆய்வரங்கில் சிலப்பதிகாரச் செய்திகள் என்ற தலைப்பில் அளிக்கை செய்தமைக்காக சான்றிதழ் பெற்றமையும் அவுஸ்திரேலிய தமிழ் இலக்கிய கலைச்சங்கம் சிட்னி நகரில் ஏற்பாடு செய்த கலை இலக்கிய நிகழ்வில்(2017) விருது பெற்றமையும் குறிப் பிட்டுச் சொல்ல வேண்டியவை.

மன்னார் தமிழ் சங்கத்திடமிருந்து 'எழுத்துச் சுடர் விருது' (2013) மற்றும் மட்டக்களப்பு மண்முனை வடக்கு பிரதேச செயலக கலாசாரப் பேரவையிடமிருந்து(2017) 'தேனக கலைச் சுடர் விருது' என்பன இவரின் இலக்கியப் பங்களிப்புகளுக்கான சான்றுகள் ஆகும்.

மட்டக்களப்பு அகிலன் பவுண்டேசன் அனுசரணையில் புதுக்குடியிருப்பு கதிரவன் கலைக்கழகம் அவரின் தொடர்ச்சியான இலக்கியப் பணிகளுக்காகவும் அது தொடர்பி லான அர்ப்பணிப்புகளுக்காவும் 'கலைஞர் கௌரவம் -2014' இனை வழங்கி மகிழ்ச்சி கண்டது. இயக்குநர் இமயம் பத்மஶ்ரீ கே.பாரதிராஜா இவ்விருதினை வழங்கியமை விசேட பெருமை ஆகும்.

இலங்கை தமிழ் இலக்கிய நிறுவகம் மற்றும் இலண்டன் தமிழ் இலக்கிய நிறுவகம் என்பன இணைந்து இவரின் விளைச்சல் காவியத்தை கவனத்தில் எடுத்து சிறந்த குறுங் காவியத்துக்கான 'இரா.உதயணன் விருது -2018'ஐ இவருக்கு வழங்கி செங்கதிரோனை காவிய உலகுக்கு அடையாளம் காட்டியது.

இவர் பெற்ற விருதுகளும் பாராட்டுக் களும் இவருக்கான பெருமைகள் என்பதற்கும் அப்பால் இலக்கியப் பரப்பில் செங்கதிரோனின் ஓய்விலாப் பணியின் குறிகாட்டிகளும் ஆகும்.

## அமைப்புகளில்

நீர்ப்பாசனப் பயிலுனர் தமிழ்க் கலாமன்ற செயலாளராக இருந்தவர். கொழும்பு தமிழ் சங்கத்தில் நூலகச் செயலாளராகவும் துணைப் பொதுச் செயலாளராகவும் இலக்கியச் செயலாளராகவும் இருந்து கடமை செய்தவர்.

அம்பாரை மாவட்ட தமிழர் மகாசங்க மாவட்ட இணைப்பாளர். மட்டக்களப்பு சுவாமி விபுலாநந்தர் நூற்றாண்டு விழாச்சபை செயற்குழு உறுப்பினராகவும் புலவர்மணி ஏ.பெரியதம்பிப்பிள்ளை நினைவுப் பணிமன்ற தலைவராகவும் மட்டக்களப்பு தமிழ்த்தூது தனிநாயகம் அடிகள் நூற்றாண்டு விழாச்சபை செயற்குழு உறுப்பினராகவும் செயற்பட்டவர்.

மட்டக்களப்பு மாநகரசபை நூலகம், மட்டக்களப்பு பைன் ஆர்ட் கழகம் மற்றும் புரவலர் புத்தகப் பூங்கா போன்ற நிறுவனங்களில் ஆலோசகராக இயங்கியவர்.

மட்டக்களப்பு கண்ணகி இலக்கியக்கூடல் தலைவர் பதவியை அலங்கரிப்பவர்.

இலங்கை தேசிய கலை இலக்கிய பேரவையின் கிழக்குப் பிராந்திய செயலாளர், உலகத் தமிழ் கவிஞர் பேரவையின் இலங்கைக் கிளை இணைப்பாளர் போன்ற பதவிகளிலும் செயற்பட்டவர்.

மட்டக்களப்பு தமிழ் சங்க செயற்குழு உறுப்பினர், மட்டக்களப்பு மாவட்ட எழுத்தாளர் பேரவையின் உறுப்பினர் மற்றும் இலங்கை தமிழ் எழுத்தாளர் பேரவை செயற்குழு உறுப்பினர் என்று இலக்கிய அமைப்புகள் பலவற்றிலும் தனது பங்களிப்பினை வழங்கியவர். குடும்பப் பின்னணியும் மட்டக்களப்பின் வாழ்வு முறையும் இலக்கிய நேசமும் இனப்பற்றும் பெற்ற கல்வியும் உயர்ந்தோர் நட்பும் அரசியல் விருப்பும் இவரின் இன்றைய வாழ்வுக்குத் துணை நின்ற காரணிகள் எனலாம்.

13.12.2024அன்று எழுபத்திநான்கு வருடங் களைப் பூர்த்திசெய்து ***எழுபத்தைந்தாவது அக வையை அடைந்திருக்கும் செங்கதிரோன் த.கோபால கிருஸ்ணன்*** அவர்களுக்கு எமது வாழ்த்துகள்.

○○○

## முண்டாசுக் கவியும் முறுக்கு மீசையின் கம்பீரமும்...!



பாரதியின்  ஜனன தினத்தில்
எனக்குள்ளே ஓர் ஆசை உள்ளூர..
கம்பீர மீசையுடனான அவனது
அழகிய படமொன்றுடன்
அவனின் பாடலொன்றையும்
முக நூலில் பதிவுசெய்து
 பலரின்பார்வைக்கு விட்டிருந்தேன்.

நாட்கள் மூன்று நகர்ந்தன..
அந்த முண்டாசுக் கவியில்
மோகங் கொண்டோர் எத்தனைபேர் எனப்
பார்த்துவிடுவோமே என்றது மனம்.
பதிவை தட்டிப்பார்த்தேன்.
அந்த பாட்டால் உலகைப்
பாலிக்க வந்தவன் என
போற்றிப் புகழும் பாவலனை
எட்டிப் பார்த்து கருத்துத் தெரிவித்த
நபர்களோ ஓரிருவர்
பார்த்ததாக "லைக்" தெரிவித்தோர்
மூவர் மொத்தம் ஐவர் மட்டுமே
அழியா அவன் நினைவுகளின்
ஆச்சரியக் குறிகளாகி....!

அடுத்த சிலநாளில்
இளைய நடிகையொருத்தியின்
அழகிய படம் ஒன்றை தேடியெடுத்து
"இவளுக்கு வயது எத்தனையிருக்கும்?"
கேள்வியொன்றை விடுத்து
பதிவேற்றம் செய்து....
போட்ட அடுத்த கணத்திலேயே
நூற்றுக்கணக்கான கருத்துக்கள்
சட சடவென மாரியாய் பொழிய...
பாரதியின்
முறுக்கு மீசையைப் பார்த்தேன்
கம்பீரம் அங்கே காணாமற் போக
கீழ்நோக்கி தொங்கிக் கொண்டிருந்தது
சோகத்தில்..!

– ஷெல்லிதாசன்

## ஊழியில் தப்பிய மீன்

– வில்வரசன், (பேராதனை)

**என் இருத்தல் உனக்கு உவப்பாயில்லை**
**என் நகர்வு**
**உன் கோப நரம்புகளைத் தூண்டி விடுகிறது.**
**எங்கேனும் ஓரிடத்தில் நோயுற்று**
**முடங்கி விடவேண்டுமென்று கள்ளமாய்**
**பிரார்த்திக்கின்றாய்!**

**என் எல்லா வழிகளிலும்**
**பெரும் பாறைகளைத் தள்ளி விட ஆட்சேர்க்கிறாய்!**
**பிரிய எதிரியே!**
**என் நரம்புகள் பசியெனும் பட்டறையில்**
**அடிக்கப்பட்டவை.**
**என் தேகம் கொடும் வறுமையில் வார்க்கப்பட்டது.**

**எனக்கும் உனக்குமான போர்க்களம்**
**ஓநாய்க்கும் முயலுக்குமான ஓட்டப்பந்தயம்.**
**என்னைப்பிழிந்தெளித்து விட வேண்டுமென்று**
**கடலைப்பிழியும் உனக்குத் தெரியாது.**
**நான் ஊழியில் தப்பிய மீன்.**

## குறும்பா

– உடப்பூர் வீரசொக்கன்

### நேற்று

கணவரின் சொற்கேட்டு நடந்திடு வாய் ஏற்று
கால் பாலை அறிந்து மரமொன்றை நாற்று
சூழன்று வீசிய சூறாவளி தாக்குதல்
பல உயிர்களை காவு கொண்டது காற்று
மக்களாட்சி மலர்ந்தும் நல்லெண்ணம் பிறந்தது நேற்று

### உழுது

மரங்களின் வளர்ச்சிக்கும்  செழிப்புக்கும் உள்ளானது
விழுது
மறவாத படைப்புகள்  பிரகாசிக்க யதார்த்தமாக எழுது
எம் உயர்வுக்கு வழி வகுத்தது வலது என்றால்
வீழ்ச்சிக்கு இடது
பாடுபட்டு உழைத்து உயர்வு பெறுவோம் உழுது

### ஊர்

ஒருவரின். பிறப்பின். அடையாளம்  தனது ஊர்
பேராசை கொண்டன் யுத்தம் செய்தால்  போர்
மணாளர்களின் வாழ்வு சிறப்புடன் வாழ கை கொடுத்தது சீர்
மன சவாரி பயணத்துக்கு சௌகரிய வண்டி கார்




# எங்கே போனாலும்... திருமணமெனும் சடங்கு...

ந. பார்த்தீபன்
வவுனியா

இரவு பத்து மணிக்கு கைபேசி அலறுகிறது. வேலை முடிந்து வந்து சற்று இளைப்பாறுவமென நித்திரை கொள்ளப்போன சத்தியசீலன், இதைத் தொலைபேசி அல்ல தொல்லை பேசி என்று இன்று பலரும் சொல்வதை உணர்கிறார்.

தொடர்பை எடுப்பதா விடுவதா என அழைத்தவரைப் பார்க்கிறார்.வன்னியசிங்கம்... உடனே தொடர்புகொள்ள வேண்டுமென மனம் அங்கலாய்க்க ... "யாரப்பா இந்த நேரத்தில்...?" என்று கேட்டபடி வந்த மனைவியிடம் "வன்னி" என்கிறார்.

மனைவியும் கேட்கும் வண்ணம் லவுட்ஸ் பீக்கரில் விட்டு "சொல்லுங்கோ வன்னி..." என்கிறார்.

"உடனே ஒருக்கா வந்தீங்க என்றால் நல்லது..." என்று வன்னியசிங்கம் கூறுகிறார். குரலில் கலக்கம் தெரிய,

"வாருமப்பா... போயிட்டு வருவோம்" மனைவியிடம் சொல்லியபடி வெளிக்கிட ஆயத்தமாக மனைவியும் விரைவாக ஆயத்த மாகிறாள்.

இருபது கிலோமீற்றர் போக வேண்டும். கணவனைத் தனியே... இந்த நேரத்தில் விடுவதும் அவ்வளவு நல்லதல்ல என உணர் கிறாள். இனிப் போய்க் கணவன் திரும்பி வருவதும்... அதுவரை தான் தனியே இருந்து யோசித்துக் கொண்டு இருப்பதும்... கஷ்ட மென அவள் உணர்ந்ததும் ஒரு காரணம்.

காரில் போகும்போது என்ன காரணமா யிருக்குமென இருவரும் கதைத்துக் கொண்டு செல்கிறார்கள்.

வன்னியசிங்கத்தின் மனைவி மங்கை யர்க்கரசி தான் இப்ப அடிக்கடி சுகவீனம் என்று கூறிக்கொள்கிறாள். அவளுக்குத்தான் ஏதாவது... என்றே பெரும்பாலும் அவர்களுக் குள் சிந்தனை போகிறது.

வன்னியசிங்கத்தின் வீட்டுக்கு வந்ததும் "வா மச்சான் வா... எங்களாலை உங்களுக்கும் கரைச்சல்தான்..." என்று தளர்வுடன் கூறுகிறார்.

"சீச்சி... அப்படிச் சொல்லாதே... நாங் களும் ஒருக்கா வரவேணுமெண்டுதான் நினைச்சிருந்தம்... இந்த ஞாயிறு போவ மெண்டு கதைச்சம். அதுக்கிடையில நீ கூப் பிட்டு விட்டாய்" என்கிறார் சத்தியசீலன்.

வந்த விடயத்தை விட்டு ஏதேதோ பேசிக் கொண்டிருப்பதைப் பார்த்த டிலூசா "ரீ போட்டுக் கொண்டு வாறன் "என்று சொல்லிக் கொண்டே எழுகிறாள்.

"வேண்டாம் டிலு... இப்பதான் இவர் வந்து சாப்பிட்டம். இப்ப வேண்டாம்" என்றாள் சத்தியசீலனின் மனைவி கோமளா.

வன்னியசிங்கம் மகள் டிலூசாவிடம் "நீயே சொல்லு அங்கிளிடமும் அன்ரியிடமும்..." என்று கூறுகிறார்.

டிலூசா மௌனமாக நிற்கிறாள்.

ஓ... டிலூசா தொடர்பான விடயந்தான் என தெரிந்து கொண்டதில் கொஞ்சம் ஆறுதலை உணர்கிறார்கள் சத்தியசீலனும் கோமளாவும்...

"எங்கே அம்மாவைக் காணேல்லை?" என்று கோமளா கேட்க" வாறன், வாறன்... என்று சொல்லியபடி மங்கை அவர்கள் இருந்த ஹோலுக்கு வருகிறாள்.

"இப்ப எப்பிடி இருக்கிறது...?" கோமளா.

மங்கை "என்ன சொல்றது... சுகர் கூடி,

சோர்வாகத்தான் இருக்கு...போய்ச் சேரவும் நாள் வராதாம்...”

“ஏன் அப்பிடிச் சொல்றீங்க... கிளினிக் போய் வாறனீங்கதானே...?”

“ஓ... என்ன கிளினிக், ரெண்டு மாசத்துக்கு ஒருக்கா... உள்ள குளிசை யெல்லாம் அள்ளித் தருவினமெண்டு..” சலித்துக் கொள்கிறாள்.

இந்த வழமையான கதையிலிருந்து டிலுசா என்ன சொல்லப் போகிறாள் என சத்தியசீலன் அவளைப் பார்க்கிறார்.



டிலுசாவைச் சொல்லச் சொல்லி வன்னியசிங்கமும் தந்தை சொல்லட்டுமென்று டிலுசாவும் நினைத்துக் கொண்டிருக்க... மங்கையர்க்கரசி விம்மி விம்மி அழத் தொடங்குகிறாள்.

“ஏன் மங்கை இப்ப என்ன நடந்தது ஏன் அழுகிறீங்க?”

“என்ன நடந்ததோ... இவள் எங்களுக்கு கொஞ்சமேனும் பொருத்தமே இல்லாத ஒரு பொடியனைக் கலியாணம் கட்டப் போறாளாம்...” தொடர்ந்து அழுகிறாள்.

“எனக்குப் பொருத்தமாக இருக்கு...” டிலுசாவின் பதிலளிப்பில் வேகமும் கோபமும் கொப்பளிக்கிறது.

“ஓ... நீ இப்ப பெரிய படிப்பெல்லாம் படிச்சு கை நிறைய சம்பாதிக்கிறாய்தானே... அப்பிடித்தான் கதைப்பாய். வன்னியசிங்கமும் தன் பங்கிற்கு கோபத்தை காட்டி...

“அவளுக்கு இப்ப எங்கடை தலைகுனிவு பெரிசாத் தெரியேல்லை...நாங்க மருந்தைப் கிருந்தைக் குடிச்சு செத்துப் போறதைத் தவிர வேறை வழியில்லை.” மூச்சு வாங்க மங்கையும் தன் பங்கிற்கு...

முன்னரே என்ன விடயமெனத் தெரிந்து கொண்டு வந்திருந்தால் நல்லதாய் இருந் திருக்குமென கோமளா, சத்தியசீலன் நினைக் கிறார்கள்.

“அங்கிள், அன்ரி இப்ப அஞ்சு வருசமாக எனக்கு கல்யாணம் செய்து வைக்கிறமெண்டு இருபத்தைந்து வயசில தொடங்கியிட்டினம். நான் ஏதாவது மறுப்புச் சொன்னனானோ கேளுங்கோ...” டிலுசாவுக்கு இப்போது அழுகை வருகிறது.

வன்னியசிங்கம் “நாங்க என்ன செய்யிறது... எவ்வளவு அலைச்சல்...? எத்தனை முயற்சி...?”

“ஓ... சாதகம் பொருந்தினா... சாதி பொருந்தாது. சாதி பொருந்தினா... சீதனம் போதாது. பிறகு படிப்புக் காணாது...இப்பிடியே ரெண்டு பேரும் இழு இழு எண்டு இழுத் தாங்க... நானும் சரி, சரி ... ஏதோ ரெண்டும் கஷ்டப்படுதுகள் எண்டு என்ரை படிப்பில கவனம் செலுத்திக் கொண்டு இருந்திட்டன்.

பெற்றோரை ஒரு கணம் பார்த்தவள், “இப்ப என்னுடைய வேக் பண்ணிற ஒருவரோடு பழகும் போது நல்லவனாய், எனக்குப் பிடித்தவனாய் இருக்க அவனைச் செய்யலாமெனச் சொல்றன்.”

மங்கையர்க்கரசி “அவன் எங்களுக்கு கொஞ்சமேனும் பொருத்தமே இல்லாத பொடி யன்... நாளைக்கு நாங்க ஒரு சபை சந்தியில் நிக்கிறேல்லையே...”

“அங்கிள் இவையின்ரை காலம் முடிஞ்சுது. இவைக்காக நான் இருக்கிறதெண்டா... இருக்கிறன். எனக்கும் இப்ப முப்பதாகிறது. எனக்கினி கலியாணம் வேண்டாம். இவை இருக்கும் வரை இருந்திட்டு போறன்.இனியும் இவை எல்லாப் பொருத்தமும் பாத்து... இன்னுமொரு அஞ்சு வருசத்துக்குப் பிறகு...“கோபத்துடன்” சொறி அன்ரி, அங்கிள்...” என்று சொல்லியபடி தன் அறைக்குச் சென்று விடுகிறாள் டிலுசா.

நீ என்ன செல்கிறாய் சத்தி...?

“அவள் எடுத்த முடிவுதான் சரி. வாழப் போறது அவள். அவளொண்டும் சின்னப் பிள்ளையில்லை. நீங்க இண்டைக்கோ நாளைக்கோ... குலம், கோத்திரம் எல்லாம் பாத்த காலம் மலையேறியிட்டுது. இன்னும் உதுகளை தூக்கி பிடிச்சு பெரிசுபடுத்திக் கொண்டிருந்து பிள்ளையளின்ரை வாழ்க் கையை பயனில்லாமல் செய்யாதேங்கோ.

○○○



# திருக்கரைசைப் புராணம் சித்திரிக்கும் திருக்கரைசையம்பதி: ஓர் பண்பாட்டியல் ஆய்வு


தேவராசா கஜீபன்

முதுதத்துவமாணிப்பட்ட ஆய்வாளர்
பேராதனைப் பல்கலைக்கழகம், இலங்கை.


பண்பாட்டியல் கூறுகளுள் சமயம் இன்றியமையாத இடம்வகிப்பதோடு தமிழர் பண்பாட்டின் மிக முக்கியமான பண்பாட்டுக் கருவூலமாகவும் விளங்குகின்றது. சமயம் கட்டிக்காத்த தமிழ்ப் பண்பாட்டின் முக்கிய ஆதாரங்களாகவும், எச்சங்களாகவும் நிலை நிற்பவை ஆலயங்கள் ஆகும். தமிழர்களது பூர்வீக வரலாற்றையும் அவர்தம் வாழ்வியலையும் ஆலயங்களைக் கொண்டு கட்டமைக்க முடியும். ஆலயங்கள் ஒரு காலகட்டத்தின் அரசியலை, சமூகத்தை, மக்கள் வாழ்வியலை, பண்பாட்டம்சங்களை பேசவல்லன. புராதனகாலந்தொட்டு பேணிப் பாதுகாக்கப்பட்ட ஆலயங்களும் ஆய்வுகளின் மூலம் வெளிக் கொண்டுவரப்பட்ட ஆலய வரலாறுகளும் தமிழர் பண்பாட்டை உலகறியச் செய்தன. இருப்பினும் இற்றைவரை அடையாளங் காணப்படாத பல ஆலயங்கள் பண்பாட்டின் எச்சங்களாக இருந்துவருகின்றன. இவை பற்றிய செய்திகள் வெளிக்கொண்டு வரப்படும்போது புதிய வரலாற்றுத் தகவல்கள் கிடைக்கப்பெறுவதுடன், தமிழர் பண்பாட்டிற்கு வலுச்சேர்ப்பனவாயும் அவை அமையக்கூடும். அதனடிப்படையில் கிழக்கிலங்கையின் திருகோணமலை மாவட்டத்திற்குட்பட்ட **மூதூர்** பிரதேசத்தின் ***கங்குவேலி*** கிராமத்தில் மகாவலி கங்கைக்கரையில் அமைந்திருந்ததாகக் கருதப்படும் ***திருக்கரைசையம்பதி*** எனும் ஆலயத்தை முதன்மையாக கொண்டு இவ்வாய்வுக் கட்டுரை அமையப்பெறுகின்றது.

***இந்துக் கலைக்களஞ்சியம்*** (2ஆம் பதிப்பு, தொகுதி-1) நூலில் ***சி.பத்மநாதன்*** திருக்கரைசையம்பதி அமைந்துள்ள பிரதேசம் திருகோணமலையில் அமைந்துள்ள மூதூர் பிரதேசத்திலுள்ள கங்குவேலி எனக்கூறுவதோடு திருக்கரைசைப்புராணம் இக்கோயில் மீது பாடப்பட்டதென்பதையும் திருக்கரைரையம்பதி அமையப்பெற்றிருந்த இடத்தில் கிடைக்கப்பெற்ற தொல்பொருட் சின்னங்களைக் கொண்டு அவ்விடத்தில் சிறிய கோவில் ஒன்று கட்டி மக்கள் வழிபடுகின்றமை பற்றியும் குறிப்பிட்டுள்ளார். மேலும் அவர் **இலங்கைத் தமிழர் வரலாறு** என்ற நூலில் “அம்பாறை, திருகோணமலை மாவட்டங்களில் தமிழரின் புராதன காலப் பண்பாட்டுச் சின்னங்கள்” என்ற கட்டுரையில் “திருக்கரைசையில் நாகர் அமைத்த கோயில்” என்ற சிறுதலைப்பின்கீழ் ***அகத்தியஸ்தாபனத்தில்*** ஆய்வின்மூலம் பெறப்பட்ட தொல் பொருட்சான்றுகள் தொடர்பான குறிப்புக்களைத் தந்திருக்கின்றார். ***இலங்கைத் தமிழ்ச் சாசனங்கள்*** என்ற நூலில் கங்குவேலிக் கல்வெட்டுப்பற்றிக் குறிப்பிட்டு திருகோணமலை **கொட்டியாரப் பற்று** என்னும் பிரிவிலுள்ள ஊர்களில் ஒன்று கங்குவேலி என்றும் அங்கு வயல்களின் நடுவில் ஒரு சிவன் கோயில் அமைந்துள்ளதாகவும் அதனைக் ***கோணைநாதர் கோயில்*** என்று குறிப்பிடுவர் எனவும் கூறுகின்றார். இக் கோயிலுக்கு நிவந்தம் (மானியம்) வழங்கியமை பற்றிய செய்தி அச்சாசனத்தில் காணப்படுவதாக ஆசிரியர் கூறுகின்றமை குறிப்பிடத்தக்கது. திருக்கரைசைப்புராணம் மூன்றாவது பதிப்பின் பதிப்புரையில் ***க.இரகுபரன்*** திருக்கரைசையம்பதி ஆலயம்மீது திருக்கரைசைபுராணம் பாடப்பட்டுள்ளது எனக் கூறுவதோடு அவ்வாலயம் தொடர்பான அறிமுகக் குறிப்புக்கள் சிலவற்றை வழங்கியிருக்கிறார். ***திருக்கோணாசல வைபவம்*** மூன்றாம் பதிப்பில்

**வே.அகிலேசப்பிள்ளை** "அகத்திய முனிவரின் சரித்திரம்" என்ற தலைப்பின்கீழ் அகத்தியர் ஈழத்திற்கு வந்தமை பற்றியும், அகத்தியரால் திருக்கரைசையம்பதி நிறுவப்பட்டமை பற்றியும் குறிப்பிடுகின்றார். திருக்கரைசையம்பதி பற்றிய செய்திகள் வாய்மொழி மரபாக வழங்கி வருகின்ற நிலையில், ஒருசில அறிஞர் களால் தேவைக்கேற்ப சில குறிப்புகள் எழுதப்பட்டுள்ள சூழலில் இக்கோவில் பற்றிக் கிடைத்திருக்கும் அதன் தல புராணம் குறிப்பிடும் விடயங்களைக் கவனத்திற் கொண்டு தற்போதுவரை கிடைத்துள்ள தொல்லியல் தரவுகளின் துணையோடு திருக் கரைசையம்பதியின் இட அமைவு, மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகியவை குறித்து இக் கட்டுரை ஆராய முனைகின்றது.

ஈழத்தமிழர் பண்பாட்டு வரலாற்றில் கிழக்கிலங்கை தனக்கென தனியிடமொன்றினை கொண்டிருக்கிறது. புராதன காலம் தொட்டு இடம்பெற்று வந்த வழிபாட்டு மரபுகளின் சங்கமமாக கிழக்கிலங்கை திகழ்கின்றது. கண்ணகி வழிபாட்டு மரபு, முருக வழிபாட்டு மரபு போன்றன ஈழத்தின் கீழைத்திசை நோக்கிய ஒரு தொடர் பண்பாட்டு மரபைக் கொண்டிருக்கின்றமையை ஆதாரங்கள் மூலம் அறியமுடிகின்றது. தல புராணங்கள் பாடப் பட்ட தலங்களுள் திருக்கரைசையும், திருக்கோணேஸ்வரமும் கிழக்கிலங்கையில் குறிப்பாக திருகோணமலையில் அமைந் திருக்கின்றமை திருகோணமலையின் வர லாற்றுக்கால முக்கியத்துவத்தையும் கிழக் கிலங்கைச் சமயப் பண்பாட்டின் உயர் நிலை யையும் காட்டுகின்றது. இராவணனுடன் தொடர்புடைய புராண வரலாறுகளும், திருக்கோணேஸ்வரர் கோயில் புராண வரலாறுகளும் கிழக்கிலங்கைச் சமயப் பண்பாட்டின் புராதன தன்மையினையும், சிறப்பினையும் எடுத்துரைக்கின்றன. சோழ மன்னர்களும் சிற்றரசர்களும் கிழக்கிலங்கை ஆலயங்களுடன் கொண்டிருந்த உறவுகளும் அவர்களால் மேற்கொள்ளப்பட்ட திருப் பணிகள் பற்றிய செய்திகளும் தமிழர் பண்பாட்டில் கிழக்கிலங்கை பெறும் முக் கியத்துவத்தை உணர்த்துகின்றன. இத் தகைய பண்பாட்டுச் சிறப்புமிக்க கிழக் கிலங்கைப் பின்புலத்திற்குள்ளேயே திருக் கரைசையம்பதியின் வரலாறும் அமைவு பெறுகின்றது. தமிழர் பண்பாட்டு வரலாற்றில் தொன்மை வாய்ந்த பல ஆலயங்கள் காணப்படுகின்ற போதிலும் தலபுராணம் பாடப்பட்ட தலங்கள் புனிதம் நிறைந்த தலங் களாக கருதப்படுவது மரபாகும். ***ஈழத்தில் திருக்கோணேச்சரம், திருக்கேதீச்சரம், திருக்கரைசை யம்பதி என்பன தலபுராணம் பாடப்பட்ட தொன்மை வாய்ந்த திருத்தலங்களாகும்***.

அகஸ்தியஸ்தாபனம் என வழங்கப்படும் திருக்கரைசையம்பதி மீது பாடப்பட்ட தல புராணம் "திருக்கரைசைப்புராணம்" என வழங்கப்படுகிறது. பொதுவாக தலபுராணங்கள் மூர்த்தி, தல, தீர்த்தச்சிறப்பு என்பன பற்றி கூறுவனவாய் அமைந்திருக்கும். மூர்த்தி, தலம், தீர்த்தம் பற்றிக் கூறுமிடத்து புனைவுகளை ஏற்றிக்கூறுகின்ற மரபும் தல புராணங்களில் காணப்படுகின்றது. இதனால் தலங்கள் பற்றிய வரலாற்றை புரிந்துகொள்வதற்கான ஆதாரங்களுள் ஒன்றாக தலபுராணங்களைக் கொள்வதில் வரலாற்று ஆய்வாளர்கள் பின் நிற்பர். எனினும் முற்று முழுதாக அவற்றைப் புறந்தள்ளி விடமுடியாது.

திருக்கரைசையம்பதியின் பண்பாட்டு மீட்டுருவாக்கத்தில் திருக்கரைசைபுராணத்தின் வகிபங்கு, அது கூறும் புராணக் கதைமரபு, மூர்த்தி, தலம், தீர்த்தம் என்பவற்றின் அடிப் படையில் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் காணப்படுகின்றது.

கி.பி 10-14ம் நூற்றாண்டுகாலத்திலேயே ஈழத்தில் குறிப்பிட்டுக் கூறக்கூடிய தமிழ் இலக்கியங்கள் தோற்றம் பெறத்தொடங்கின. யாழ்ப்பாண அரசர் காலத்தில் ஈழத்தில் வைத்தியம், சோதிடம், வரலாறு என்பவற்றை மையப்படுத்திய இலக்கியங்கள் தோற்றம் பெற்றன. அந்த வரிசையில் புராணங்கள் என்னும் இலக்கிய வடிவமும் ஈழத்திலே சிறப்புற்ற ஓர் இலக்கியவடிவமாக அக்காலத்திலே காணப்பட்டது. திருக்கரைசைப்புராணம் எக் காலத்தில் தோன்றியது என இன்றுவரை தெளிவாக அறியப்படவில்லை. எனினும் திருக்கரைசைப்புராணத்தின் குரு வணக்கச் செய்யுள் ***உமாபதிசிவாச்சாரியாரின் சீடருள் ஒரு வரே இந்நூலை எழுதியிருக்கலாம்*** என எண்ண இடம் தருகின்றது. "அண்டர்பிரா னடமாடுந் தில்லைமணி மன்றதனி லகலா தென்றும்.." என்ற செய்யுளில் வரும் ஈசான சிவன் என்பது உமாபதி சிவாச்சாரியாரையே குறிக்

கின்றது என திருக்கரைசைப்புராணத்திற்கு உரை எழுதிய சுன்னாகம் **அ. குமாரசாமிப்புலவர்** கூறுவர். உமாபதி சிவாச்சாரியார் கி.பி 14ஆம் நூற்றாண்டின் இறுதியில் வாழ்ந்தவர் என அறியப்படுகின்றது. எனின் திருக் கரைசைப்புராணமும் அக்காலப்பகுதியை ஒட் டியே தோன்றியிருக்க வேண்டும் எனக் கருதலாம். திருக்கரைசைப்புராணத்தின் ஆசிரியர் உமாபதி சிவாச்சாரியாரின் சீடருள் ஒருவர் என சில ஆய்வாளர்கள் கருதினாலும் ஆசிரியரின் பெயர் இன்னவென்று யாரும் கூறவில்லை. எனினும் பேராசிரியர் சி.பத்மநாதன் திருக் கரைசைப்புராணத்தை எழுதியவர் ***திருக்கரைசைப் புலவர்*** என்பார். இது பழந்தமிழ் பாடல்கள் சிலவற்றிற்கு அதனைப்பாடிய புலவர் பெயர் அறியாதவிடத்து பாடலின் சிறந்த வரியினைக் கொண்டு ஆசிரியரின் பெயரைக் குறிப்பதை ஒத்தது.

திருக்கரைசைப்புராணம் விநாயகர், சிவன், உமாதேவி, கந்தசுவாமி ஆகிய தெய்வங் களுக்கு முதலில் வணக்கம் தெரிவிப்ப தோடு, தொடர்ந்து சம்பந்தர், சுந்தரர், அப்பர், மாணிக்கவாசகர் மற்றும் ஏனைய தொண்டர்களிற்கான துதிப் பாடல்களைக் கொண்டதாக அமையப்பெற்றுள்ளது. இவற் றைத் தொடர்ந்து குருவணக்கம், புராண வரலாறு, அவையடக்கம், ஆகியன இடம் பெறுகின்றன. இவையனைத்தும் 15 செய் யுள்களில் அமையப்பெற்றுள்ளன. அவை யடக்கத்தைத் தொடர்ந்து

இலங்கைச்சருக்கம் (39 பாடல்கள்),
கங்கைச்சருக்கம் (53 பாடல்கள்),
தாபனச்சருக்கம் (17 பாடல்கள்),
பூசைச்சருக்கம் (46 பாடல்கள்),

என்பன அமையப்பெற்றுள்ளன. எல்லா மாக ***170 பாடல்கள்*** காணப்படுகின்றன. இப் புராணத்தின் இறுதிச்செய்யுள் நூற் பயனாக அமைகின்றது.

திருக்கரைசையம்பதி அகத்தியரால் ஸ்தாபிக்கப்பட்டது என்பது புராணம் கூறும் கதை மரபு. அகத்தியஸ்தாபனம் எனும் இதனுடைய மறுநாமம் இதற்கு வலுச் சேர்க்கின்றது. வடமொழி கூறும் சிவன் பார்வதி திருமணம் பற்றிய கதையோடு இப் புராணம் ஆரம்பிக்கின்றது. அக்கதை மரபு பின்வருமாறு அமைகின்றது.

சிவன்–பார்வதி திருமணத்தைக் காண தேவர்கள், சித்தர்கள் இயக்கர்கள், கந்தர்வர்கள் போன்றோர் திருக்கைலாய மலையை அடைந் தார்கள். இதனால் வட திசை தாழ்வடைய ஆரம் பித்தது. இந்நிலையை சரிப்படுத்த எண்ணிய சிவன் அகத்தியரை அனுகி "நீர் சென்று பொதிகை மலையில் இருந்தால் இன்னும் பல வித்தியாதாரரும் பல தேவர்களும் வந்து கூடினாலும் பூமி ஏற்ற தாழ்வின்றி சமமாய் இருக்கும்" என்றார். இறைவனது திருமணக் கோலத்தைக் காணாது செல்ல நேரிடுகிறதே என அகத்தியர் மனக்கலக்கம் அடைய இறைவன் தன் "திருமணக்கோலத்தைக் காண அருள் செய்வேன்" எனக்கூறியதால் அகத்தியர் மனம் மகிழ்ந்து பொதிகை மலை நோக்கி விரைந்தார்.

இந்தியாவில் பல தலங்களையும் தரிசித்த அகத்தியர் ஈழத்தின் திருக்கோணேஸ்வரப் பதியில் அமர்ந்து அருள்பாலிக்கும் இறைவனின் மகிமை யறிந்து அவரைத் தரிசிக்க ஈழ நாட்டிற்கு வருகை தந்தார். திருக்கோணேச்சரத்தில் வீற்றிருந்த கோணைநாதரையும் மாதுமையம்மையையும் அகத்தியர் வணங்கி வரலானார். அச்சமயத்தில் லிங்கம் ஒன்றை பிரதிஸ்டை செய்து வழிபாடியற்ற விரும்பிய அகத்தியர் அதற்குப் பொருத்தமான இடம் ஒன்றைத் தேடினார். இதற்குச் சிவபெருமானே வழி கூறினார் என்பதை "குளிர்புனற் கங்கையில் குணக்கி பொன்றிய கரசைப் பதியுளததுவே..." என திருக்கரைசை புராணம் குறிப்பிடுகின்றது. அதாவது குளிர்ந்த நீரினையுடைய மகாவலி கங்கையின் கீழைக்கரையிற் பல சிறப்பு மிக்க கரசைப்பதியொன்று உள்ளது. அதுவே எமக்கேற்ற உத்தம தலம் என சிவபெருமான் கூறினார்.

இதற்கமைய அகத்திய முனிவர் சிற்ப சாஸ் திரங்களை முற்றாக கற்றுணர்ந்த அறிஞர்களை வரவழைத்து சுபமுகூர்த்த வேளையில் அவ் வாலயத்தை அமைக்கத் தொடங்கினார். இவ் வாலயம் கருங்கல்லினால் அத்திபாரம் இடப்பட்டு கர்ப்பக்கிரகம், இருமண்டபங்கள், தூபி என்பன உள்ளடங்கலாக செங்கல்லினால் அமைக்கப்பட்டு ஆலயத்தைச் சுற்றி நான்கு புறமும் மதில்கள் கட்டப்பட்டிருந்தன என்ற செய்தியை "கருங்கல்லினத்தி பாரஞ் செய்தறைவித்து மறைபொருளாளுறை கர்ப்ப மனையொடிரு.." என்ற பாடல் வெளிப்படுத்துகின்றது.

திருக்கரைசைநாதரின் மூர்த்தி இலட் சணங்களை புராணங்களிலிருந்தும் தத்து வங்களிலிருந்தும் ஆசிரியர் எடுத்துக் கொண் டுள்ளார். வேதத்திற்கு முதல்வரானவர், ஆதியாயும் அந்தமாயும் நடுவாயும் உள் ளவர், எப்பொருளுக்கும் மூப்பாய் உள் ளவர், தேவர்களுக்குக்கூட இதுவரை இவர் இத்தன்மையரென்று உணராத சங்கார கர்த்தாவானவர், நாயகரத்தினமாயுள்ளவர், உமையாளைப் பிரியாதவர், சந்திரனைச் சூடியவர், தெற்குத்திசையில் அழகிய கடலால் சூழப்பட்ட கோணமலையில் வீற்றிருக்கும் தேவர் என்கிறார் ஆசிரியர். இதனை “ஆரனே முதலே... நக்கனே நாயக மணியே...” என்ற செய்யுள் மூலம் அறிய முடிகிறது. இவ் வாறாக சிவனுடன் தொடர்புடைய புராண இதிகாசக் கதைகளையும் திருவிளையாடற் சம்பவங்களையும், தத்துவக் கருத்துக்களையும் உள்ளடக்கி மூர்த்திச் சிறப்பை திருக்கரைசைப் புராணம் பேசுகிறது.

தலம் குறித்து நோக்குகின்றபோது திருக் கரைசையம்பதியை மருத நிலமாகச் சுட்டிக் காட்டுகின்ற ஆசிரியர் இங்கு மாதத்தில் மூன்று பருவகால மழை பொழிவதாகக் குறிப்பிடுகிறார். மருத நிலத்திலே வயற் செய்கைக்காரர்கள் நெல் விளைவித்தல், கதிர்கள் கொய்தல், கதிர்களைப் போரிடுதல், அதனை மிதித்தல் என அறுவடை செய்தல் போன்ற நிகழ்வுகளைக் பதிவு செய்கின்றார். இதனை “கிளர் தரு முலாகிற்... மனுதின மெழிவறா வழக்கால்...” என்ற செய்யுள் மூலம் அறியமுடிகிறது.

திருக்கரைசையம்பதியின்தீர்த்தமாக மகாவலி கங்கை அமையப் பெற்றுள்ளது. திருக்கரைசைப் புராணம் தீர்த்தச் சிறப்புப் பற்றிக் கூறுமிடத்து தீர்த்தமாடலின் சிறப்பு, தீர்த்தமாடுவதால் ஏற்படும் பயன்கள், தீர்த்தமாடற்குரிய தினங்கள் என்பன பற்றி விபரிக்கின்றது. மகாவலி தீர்த்தத்தை நான்கு வேதங்களை ஓதும் பிராமணர்களைக் கொண்டு சுத்த சங்கற்பம் செய்வித்து பொன், முத்து என்பவற்றோடு பூக்களால் அஞ்சலி செய்து ஸ்நானம் செய்தால் புண்ணிய நதிகள் ஏழிலும் ஸ்நானம் செய்தமைக்கான புண்ணியம் கிடைக்கும் என்பதனை “பொன்னுநன் மலரு... படிந்தவப் புண்ணியம் பயக்கும்...” என்ற செய்யுள் மூலம் வெளிப்படுத்துகின்றது.

கள ஆய்வின் மூலம் பெறப்பட்ட தகவல்களின் அடிப்படையில் திருக்கரைசையம் பதியின் இட அமைவை நோக்கின்ற போது திருக்கரைசைப் புராணம் கூறும் இட அமைவையே அடையாளங் காண முடி கின்றது. வயல்வெளிப் பிரதேசத்தில் மகா வலிகங்கையை அண்மித்த பகுதியில் திருக் கரைசையம்பதி அமைவு பெற்றுள்ளது. மகாவலிகங்கையே தற்காலத்திலும் தீர்த்த மாடலுக்கான புனித நீராகப் பயன்படுத் தப்படுகின்றது.

இங்கு கிடைக்கப் பெற்ற தொல்பொருட் சின்னங்களில் பெருவாரியாக ***“மணிணாகன்”*** என்ற சொற்பதம் காணப்படுவதனை சி.பத்ம நாதன் அடையாளப்படுத்துகின்றார். இதன் மூலம் இவ் ஆலயத்தின் மீதான நாகர்களுடைய செல்வாக்கைப் புரிந்துகொள்ள முடிகின்றது. ஆரம்பத்தில் இது நாக வழிபாட்டு தலமாக காணப்பட்டிருக்கலாம் எனவும், நாகர்கள் சைவ சமயத்தை கைக்கொள்ள விரும்பியதன் விளைவாக காலப்போக்கில் இவ்விடத்தில் சைவ சமய வழிபாட்டு சின்னங்கள் நிலை பெற்றிருக்கலாம் எனவும் கருதமுடிகின்றது.

திருக்கரைசைப்புராணம் திருக்கரைசையம் பதியின் அமைப்பு பற்றி கூறும் போது கருவறையும் அதற்கு முன் இரு மண்ட பங்களும் காணப்பட்டதாகவும் அவை செங் கற்களால் அமைக்கப்பட்டிருந்தன எனவும் கூறுகின்றது. இவ் ஆலய அமைவிடத்தில் பெருமளவிலான நீண்ட கற்தூண்கள் காணப் படுகின்றன. ஆரம்பகாலத்தில் வெறுமனே செங்கற்களாலேயே ஆலயம் அமைக்கப் பட்டு பின்னாட்களில் பல்வேறு ஆளுகை களுக்கு உட்படும் போதும் புறச் சூழல் களின் தாக்கத்திற்கு உட்படும் போதும் சிற்சில மாற்றங்களை உள்வாங்கி ஆலயம் புனரமைப்புக்களுக்கு உட்பட்டிருப்பதை கிடைக்கப் பெற்றுள்ள தொல்பொருட் சின்னங்களைக் கொண்டு உய்த்துணர முடிகின்றது. தூண்கள் மட்டுமே கருங் கல்லினால் ஆனவையாக அமையப் பெற் றிருக்க சுவர்ப்பகுதி செங்கற்களினால் கட்டப்பட்டிருக்கின்றது. சுவர்ப் பகுதிக்கு கருங்கற்களைப் பயன்படுத்தியமைக்கான எவ்விதச் சான்றுகளும் இல்லை. அரை வட்டமான இரண்டு வாசற்படிக்கட்டுக்கள் கிடைக்கப் பெற்றுள்ளன. இவை இரண்டு

மண்டபங்கள் இருந்திருப்பதற்கான சாத்தியக் கூறைக் காட்டுகின்றன. எனவே இவ் அரைவட்டக் கற்கள் இரண்டும், இரண்டு மண்டபங்களுக்கு உரியனவாகவோ அல்லது அவற்றில் சிறியது கருவறைக்கானதாகவும் பெரியது மண்டபத்திற்கானதாகவும் அமைந்து காணப்பட்டிருக்கலாம் என்ற முடிவிற்கு வரமுடிகின்றது. இனங்காணப்பட்ட ஆய்வுப் பிரச்சினையின் அடிப்படையில் திருக்கரைசைப் புராணம், கள ஆய்வின்மூலம் பெறப்பட்ட தரவுகள் ஆகியவற்றை ஆய்வுக்குட்படுத்தும் போது திருக்கரைசைப் புராணம் குறிப்பிடும் திருக்கரைசையம்பதியின் மூர்த்தி, தலம், தீர்த்தம் குறித்த கருத்தமைவுகள் தற்காலத்தில் திருக்கரைசையம்பதியாக அடையாளப் படுத்தப்படும் ஆலயத்துடன் பொருந்திப் போகின்றமையை அவதானிக்கமுடிகின்றது.

**உசாத்துணை நூற்பட்டியல்:**


**அகிலேசப்பிள்ளை, வே.** (2000) திருக்கோணாசல வைபவம். கொழும்பு : தத்துவ ஞானத் தவச்சாலைப் பிரசுரம்.

**இரகுபரன், க.** (2009) (மூன்றாம் பதிப்பு) திருக்கரைசைப் புராணம். கொழும்பு : இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்களம்.

**பத்மநாதன்,சி.** (2005) (இரண்டாம் பதிப்பு) இந்துக்கலைக் களஞ்சியம். இலங்கை : இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்களம். இந்துசமய அலுவல்கள் அமைச்சு.

**பத்மநாதன்,சி.** (2013) இலங்கைத் தமிழ்ச் சாசனங்கள் (1300–1900) கொழும்பு : இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்களம்.

**பத்மநாதன்,சி.** (2016) இலங்கைத் தமிழர் வரலாறு. கொழும்பு : இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்களம்.

**பூலோகசிங்கம்,பொ.** (2017) தமிழ் ஆய்வுச்சிந்தனைகள். கொழும்பு–சென்னை : குமரன் புத்தக இல்லம்.


❍❍❍

# செல்லாத காசு நாங்கள்

**கவிஞர் அகளங்கன்**

மாலை தொடு வானத்திலே
மனம் மயக்கும் கானத்திலே
வேலை தொடும் மதியினொளி
விரிசோதி முத் தெறியும்
சோலை தனைச் சூடிக்கொண்டு
சொகுசாக நடந்து கொண்டு
வாலைப் பருவத்து எழில்
வசந்தப் பெண்ணாள் நடைபயில்வாள்

செந்தமிழில் பாடிக் கொண்டு
தென்திசையின் தென்றல் வந்து
முன்றலிலே மலரைச் சிந்தி
மோகனமாய்க் கோலம் போடும்
அன்றலர்ந்த தா மரையில்
அருணனொளி தூ விவிட
சென்றலைந்த முத்துக் களாய்
பனித்துளிகள் ஜாலம் பாடும்.

மலை விழும் அருவியிலே
மதி தவழ் நிலவினிலே
சிலை தரும் கலைகளிலே
சிந்தையிலே மகிழ்வு வரும்
இலை விழும் பனியினிலே
இளங் கதிர் நுழைகையிலே
விலை இலா இன்பமென்பார்
விந்தையாய் மகிழ்ந்து நிற்பார்.

குழந் தையின் மழலையிலே
குயிற் குரல் இனிமையிலே
பழந் தமிழ்க் கவிதைதரும்
பண் பாட்டுப் பெருமையிலே
விளைந் திடும் கோடியின்பம்
வீணாகி வாழ்வு தன்னை
இழந்திடல் துன்ப மென்பார்
இதயத்தில் மகிழ்வு கொள்வார்.

செல்லாத காசு நாங்கள்
செகத்தினிலே வாடு கின்றோம்
பொல்லாத வறு மையினால்
புழுங்கும் எங்கள் மனதினிலே
இல்லாத பொறு மையினால்
இவைகளை நாம் இரசிப்பதில்லை
எல்லா அழகும் உண்டு
எமக்கோ எனில் ஏதுமில்லை.

ஆற்றங்கரை மண லினிலே
அடுத்த நேர உணவுக்காகப்
பார்த்திருந்து பிடித்த மீனைப்
பருந்து வந்து கவர்ந்துசெல்லும்
காற்றினால் வயிறு காய
கண்ணீரில் முகம் நனைய
ஆற்றாது பசிக் கலைவோம்
அழகு எம்மை என்ன செய்யும்.

சிறுகதை



## கிறிஸ்டி நல்லரெத்தினம்
(அவுஸ்திரேலியா)



# மனிதரின் நிறங்கள்..

யன்னலுக்கு அருகில் அமர்ந்து வெளியே மாறும் காட்சிகளை ரசிக்க யாருக்குத்தான் ஆசை இருக்காது? பேரூந்தில் எனக்குப் பிடித்த இருக்கை "விண்டோ சீட்". அது என்ன பேரூந்து? *1965ல்* நடந்த சம்பவத்தை அல்லவா உங்களுக்கு சொல்லப்போகிறேன்! அப்போது பேரூந்து பிறக்கவில்லை - பஸ் என்றுதான் அழைப்போம். ஆனால் ஏ.சி, சொகுசு இருக்கை, கூரையில் இருந்து கூப்பிடும் ஏ.ஆர்.ரகுமானின் இசை என்று எங்கள் ஊர் பஸ்ஸை கற்பனை செய்து விடாதீர்கள். நான்கு சக்கரங்கள் பூட்டிய தகர டப்பாதான் எங்கள் பஸ். ஆனால் "அ"னாவில் இருந்து "ஃ"க்கனாவிற்கு உங்களை கொண்டு சேர்த்துவிடும் எங்கள் பஸ். உங்கள் பேரூந்தும் இதைத்தானே செய்கிறது?

"மகன், வசதியா கால நல்லா நீட்டி இரு மகன். ஏதும் வாங்கி சாப்பிட வேண்டுமென்றால் சொல்லு ராசா". அப்பாவிற்கு என்னில் மிக அன்பு. பத்து வயது சிறுவனான எனது இந்தப் பயணம் சுகமாய் அமையவேண்டும் என்பதில் அப்பாவிற்கு அக்கறை. எல்லா அப்பாக்களுக்கும் இருக்கும் கவனிப்பின் வெளிப்பாடு இது.

ஆம் என்பதற்கு அடையாளமாக தலையை பலமாக அசைத்து என் ஆமோதிப்பை வெளிப்படுத்தினேன்.

"இஞ்ச இருந்து கல்முனைக்குப் போக ஒரு மணித்தியாலம் எடுக்கும். ஆனா களுவாஞ்சிக்குடியில ரீ, கோப்பி குடிக்க பஸ்ஸை நிப்பாட்டுவான். அப்ப ஏதாவது வாங்கிச் சாப்பிடுவம். சரியா மகன்?" என்ற கேள்விக்கும் தலையை ஆட்டிவைத்தேன்.

அப்பாவின் அம்மாவைப் பார்க்கத்தான் இப்பயணம். கல்முனையில் இறங்கி அரை மணிநேர நடையில் நற்பிட்டிமுனையை அடைந்துவிடுவோம். ஊரின் பெயரை இங்கிதமாய் நற்பிட்டிமுனை என்று நான் சொன்னாலும் ஊரார் வாயில் அது நாய்பட்டிமுனை என்று தான் வருவதுண்டு. அதிலும் ஒரு ஊர் வாசம் இருப்பதாய் எனக்கு தோன்றுவதுண்டு. பெயரில் என்ன இருக்கிறது?

அப்பாவின் கையில் ஒரு சிறு காக்கிப் பை. அதனுள் நல்ல இதர வாழைப்பழ சீப்பு ஒன்றும் சொல்லி செய்வித்த பலகாரங்களும். எல்லாம் ஆச்சிக்குத்தான். அது தான், அப்பாவின் அம்மாவுக்கு. நானும் அண்ணனும் அக்காவும் அவரை அப்பம்மா என்று அழைக்காமல் ஆச்சி என்றுதான் அழைப்போம். கூனல் முதுகு, இரண்டு காதுகளிலும் கனத்த பாரமான தங்கத்தோடு. தோட்டின் பாரத்தால் காதின் துளைகள் பெரிதாகி எங்கே தோடுகளின் பாரத்தால் காதின் தொங்குதசை அறுந்து விழுந்து விடுமே என பயம் காட்டும். சீத்தை சாறியின் முந்தானையால் உடலின் மேல் பக்கத்தை மூடியிருப்பார். ரவிக்கை போடும் பழக்கம் இல்லை. அவர் வயதை ஒத்த எவருக்கும் இல்லை. அதைப் பற்றி அவர்கள் அலட்டிக் கொள்வதில்லை. நாமும்தான்.

கூனல் முதுகு நிலம்பார்த்து நடக்கச் சொன்னாலும் இடைக்கிடை கழுத்தை

நெளித்து நிமிர்ந்து பார்த்து அந்த தெய்வீக சிரிப்பை உதிர்ப்பார். அதற்கு ஆயிரம் பொன்! அப்படி ஒரு பரிவு, கருணை.

அப்பா தனது அன்புத் தாயை பார்க்க மாதத்தில் ஒரு முறையாவது செல்லத் தவறுவதில்லை. அந்நாட்களில் அரச உத்தியோகத்தர்களுக்கு 25ம் திகதிதான் மாதச்சம்பளம். பணமாக சம்பளத்தை பட்டு வாடா செய்வார்கள். தற்போதுபோல் வங்கிக்கணக்கில் வைப்பிலிடும் பழக்கம் இல்லை. எனவே அப்பாவின் பயணம் மாசக் கடைசியிலேயே அனேகமாக நிகழும். அப்பா வுடன் எங்கள் மூவரில் ஒருவர் இணைந்து கொள்வோம்.

பஸ் ஏறும்முன் பஸ் ஸ்டாண்டில் அப்பா அன்றைய வீரகேசரி தினசரியை வாங்கிக் கொள்வார். வழமையாக டெய்லி நியூஸ் ஆங்கில தினசரியை படித்தாலும் இப்பயணங்களில் வீரகேசரிதான் பயணத் தோழன். ஆச்சியின் வீட்டில் அதை விட்டுவிட்டு வந்தால் வேறு யாராவது படிக்கலாமே என்ற பரந்த மனதின் வெளிப்பாடு அது!

அப்பாவும் நானும் வசதியாக உட்கார்ந்த தும் அப்பா தினசரியை படிக்கத் தொடங்குவர். நான் யன்னலூடே பராக்குப் பார்த்தபடி சிந்தனையில் மூழ்குவேன். 60பதுகளில் பஸ் யன்னலுக்கு வெளியே மாறும் காட்சிகள்தான் பயணத்துணை, பொழுதுபோக்கு எல்லாம்! ரோட்டின் மருங்கில் சைக்கிளிலும் நடந்தும் செல்லும் விசித்திர மனிதர்களை வேடிக்கை பார்த்தபடி நாளிகைகளை நகர்த்துவேன்.. சில தெரு நாய்கள் விட்டேனா பார் என்று பஸ்சை விரட்டி வந்து பின் வெல்ல முடியாமல் தளர்ந்து பின்வாங்கிச் சென்று அடுத்து வரும் வாகனத்தை விரட்டத் தொடங்கும். சரி, அப்படி விரட்டித்தான் பிடித்தாலும் இந்த நாலுகால் ஜீவன்களுக்கு வாகனத்தை செலுத்த வராதே என்று நினைத்து என்னுள் சிரித்துக் கொள்வேன்! எனினும் வாகனத்தை விரட்டும் அவற்றின் விடாமுயற்சியை மெச்சிக் கொள்வேன்!

இந்நாட்களில் வெளிவரும் முப்பது பக்க தினசரிகளைப் போல் அப்போது கிடையாது. இரண்டு அல்லது மூன்று நெடும் தாள்களை மடித்து அச்சடித்திருப்பார்கள். காலையில் வாங்கிய தினசரி மதியத்திற்குள் படித்து முடிந்துவிடும். பத்திரிகையை வாங்கி மடித்து கக்கத்தினுள் அடக்கிக் கொண்டு போக முடியும்... இன்றைய தினசரிகளை தலையில் அல்லவா கட்டிச் சுமக்க வேண்டும்!

பஸ் களுவாஞ்சிகுடிக்கு வரும்போது அப்பா ஏறக்குறைய எல்லா முக்கிய தலைப்புகளையும் படித்து முடித்திருப்பார். பத்திரிகையை மடித்து வைத்து என்னுடன் பேச்சுக்கொடுப்பார். “நல்லாப் படிக்கிறையா மகன்? நல்ல கெட்டித்தனமாய் படி மகன். படிப்பு ஒண்ணைத்தால் ஆரும் நம்மட்ட இருந்து எடுக்க முடியாது.” என்பர். நான் தலையை ஆட்டி வைப்பேன்.

எமது பயணத்தின் அரைவாசி தூரத்தில் இருக்கும் சிற்றூர்தான் களுவாஞ்சிக்குடி. களுவாஞ்சிக்குடியில் பனங்கிழங்கு சீசனில் அவித்த ஒடியல்தான் ஸ்னக். அவற்றை வாங்க பஸ்ஸை விட்டு இறங்க வேண்டியதில்லை. பஸ் யன்னலுக்குள்ளால் போட்டி போட்டுக் கொண்டு நீட்டப்படும் ஓடியல் கட்டுகளை தரம் பார்த்து பேரம் பேசி “பிசினஸ் டீல்”கள் முற்றுப்பெறும். சீசனுக்கு ஏற்றால்போல் நாவல்பழமும், கடும் புளியம்பழமும் அவித்த கச்சானும் அல்லது முந்திரியம்பழமும் ஓடியலின் இடத்தில் வந்து குந்திக்கொள்ளும். தூர இருந்து வரும் றம்புட்டானுக்கும் மங்குஸ்தானுக்கும் கூட இங்கு இடம் உண்டு.

அப்பா பத்திரிகை படித்து முடிந்து விட்டதை கவனித்த அருகில் இருந்த சக பயணி மெல்ல அப்பாவிடம் “ஐயா, பேப்பர ஒரு தரம் பாத்திட்டு தரட்டா” என்று விண்ணப்பிப்பார். அப்பா தான் இறங்கும் இடத்தை கேட்டவருக்கு ஞாபகமூட்டி வீரகேசரியை கையளிப்பார். கல்முனை நகரை கடந்து பயணிக்கும் அம்பாறை, திருக் கோவில், பொத்துவில் பஸ் என்றால் ”நான் கல்முனையில் இறங்க வேணும். அதுக்குள்ள வாசிச்சிப் போட்டு தர வேணும் கண்டியளோ” என்று ஞாபகமூட்டுவார்.

அனேகமான பஸ்கள் எல்லா தரிப் பிடங்களிலும் நின்றுதான் போகும். எனவே களுவாஞ்சிகுடியில் இருந்து கல்முனையை கிட்டும் போது அரை மணித்தியாலம் போயிருக்கும். பஸ் பாண்டிருப்பு கிராமத்தை நெருங்கும் போது அப்பா வீரகேசரியை எடுத்தவரிடம் பத்திரிகையை மீள தரும்படி ஞாபகமூட்டுவார். இப்போது வீரகேசரி அவரிடம் இல்லை. அது கைமாறி யாரிடமோ

சென்றிருக்கும். எனவே அவர் எழுந்து நின்று “ஐயா இறங்கோணுமாம்... ஆரிட்ட ஐயாட வீரகேசரி இருக்கு? கெதியா தாங்க பாப்பம்.... வாசிச்சா திரும்பி தாற புத்தி இல்லைபோல” என்று ஒரு மிரட்டலுடன் கூடிய அறிவிப்பை விடுப்பார். ஒருவர் முதலாம் பக்க தாளையும் பல சீட்கள் தள்ளி இன்னொருவர் மூன்றாம் பக்க தாளையும் மீட்டுத் தர முழு வீரகேசரியும் பூரணத்துவம் பெறும்.



இன்று இந்த நினைவுகளை மீட்டும் போது ஒரு அடிப்படை மனித புரிந்துணர்வு எத்தனை மானுடர்களின் தேவைகளை பூர்த்தி செய்தது என எண்ணிப் பார்க்கிறேன். ஒரு குறும் பயணத்தில் என்னமாய் அந்த வாகனம் ஒரு சில்லுவைத்த வாசிகசாலையாய் மாறிய மாயையை கண்டு வியக்கிறேன். நான் படித்து விட்டேன் மற்றவனும் படிக்கட்டும் என்ற அப்பாவில் பரந்த மனதையும் இப்போது நினைத்து பூரிக்கிறேன்.

☸ ☸ ☸

காட்சி மாற்றம் :

மெல்பேர்னில் ஜுலை மாத குளிர். காலை நேர சன நெருக்கடியில் பலர் சீட் களுக்கு நடுவே உள்ள இடைவெளியில் நின்று பயணிக்கிறார்கள். இருக்கை கிடைத்த சில இளசுகள் வசதியாய் உட்கார்ந்து இயர் - போனில் தாளத்திற்கு ஏற்றாற்போல் தலையை அசைத்து லயிப்பில் பயணிக்கிறார்கள். சிலர் மும்முரமாக தினசரிப்பத்திரிகைகளை படித்து முடித்து ரயில் மெல்பேர்ன் நகருக்குள் நுழையும் ஸ்டேசன் அண்மிப்பதால் பத்திரிகைகளை மடித்து சுருட்டி கை இடுக்குகளில் செருகிக் கொள்கிறார்கள். ஒரு இளம் பெண்மணி தன் கைப்பையை திறந்து உதட்டுச்சாய குப்பியையும் சிறு கண் ணாடியையும் எடுத்து இதழ்களை குவித்து சாயம் பூசி கண்ணாடியில் சரிபார்த்து ஒப்பனை பூரணத்துவம் பெற்ற திருப்தியுடன் நிமிர்ந்து உட்காருகிறார்.

ரயில் றிச்மன்ட் ஸ்டெசனில் தரித்து நிற்கிறது. மின்சார ரெயில் பெட்டியின் கதவுகள் டிங்... டிங் எனும் ஒலியுடன் தானே திறந்து கொள்ள, தரையில் கொட்டிய ஆரஞ்சு பழங்களாய் பயணிகள் சிதறி நாலாபக்கமும் விரைந்து சென்று மறைகிறார்கள்.

ரயிலில் பத்திரிகையை படித்து முடித்து அதை கக்கத்தில் இடுக்கிக் கொண்டு பிளாட் பாரத்தில் இறங்கி அங்கிருந்த ஒரு குப்பை தொட்டியை நோக்கி நடக்கிறார் ஒரு மூத்த வெள்ளைக்கார தனவந்தர். பின்னால் தோளில் பையுடன் ஒரு இளைஞன் இறங்குகிறான். பல்கலைக்கழக மாணவனுக்கேற்ற தோற்றம். முன்னால் சென்ற அந்த மனிதரை அகலக்கால் வைத்து அருகே சென்று அவரை அந்த இளைஞன் குனிந்து கேட்கிறான்: *excuse me.... may I have the paper please? if you have finished with it?* (பேப்பரை படித்து முடித்து விட்டீர்கள் என்றால் அதை எனக்கு தர முடியுமா?). தனவந்தர் அந்த இளைஞனை மேலும் கீழும் பார்த்துவிட்டு சொல்கிறார் *"Why don't you buy your own?"* (ஏன் நீ உனக்கொரு பத்திரிகையை வாங்கக்கூடாது?) என்று கூறி தனது தினசரியை அருகே இருந்த குப்பைத் தொட்டிக்குள் திணித்து விட்டு நடையை தொடர்கிறார்! திகைத்து நிற்கிறான் இளைஞன்! அவன் தன்மானமும் அல்லவா அக்கணத்தில் குப்பைக்கூடை வாசியானது!

மேற்கத்திய சமூக நியாயங்களும் நியதி களும் ஒரு வரையறுக்கப்பட்ட கட்டமைப்பின் கீழ் தடம்புரளாமல் பயணிப்பவை. எப்போ தாவது அவை நிலைகுலையும் போது உடனே அவை ஆரவாரமின்றி சீர் செய்யப்படுகின்றன. எவரும் அவற்றை தராசில் ஏற்றி நியாயத்தீர்ப்பு வழங்குவதில்லை.

எது எப்படி இருந்தாலும், பாமர மக்களுக்கு இருக்கும் புரிந்துணர்வும் பகிர்ந்துண்ணும் போக்கும் கடல் கடப்பதில்லையோ?

மனிதரில்தான் எத்தனை நிறங்கள்!

○○○

# உறைபனியில் மீன் பிடித்தல் (நினைவோடை)



கே. எஸ். சுதாகர்
(அவுஸ்திரேலியா)

சமீபத்தில் எனக்கு இந்த உறைபனியில் மீன் பிடிக்கும் சந்தர்ப்பம் கனடாவில் கிடைத்தது. குளிர்ந்த காலங்களில் இங்கேயுள்ள நீர்நிலைகள், குளங்கள் உறைபனியில் மூடி விடும். இந்த உறைபனியின் தடிப்பம் அல்லது பருமன் அதிகரிக்கும்போது அதன் உறுதியும் அதிகரிக்கும். உறுதிகூடி பனி இறுகிய பின்னர் அதன்மேல் துளையிட்டு தூண்டில் வீசி மீன் பிடிக்கின்றார்கள்.

என்னதான் சொன்னாலும் எனக்கென்னவோ இது ஒரு ஆபத்து நிறைந்த விளையாட்டாகவே தோன்றுகின்றது. விபத்துகள் ஏற்கனவே நடந்தும் இருக்கின்றன.

மார்கழி, தை, மாசி மாதங்கள் கனடாவில் குளிர் காலங்கள். எங்கும் பனித் தூவல்கள் போர்த்தியபடி இருந்தன. நாங்கள் காலை 8 மணியளவில் வீட்டில் இருந்து புறப்பட்டோம். 2 மணி நேரப்பயணத்தின் பின்னர் ஒன்ராறியோவின் தென்பகுதியில் அமைந்திருக்கும் சிம்கோ வாவியைச் (Lake Simcoe) சென்றடைந்தோம். அந்த மாநிலத்தின் நான்காவது பெரிய வாவி இதுவாகும்.

வாவி இருந்ததற்கான எந்தவிதமான அடையாளங்களும் அற்று பனிக்கட்டி போர்த்திய நிலம் போல அது காட்சி தந்தது. வாகனத்தை வீதியில் நிறுத்துவதற்கு தோதாக இடம் அமையாததால் வாவியின் மேல் நிறுத்த முடியுமா என நாங்கள் பதிவு செய்த Dave's Fish huts rentals உரிமையாளரிடம் கேட்டோம். அவர் "வாகனத்தை நிற்பாட்டுங்கள். ஆனால் திறப்பைத் தந்துவிட்டுப் போங்கள்" என்றார்.

எத்தனையோ தொன் நிறைந்த வாகனத்தை வாவியின் மேல் நிற்பாட்டினோம். எந்த நேரமும் எதுவும் நடக்கலாம். அப்படி ஏதாவது நடந்தால் வாகனத்தை பாதுகாப்பாக அப்புறப்படுத்துவதற்காகவே திறப்பைத் தந்து விட்டுப் போகும்படி கேட்டிருந்தார்கள்.

வாகனம் ஒன்றுடன் இணைக்கப்பட்டிருந்த மரத்தாலான பெட்டி ஒன்றினுள், நாங்கள் கொண்டுவந்த பொருட்களுடன் ஏறினோம். வாவியின் மேலாக அடர்ந்த செறிந்த பனிக்கட்டியின் மேலாக பெட்டியை இழுத்துச் சென்றார் சாரதி. சடசடவென ஓசை எழுப்பியபடி விரைந்தது வாகனம்.

வெளியெ நின்று பார்க்கும்போது ஒன்றிரண்டு குடில்களே (huts) தெரிந்தன. உள்ளே போகப்போக ஒவ்வொன்றாகத் துலங்கி எண்ணுக்கணக்கில்லாத குடில்கள் இருப்பதைக் கண்டோம்.

எங்களுக்குரிய குடிலில் இறக்கிவிட்டார்கள். குடிலிற்குள் சிறியதொரு கனல் அடுப்பு மெதுவாக எரிந்து கொண்டிருந்தது. அதற்கான வாயுச்சிலிண்டர் குடிலிற்கு வெளியே இருந்தது. தூண்டிலில் இரையாக கொளுவுவதற்கான மீன்கள் ஒரு வாளிக்குள் நீந்தி விளையாடிக் கொண்டிருந்தன. உள்ளேயிருந்து மீன் பிடிப்பதற்கு ஏதுவாக மரப்பலகைகளிலான இருக்கைகள் அமைந்திருந்தன. உள்ளே செவ்வக வடிவிலான இரண்டு துளைகள் துளையிடப்பட்டிருந்தன. துளையினூடாக பளிங்கு போன்ற நீர் சலனமற்று இருந்தது.

தூண்டிலை வீசினோம். மீன்கள் சில வந்து முகர்ந்து பார்த்துவிட்டு விலகிப் போயின. ஒரு சில மீன்கள் தூண்டிலில் சிக்கிக் கொண்டன. அவற்றை எடுக்கும்போது தப்பி ஓடின. மீன்கள் சுவாசிப்பதற்காக அடிக்கடி துளைக்கு அண்மையில் வந்தபடி இருந்தன.

இடையில் றோன் (drone) ஒன்று பறந்து வந்து எல்லாக் குடில்களையும் படமெடுத்துச் சென்றது. வெளியில் இருக்கும் எல்லாக்

குடில்களையும் ஒரே நேரத்தில் பார்வையிட்டு பாதுகாப்பை உறுதிப்படுத்த றோனை அவர்கள் பாவிக்கின்றார்கள்.

அதன் சத்தம் கேட்டு எங்கள் குடிலிற்குள் ஒளித்திருந்த எலி ஒன்று ஒரு மூலையில் இருந்து மறு மூலைக்குத் தாவியது. இவ்வளவு நேரமும் எங்களுடன் ஐந்தாவது ஜீவன் ஒன்றும் இருந்திருக்கின்றார் என நாம் திகைத்து விட்டோம். இருப்பினும், இறுதிவரை அவரால் எங்களுக்கோ, எங்களால் அவருக்கோ எந்தவித இடைஞ்சலும் இருக்கவில்லை. அவர் தன்பாட்டில் ஒரு ஓரத்தில் இருந்து மீன் பிடிப்பதைப் பார்த்துக் கொண்டிருந்தார்.

மீன்கள் ஒன்றையும்பிடிக்க முடியாமல் இருந்ததால், *Dave's Fish huts rentals* உரிமை யாளருடன் தொடர்பு கொண்டு ஏதாவது உதவி செய்ய முடியுமா என்று கேட்டோம். சற்று நேரத்தின் பின்னர் இருவர் தூண்டில் சகிதம் வந்தார்கள்.

"இதுவரை எத்தனை மீன்கள் பிடித்தீர்கள்?" என்று கேட்டார்.

"ஒரு எலி பிடித்தோம்" என்று மூலையில் பதுங்கியிருந்த எலியைக் காட்டினோம்.

வந்தவரில் ஒருவர் எங்களுக்கு மீன் பிடிக்கக் காட்டித் தந்தார். மீன்களைக் கவர்ந்து இழுப்பதற்காக தூண்டிலில் வர்ண ஜாலம் காட்டும் மீன்போன்ற ஒன்றைத் தொங்கவிட்டு தண்ணீரினுள் இறக்கினார். அது நீரினுள் சென்றதும், தூண்டிலை என்னிடம் தந்து அதனை மேலும் கீழும் அசைத்துக் கொண்டிருக்கும்படி சொன்னார். வானவில் நிறத்தில் நீரிற்குள் அது அசைந்து மீன்களுக்கு காதல் சமிக்கையிட்டது. சற்று நேரத்தில் ஒரு பெரிய மீன் பிடிபட்டுக் கொண்டது. அதனை வெளியே பிடித்து இழுத்தார். இவ்வளவு நேரத்தின் பின்னர் எங்களுக்கொரு மீன் கிடைத்திருக்கின்றது என நினைப்பதற்கிடையில், பிடித்த மீனைக் கழற்றி சட்டெனத் தண்ணீரில் விட்டார். அது தப்பித்தோம் பிழைத்தோம் எனப் பறந் தோடியது.

"இனிப் பிடியுங்கள்" சொல்லிவிட்டுப் போய்விட்டார்கள்.

உண்மையில் எங்களுக்கு இந்த மீன் பிடிக்கும் தொழில்நுட்பம் கைவரவில்லை. வீட்டிற்குப் புறப்படும்போது ஒரு மீனையும் நாங்கள்...

○○○

## கரும்புள்ளி மாறுமா?

– மொழிவரதன்

நிலவு சிலவேளைகளில்
முகம் கோணலாம்
என்றாலும்
அதுகூட அழகான
கவியாகலாம்
பெண்ணினது ஊடல்போல்

மழை உடலுக்கு
குளிராகலாம்
அம்மழையே
சில வேளைகளில்
சிலருக்கு சுகமாகலாம் அது
இணை சேர்க்கலாம்

மேகங்களும் வெண்பணி
பொழிவுகளும்
தோளின் மயிர்களை
சிலிர்த்திட வைத்திடலாம்
ஆனால் அதுவே
எழிலான ஓவியமாகவும்
உயிர்ப்பெறலாம்

ஆகா...! இயற்கையின்
எழிற்கோலங்கள் எத்தனை?
எத்தனையோ?? எம்
மலையக மண்ணிலே
ஆனால்
கரும்புள்ளியாம்
இம்மக்கள் வாழ்வு
ஏற்றம் பெறுமாயின்
இலங்கை மாதா
எவ்வளவு மகிழ்வாள்?

## யாவரும் கேளிர்

**நல்லவை நாடின் நானிலம் போற்றும்**
**அல்லவை செய்யின் அநீதி சூழும்**
**மறம் என்பது மனத்தின் தன்மை**
**அறம் கண்டோர் அனுபவ உண்மை**
**ஒரு குடைக்கீழ் செங்கோ லோச்சின்**
**தரு நிழல்போல் தண்மை அளிக்கும்**
**குடிகளை ஓம்பிக் குறைநீக்கும் மன்னன்**
**அடிதனைத் தொழுவர் அகிலத்து மக்கள்**
**வானத்து தெய்வம் வளம்தரும் ஆதவன்**
**கானகம் எனினும் கதிர்களை வீசும்**
**யாங்கணும் சுயநல அனலது ஒழிக!**
**யாவரும் கேளிர் வாசகம் வாழ்க!**

**– தம்பிலுவில் 'ஜெகா'**

# உணர்ச்சிக் குறிகள் (EMOJI)

## ஓர் அறிமுகம்

சிறப்புக் கட்டுரை

ஐரோப்பியரின் வருகைக்குப் பின்னர் தரிப்புக் குறிகள் தமிழுக்குள் உள்வந்தது போன்று, தற்காலத்தில் கணினிப் பொறியியலின் தாக்கத்தினால் 'எமோஜி' உணர்ச்சிக் குறிகளும் தமிழுக்குள் மெதுவாக உள்வரத்தொடங்கியுள்ளன.

உரையாடும் சந்தர்ப்பங்களில், நாம் கூறும் வார்த்தைகளுடன் சேர்த்து முகபாவங்களினாலும், சைகைகளுடன் கூடிய உடல் மொழியினாலும், உரையாடுகிறோம்; குரலின் ஏற்றத் தாழ்வினால் உணர்ச்சிகளையும் வெளிப்படுத்துகிறோம். இவை உரையாடலை மேன்மைப்படுத்துகின்றன. இதுபோன்றே எமோஜி உணர்ச்சிக் குறிகளும் உரையாடல்களை மேன்மைப்படுத்துகின்றன.

எமோஜி ஒரு மொழியா? அல்லது மொழியைச் சிதைக்கின்றதா? போன்ற கருத்துகள் மொழியியலாளர்கள் மத்தியில் முன்வைக்கப்பெறுகின்றன. இருப்பினும், உணர்ச்சிக் குறிகளின் பயன்பாடு தமிழ் மொழியில் ஊடுருவியுள்ளது என்பது வெளிப்படை.

எமோஜி உணர்ச்சிக் குறிகள் பற்றிய ஓர் அறிமுகத்தை வழங்குவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.






ஞானம் பாலச்சந்திரன்

## 1 - கட்டுரையின் நோக்கம்

காலத்துக்குக்காலம் **தமிழ் வரிவடிவம்** பல மாற்றங்களைக் கண்டுள்ளதுடன் சில புதிய கூறுகளையும் உள்வாங்கியுள்ளது. **எமோஜி (Emoji)** எனப்பெறும் **உணர்ச்சிக் குறிகள்**, 1990கள் தொடங்கி பிரபல்யமாகி, அண்மைக்காலங்களில் தமிழ் வரிவடிவப் பயன்பாட்டில் உள்வாங்கப்பெறுவதைக் காணமுடிகிறது.

தமிழ் இலக்கண நூல்களில் தமிழ் எழுத்துக்களின் ஒலிவடிவங்களுக்கு முக்கியத்துவம் வழங்கப்பட்டுள்ளதேயன்றி வரிவடிவங்களுக்கு அல்ல. இருப்பினும் **வாசிப்பவனை – நுகர்வோனை கருத்தில் கொண்டு** எழுத்துச் சீர்திருத்தம், மெய்யெழுத்துகளுக்குப் புள்ளியிடல், சொற்களுக்கிடையிலான இடைவெளி, பந்தி பிரிப்பு, பல்வேறு எழுத்துருக்கள் போன்ற பல மாற்றங்களை **இலகுபடுத்தும் நோக்கில்** தமிழ் வரிவடிவம் உள்வாங்கியுள்ளது.

**அச்சியலின் தொழிநுட்ப வளர்ச்சி**யானது, தமிழ் வரிவடிவங்களில் விடயதானங்களை நுகர்வோனுக்கு இலகுபடுத்தி பிரதிபலிக்கும் முயற்சியில் பெரும் பங்காற்றியுள்ளது எனலாம்.

இப்பின்னணியில் தமிழ் வரிவடிவத்தில் **தரிப்புக்குறிகளின் வகிபாகம் அதிமுக்கியமானது.** ஐரோப்பியரின் வருகைக்குப் பின்னரே தமிழுக்குள் தரிப்புக்குறிகள் உள்வாங்கப்பட்டன. தரிப்புக்குறிகளானவை நுகர்வோர்களுக்குத் தெளிவினைத் தந்து, இலகுத்தன்மையை உருவாக்குவதுடன் சில சந்தர்ப்பங்களில் உணர்ச்சிகளைப் பிரதிபலிக்கவும் துணைசெய்கின்றன.

ஐரோப்பியர்கள் அறிமுகப்படுத்திய **அச்சியலின் தாக்கத்தினால், தரிப்புக் குறிகள்** தமிழுக்குள் உள்வந்தது போன்று, தற்காலத்தில் **கணினியியலின் தாக்கத்தினால் உணர்ச்சிக் குறிகளும்** தமிழுக்குள் மெதுவாக உள்வரத் தொடங்கியுள்ளன. ஏலவே தமிழ் உள்வாங்கிய தரிப்புக் குறிகளை முன்நிறுத்தி, தற்போது தமிழ் உள்வாங்கிவரும் உணர்ச்சிக் குறிகள் பற்றிய ஓர் அறிமுகத்தை வழங்குவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## 2 - அச்சியலின் தாக்கம்

ஓலைச்சுவடிகளில் விடயதானங்கள் குவியலாக - தொடராக எழுதப்பட்டுள்ளதைக் காணலாம். இத்தகு விடயதானங்களைச் சரிவர உள்வாங்குவதற்கு நுகர்வோன், தன்னைத் தயார்படுத்திக் கொண்டிருத்தல் வேண்டும். ஆரம்பகாலத்தில் அச்சுவாகனம் ஏறிய நூல்களில் ஓலைச்சுவடிகளில் காணப்




**சீகன் பால்க் (1682 – 1719) அவர்களின் தரங்கம்பாடி அச்சுக்கூடம்**



DOCTRINA CHRISTAM
en Lingua Malauar Tamul.

**தமிழில் அச்சேறிய முதலாவது நூல் (1578) – தம்பிரான் வணக்கம்**

ஈழத்தில் கிடைக்கப்பெறும் அதிபழைய அச்சுப் பிரதி (1742 – கொழும்பு)



பட்டதைப் போன்று, விடயதானங்கள் தொடராக அச்சிடப்பட்டுள்ளதைக் காண முடிகிறது.

*1578ஆம்* வருடம் அச்சேறிய முதலாவது தமிழ் நூலாகிய **தம்பிரான் வணக்கம்** தொடங்கி அடுத்த இருநூறு வருடங்களுக்கு பெரிய தொரு மாற்றத்தைக் காணமுடியாது. இக் காலப்பகுதியில் அச்சேறிய நூல்களும் ஓலைச் சுவடிகள் போன்றே காணப்படு கின்றன. *1742ஆம்* வருடம் இலங்கையில் அச்சேறிய துண்டுப்பிரசுரம் ஒன்றும் இந்த வகையிலேயே அமைந்துள்ளது.

*1750*கள் தொடங்கி அச்சியலின் தொழில்நுட்ப வளர்ச்சியால் பாரியளவு மாற்றங்களைக் காணமுடிகிறது. மெய் யெழுத்துகளுக்குப் புள்ளியிடல், தரிப்புக் குறிகள், சொற்களுக்கு இடையிலான இடைவெளி, பதபிரிப்பு, பந்திபிரிப்பு, பல்வேறு எழுத்துருக்கள் போன்ற மாற் றங்கள் மெதுமெதுவாக உள்வரத் தொடங் கின. இதனை எடுத்துக்காட்ட **திருக் குறளின் வான்சிறப்பு** அதிகாரத்தின் தொடக் கப்பகுதியானது ஓலைச்சுவடி ஒன்றி லும் *1847ஆம்* வருடம் யாழ்ப்பாணத்தில் அச்சேறிய **இலக்கிய சங்கிரகம்** நூலின் ஒரு பகுதியிலும் எவ்வாறு உள்ளன என இங்கு எடுத்துக் காட்டப்பட்டுள்ளது.

## 3 - தரிப்புக் குறிகள் – நிறுத்தற் குறிகள்

பேராசிரியர் ***சி. சிவசேகரம்*** அவர்கள், எழுதிய ***தமிழ்த் தரிப்புக்குறிகளின் பயன்பாடு*** *(1994)* எனும் நூலில் காட்டப்பட்டுள்ள பின்வரும் உதாரணங்கள், தரிப்புக் குறி களின் பயன்பாட்டினையும் தெளிவுபடுத்த லில் அவை வகிக்கும் முக்கியத்துவத்தை யும் எமக்கு எடுத்துக்காட்டுகின்றன.

### முழுத்தரிப்பு

1. விழுந்து கிடந்தது மான் கொம்பு. வளர்ந்து திரிந்தது மாடு.
2. விழுந்து கிடந்தது மான். கொம்பு வளர்ந்து திரிந்தது மாடு.

### வினாக்குறி

1. பெயர்? விலாசம்?


### வியப்புக்குறி அல்லது விளக்கக்குறி

1. ஏய்! போகாதே, நில்!
2. இதென்ன கதை!

### குறுந்தரிப்பு

1. பயந்து, விழுந்து, துடித்து வந்தான்.
2. வெளிறிய, பச்சைத் துணி. (இது “வெளிறிய பச்சைத் துணி” என்பதிலிருந்து வேறுபட்டது.) (குறுந்தரிப்புக்கு இன்னும் பல பயன்பாடுகள் உள்ளன.)


## திருக்குறள் – பரிமேலழகர் உரை : வான்சிறப்பு அதிகார தொடக்கப்பகுதி





**வான்சிறப்பு; அஃதாவது, அக்கடவுளது....**

ஓலைச்சுவடியில் உள்ளது அச்சேறியபோது, அரைகாற்புள்ளி (நெடுந்தரிப்பு), காற்புள்ளி (குறுந்தரிப்பு) பதப்பிரிப்பு போன்றன உள்ளடக்கப்பட்டுள்ளன.



**நிற்ப என்பது, "நின்று" என திரிந்து...**

ஓலைச்சுவடியில் உள்ளது அச்சேறியபோது, காற்புள்ளி (குறுந்தரிப்பு), பதப் பிரிப்பு, மேற்கோள்குறி போன்றன உள்ளடக்கப்பட்டுள்ளன

**1847ஆம் வருடம் அச்சேறிய இலக்கிய சங்கிரகம் : வான்சிறப்பு அதிகார தொடக்கப் பகுதி**

### வான்சிறப்பு.

வான்சிறப்பு; அஃதாவது, அக்கடவுளது ஆணையால் உலகமும் அதற்கு உறுதியாகிய அறம் பொருள் இன்-பங்களும் நடத்தற்கு ஏதுவாகிய மழையது சிறப்புக் கூறுதல். அதிகார முறையும் இதனானே விளங்கும்.

க. வா' 'னின்ற்' உலகம் வழங்கி வருதலாற்
'றன் அமிழ்தம் என்ற்' உணாற் பாற்று. ,

ப. மழை இடையறாது நிற்ப உலகம் நிலைபெற்று வருதலால் அம்மழைதான் உலகத்திற்கு அமிர்தம் என்று உணரும் பான்மை உடைத்து; எ—று.

வி. நிற்ப என்பது, "நின்று" எனத் திரிந்து நின்றது. "உலகம்" என்பது ஈண்டு உயிர்களை. அவை நிலைபெற்று வருதலாவது, பிறப்பு இடை-அறுமையின் எஞ்ஞான்றும் உடம்பொடு காணப் பட்டு வருதல். அமிழ்தம் உண்டார் சாவாது நிலை-பெறுதலின் உலகத்தை நிலைபெறுத்துகின்ற வானை "அமிழ்தம் என்த்' உணர்க" என்றார்.

**நெடுந்தரிப்பு**

1. நிலவு மெல்ல நடந்து வந்தது; நிழல்கள் என்னைத் தொடர்ந்து வந்தன.

**விளக்கக்குறி**

1. வளிமண்டலத்தின் முக்கிய வாயுக்கள் : ஒட்சிசன், காபனீரொட்சைட், நைதரசன்.

**மேற்கோட்குறிகள்**

1. " 'மெல்லத் தமிழினிச் சாகும் – அந்த மேற்கு மொழிகள் புவிமிசை ஓங்கும்' என்றந்தப் பேதை உரைத்தான் "
   – மகாகவி பாரதியார்

**தனிமேற்கோட்குறி**

1. '25 (இது 2025ஐக் குறிக்கிறது)

இங்கு கூறப்பெற்ற தரிப்புக்குறிகளுடன் இணைத்தற்கோடு (–), சாய்வுக்கோடு (/), அடைப்புக்குறிகள் (), அழுத்தம் (கீழ்க்கோடு) போன்றவற்றின் பயன்பாட்டையும் காணலாம்.

தரிப்புக்குறிகளைத் தமிழுக்கு அறிமுகப் படுத்தி அவற்றுக்கான இலக்கணத்தை வகுத்த வர், **ஆறுமுக நாவலர்** எனும் பதிவினை நாம் பரவலாகக் காணமுடிகிறது. இருப்பினும் 1759ஆம் வருடம் ஈழத்து **மெல்ஹொ பாதிரியார்** அவர்கள், தாம் கொழும்பில் பதிப்பித்த புதிய ஏற்பாட்டிலும் அவரின் பிற நூல்களிலும் தரிப்புக்குறிகளைப் பொருத்தமாக தமிழில் உப யோகித்து உள்ளமையை ஆதாரங்களின் வாயி லாகக் காணமுடிகிறது. (ஆதாரம் - 'மெல்ஹொ பாதிரியார் மொழிபெயர்த்த புதிய ஏற்பாடு (கி.பி. 1759)' - ஞானம் பாலச்சந்திரன், 2016).

தரிப்புக் குறிகளை, உரிய இடங்களில் உபயோகிக்கப்படாதவிடத்து கூறவரும் கருத்துகள், மயக்கத்தைத் தரவல்ல சந்தர்ப்பங்களை ஏற்படுத்திவிடலாம்.

***"ஏய்! போகாதே, நில்!"*** என்பது ***"ஏய், போகாதே, நில்."*** என்பதிலிருந்து கருத்தில் வேறுபடுவதுடன், ***ஏய்!*** மற்றும் ***நில்!*** ஆகியவற்றில் வரும் விளிப்புக்குறி உணர்ச்சிகளையும் வெளிப்படுத்துவதைக்காணலாம்.

## 4 - எமோஜி (Emoji)

***எமோஜி*** எனும் ***ஜப்பானிய*** மொழிச் சொல்லுக்கு (**Picture Character**) **படவுருவம்** என்பதை அண்மித்த மொழிபெயர்ப்பாகக் கருதலாம். அடிப்படையில் ***உணர்ச்சிகளை வெளிப்படுத்தும் நோக்கில்*** எமோஜி பயன்பாட்டிற்கு அறிமுகமாகி இருந்தாலும், தற்காலத்தில் இது இரு பிரதான நோக்கங்களில் உபயோகத்தில் உள்ளது.

1. உணர்ச்சிகளை வெளிப்படுத்தல்
2. சொற்களுக்குப் பதிலாக பயன்படுத்தல்

***கணிப்பொறியின் வளர்ச்சியுடன் பயன்பாட்டிற்கு வந்த உணர்ச்சிக் குறி***களில் 1990களில் இரண்டு குறிகளே பிரபல்யத்தில் இருந்தன.

### 1. மகிழ்ச்சி முகக் குறி :–)

விளக்கக்குறி ':', இணைப்புக் குறி '–', மூடிய அடைப்புக்குறி ')' ஆகியவற்றைத் தொடர்ச்சியாக எழுதும்போது ***சிரித்த*** முகமொன்றின் வெளிப்பாடு கிடையாக பெறப்படுவதைக் காணலாம். இக்குறி **மகிழ்ச்சியை**க் குறிக்க உபயோகமானது.

### 2. துக்க முகக் குறி :–(

விளக்கக்குறி ':', இணைப்புக் குறி '–', திறந்த அடைப்புக்குறி '(' ஆகியவற்றை தொடர்ச்சியாக எழுதும்போது **வாடிய** முகமொன்றின் வெளிப்பாடு கிடையாக பெறப்படுவதைக் காணலாம். இக்குறி **துக்கத்தை**க் குறிக்க உபயோகமானது.

**ஓர் உதாரணம் காண்போம் -**

மாணவன் 1 - நாளை, பாடசாலை இல்லையாம்.
மாணவன் 2 - அப்படியா :-)

மாணவன் 1 - நாளை, பாடசாலை இல்லையாம்.
மாணவன் 2 - அப்படியா :-(

இங்கு காட்டப்பட்ட உதாரணத்தில் 'பாடசாலை இல்லை' என்பதை அறிந்த இரண்டாம் மாணவன், முதலாம் சந்தர்ப்பத்தில் தனது ***மகிழ்ச்சியையும்*** இரண்டாம் சந்தர்ப்பத்தில் ***துக்கத்தையும்*** வெளிப்படுத்துவதைக் காணலாம்.


கணிப்பொறி தொழிநுட்பத்தின் வளர்ச்சியுடன் தற்போது ***ஆயிரக்கணக்கான உணர்ச்சிக் குறிகள்*** பயன்பாட்டில் வந்துள்ளன. முன்னர் குறிப்பிட்டவாறு இவை சொற்களுக்குப் பதிலாகவும் பயன்பாட்டில் உள்ளன.

**ஓர் உதாரணம் காண்போம் -**

நேற்று நான் வாசித்த 📕 அருமை.
ஆரம்பத்தில் 😊 தந்தாலும் இறுதியில் 🙁
வரத்தொடங்கி என் 💔.

**" 'மெல்லத் தமிழினிச் சாகும் – அந்த மேற்கு மொழிகள் புவிமிசை ஓங்கும்' என்றந்தப் பேதை உரைத்தான் "**

என்றுதான் மகாகவி பாரதி எழுதியுள்ளானேயொழிய, 'மெல்லத் தமிழினிச் சாகும்' எனத் தான் கருதுவதாக எங்குமே பாரதி எழுதவில்லை.



நேற்று நான் வாசித்த **புத்தகம்** அருமை. ஆரம்பத்தில் **மகிழ்ச்சியைத்** தந்தாலும் இறுதியில் **கண்ணீர்** வரத்தொடங்கி என் **இதயம் உடைந்தது.** என்பதை இங்கு காட்டியவாறு எழுதும் வழக்கம் தற்போது வந்துவிட்டது. இந்த நூற்றாண்டில் பிறந்தவர்கள், இவ்வாறு எழுதுவதை மிகச் சாதாரணமாக தமது நாளாந்த வாழ்வில் பயன்படுத்துகிறார்கள்.

## 5 - வரலாற்றிலும் இலக்கியத்திலும் படவுருவங்கள்

விடயதானங்களுக்குள் படவுருவங்களைக் காண்பது சற்று அந்நியமாகத் தோன்றினாலும் இது புதுவிடயமன்று. பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே **எகிப்திய** நாகரீகத்தில் இதன் பயன்பாட்டை நாம் கண்டுகொள்ளலாம்.

முன்னர் குறிப்பிட்ட மகிழ்ச்சி முகக் குறி மற்றும் துக்க முகக்குறி ஆகியன கணிப்பொறியின் வளர்ச்சியுடன் பிரபல்யம் அடைந்திருந்தாலும் இவற்றின் பிரயோகத்தை சில நூற்றாண்டுகளுக்கு முன்னரே அவதானிக்கமுடிகிறது.

17ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த **Robert Herrick** எனும் கவிஞர் தமது கவிதைகளில் மகிழ்ச்சி முகக் குறியைப் பயன்படுத்தியுள்ளார். 1862ஆம் வருடம் முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி **ஆபிரகாம் லிங்கனின்** உரை ஒன்றில் மகிழ்ச்சி முகக் குறியைக் காணமுடிகிறது. மேலும், 19ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த சில பத்திரிகைகள், இவ்வகை குறிகளை **Typographical Art** என பிரபல்யம் செய்ய முனைந்துள்ளன.

சென்ற நூற்றாண்டில், நவீன தமிழ் இலக்கிய முயற்சிகளிலும் ஆங்காங்கு பட உருவங்களில் கருத்துகளையும் உணர்ச்சிகளையும் வெளிக்கொணரும் முயற்சிகள் நடைபெற்றுள்ளன. ஈழத்துக் கவிஞர் **மஹாகவி** என அழைக்கப்பெறும் து. உருத்திரமூர்த்தி அவர்களின் குறும்பாக்களும் அவற்றுக்காக ஓவியர் **சௌ** என அழைக்கப்படும் கருணாகரன் சௌந்தரராஜா அவர்கள் வரைந்த ஓவியங்களும் இவ்விடத்தில் கவனத்தில் வருகின்றன.

### எகிப்திய படவுருவ எழுத்துகள்



### 17ஆம் நூற். கவிதையில் மகிழ்ச்சி முகக் குறி

ROBERT HERRICK
TO FORTUNE
Tumble me down, and I will sit
Upon my ruines (smiling yet :)
Teare me to tatters ; yet I 'le be
Patient in my necessitie.

### ஆபிரகாம் லிங்கனின் ஓர் உரை

the front of the platform and spoke as follows :

THE PRESIDENT'S SPEECH.

FELLOW-CITIZENS : I believe there is no precedent for my appearing before you on this occasion, [applause] but it is also true that there is no precedent for your being here yourselves, (applause and laughter ;) and I offer, in justification of myself and of you, that, upon examination, I have found nothing in the Constitution against. [Renewed applause.] I, however, have an impression that there are younger gentlemen

### 19ஆம் நூற். பத்திரிகை ஒன்றின் பகுதி

— Figiel.
W dwóch pismach, jednem petersburskiem i drugiem zagranicznem, znajdujemy ciekawy figielek... Są to dwa szeregi rysunków twarzy, wykonanych jedynie przy pomocy znaków drukarskich, a pomimo to posiadać mających różnorodne wyrazy..
Przedstawiają się one, jak następuje:



மஹாகவி



"நன்றி சொல்லுவேன் என் எதிரிற் தோன்று,
நாளை இரவு!" என்றனன். உட்சான்று
"நன்றிதல்ல," என்றிடினும்,
சென்று பிழை கண்டு கொண்டாள் -
1 + 1 = 3




**'மஹாகவி' பாடிய ஒரு குறும்பாவும் அதற்கான 'சௌ'வின் ஓவியமும்**

*100 குறும்பாக்களில் 'நன்றி சொல்லு வேன்..' எனும் குறும்பா இங்கு எடுத்துக் காட்டப்பட்டுள்ளது. இந்த குறும்பாவுடன் ஓவியம் இணையும்போது அது வெளிப்படுத் தும் கருத்தின் ஆழமும் உணர்ச்சியும் அடுத்த கட்டத்துக்கு வாசகனை அழைத்துச் செல் வதைக் கண்டுகொள்ளலாம்.*

***சிரித்திரன்*** *சஞ்சிகையை நடத்திய* ***சி. சிவ ஞானசுந்தரம்*** *அவர்கள், வரைந்த* ***பேச்சில்லா ஓவியங்களையும்*** *இவ்விடத்தில் ஞாபகத்தில் கொள்ளலாம். ஓர் எழுத்துகூட இல்லாமல் உணர்ச்சியுடன்கூடிய செய்தியைச் சொல்லு பவையாக அவை அமைந்துள்ளன. அவற்றுள் இரண்டு இங்கு காட்டப்பட்டுள்ளன.*

*இவற்றின் வாயிலாக* ***கூறவரும் செய்தியை அழுத்தமாக முன்வைப்பதற்கும் உணர்ச்சிகளை வெளிப்படுத்துவதற்கும் படவுருவங்கள் துணை செய் கின்றன*** *என்பது தெளிவாகிறது.*

## 6 - உணர்ச்சிக் குறிகளின் உருவாக்கம்

*முன்னர் குறிப்பிட்டவாறு பல்லாயிரக் கணக்கான உணர்ச்சிக் குறிகள் தற்போது பயன்பாட்டில் உள்ளன. இவை மொழிகள் கடந்து, கலாச்சாரங்கள் கடந்து, உலகளா விய ரீதியில் உணர்ச்சிகளை வெளிப்படுத்து வனவாக அமைகின்றன.*



சி. சிவஞானசுந்தரம்
(சிரித்திரன் சுந்தர்)



க. சௌந்தரராஜா
(சௌ)

*இத்தகு உணர்ச்சிக் குறிகளை உருவாக்கும் போது முகபாவங்கள், சைகைகள், உடல் மொழிகள் ஆராயப்படுகின்றன. ஆண் - பெண், பால் வேறுபாடுகள், பல்வேறு நாட் டினரது கலாசாரங்கள் - நம்பிக்கைகள் என் பன கவனத்தில் கொள்ளப்படுகின்றன.*

*இதன்காரணமாக இவை* ***அனைத்து மக் களிடமும் உணர்ச்சிகளை வெளிப்படுத்தும் ஊடக மாக உருவெடுத்துள்ளன.***

*உதாரணமாக,*

1. இருகரம் கூப்பிய உணர்ச்சிக்குறியானது நன் றியை அல்லது வணக்கத்தை தெரிவிப்பதற்காகப் பயன்படுகிறது.

## ஓவியர் சுந்தர், சிரித்திரன் சஞ்சிகையில் வரைந்த இரு பேச்சில்லா ஓவியங்கள்



2. கண்ணீர் சொட்டும் விழிகள் கொண்ட முகமானது கவலையைத் தெரிவிக்கின்றது.
3. இதயக்குறியானது அன்பை – காதலை வெளிப்படுத்துகின்றது.
4. பெருவிரலை உயர்த்திய கரம், ஆமோதித் தலைக் காட்டுகின்றது.
5. பெருவிரலும் சுட்டுவிரலும் சேர்ந்த கரம், சிறப்பு மற்றும் உற்சாகமூட்டலுக்குப் பயன்படுகிறது.

ஜப்பான் நாட்டைச் சேர்ந்த **Shigetaka Kurita** என்பவர், ***எமோஜி உணர்ச்சிக் குறிகளின் தந்தை***யாக பொதுவாக அடையாளப் படுத்தப்படுகிறார். இவர் உருவாக்கிய 176 உணர்ச்சிக் குறிகள் 1999ஆம் வருடம் கைப் பேசிகளில் முதற் தடவையாக உள்ளடக்கப் பெற்றன. ஆரம்பகட்ட கணிப்பொறி தொழி நுட்பத்தில் உருவாக்கப்பட்ட இவ்வுருவப் படங்கள் தற்போது பயன்பாட்டில் இல்லை.

---


**எமோஜி உணர்ச்சிக் குறிகளின் தந்தையாக கணிக்கப்பெறும் Shigetaka Kurita. இவர் உருவாக்கிய நான்கு உணர்ச்சிக் குறிகளின் பழைய வடிவமும் அவற்றின் தற்போதைய வடிவமும் வலது புறத்தில் காட்டப்பட்டுள்ளன.**




Shigetaka Kurita




உருவாக்கிய 176 உணர்ச்சிக் குறிகளில் சில.



**ஏழு உணர்ச்சிகளை இருவர் காட்டலும் அவ்வுணர்ச்சிகளுக்கான உணர்ச்சிக் குறிகளும்**



| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| சமநிலை | கவலை | மகிழ்ச்சி | ஆச்சரியம் | வெறுப்பு | கோபம் | பயம் |

இவை அமெரிக்காவில் உள்ள நிவ்யோர்க் நகரத்திலுள்ள நூதனசாலையில் சேகரித்துப் பாதுகாக்கப்படுகின்றன. இருப்பினும் இவர் உருவாக்கிய 176 உணர்ச்சிக் குறிகள்தான் தற்போதைய ஆயிரக்கணக்கான உணர்ச்சிக் குறிகளின் வளர்ச்சிக்கு வித்திட்டன.

## 7 - எமோஜி ஒரு மொழியா?

எமோஜி உணர்ச்சிக் குறிகளானவை, எழுத்துகளை நியமப்படுத்தும் **யுனிகோட்** வரையறைக்குள்ளும் உள்ளடக்கப்பட்டுள்ளன. இந்தப் பின்னணியில் எமோஜி ஒரு மொழியா? எனும் ஒரு கேள்வியை எதிர்கொள்ள வேண்டிய நிலையில் மொழியியலாளர்கள் உள்ளனர்.

பிற மொழிகளைப் போன்று எமோஜி உணர்ச்சிக் குறிகள், **இலக்கண வரையறைகளை முழுமையாக பின்பற்றாத காரணத்தால் அதனை ஒரு மொழியாக இன்றுவரை மொழியியலாளர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை.** இருப்பினும் சிலர் அதனை ஒரு மொழியாகக் கொள்ளலாம் எனும் கருத்தினையும் முன்வைக்கின்றனர்.

இவற்றுக்கு மேலாக உணர்ச்சிக் குறிகள், மொழிகளைச் சிதைக்கின்றன எனும் குற்றச்சாட்டுகளையும் பரவலாகக் காணமுடிகிறது.

இவ்வாறான மாறுபாடான கருத்துகள் முன்வைக்கப்பெறினும், உணர்ச்சிக் குறிகளின் வகிபாகத்தையும் தாக்கத்தையும் யாரும் மறுக்கிறார்கள் இல்லை.


நாங்கள் உரையாடும் சந்தர்ப்பங்களில் கூறும் வார்த்தைகளுடன் சேர்த்து எமது முகபாவங்களினாலும் சைகைகளுடன் கூடிய உடல் மொழியினாலும் உரையாடுகிறோம். குரலின் ஏற்றத் தாழ்வினால் உணர்ச்சிகளையும் வெளிப்படுத்துகிறோம். இவை உரையாடலை மேன்மைப் படுத்துகின்றன. இதுபோன்றே **எமோஜி உணர்ச்சிக் குறிகளும் உரையாடல்களை மேன்மைப்படுத்துகின்றன.**

செவிப்புலன் குறைவுடைய மாற்றுத் திறனாளிகளுக்குத் தனித்த **சைகை மொழி** உள்ளமை பலரும் அறிந்ததே. சைகை மொழியில், சொற்களுக்கு தனித்தனியே சைகைகள் இருப்பதுடன் ஒவ்வொரு எழுத்துகளுக்கும் சைகைகள் உள்ளன. இதன் மூலமாக சைகை நியமப் படுத்தப்படாத புதிய சொற்களையும் எழுத்துகளுக்குரிய சைகைகளைக் கொண்டு உரையாடிவிடலாம்.

| | | | |
|---|---|---|---|
| 😊 | சிரிப்பை - மகிழ்ச்சியை வெளிப்படுத்தல் | 👍 | ஆமோதிக்கும் உணர்வை வெளிப்படுத்தல் |
| 😂 | வேடிக்கை உணர்வை வெளிப்படுத்தல் | 👎 | நிராகரிக்கும் உணர்வை வெளிப்படுத்தல் |
| 🤣 | அடக்கமுடியாத சிரிப்பை வெளிப்படுத்தல் | 👌 | சிறப்பு என்று உற்சாகமூட்டும் உணர்வை வெளிப்படுத்தல் |
| 🥰 | காதலை - அன்பை வெளிப்படுத்தல் | 🤞 | காரியம் வெற்றிபெறவேண்டும் எனும் உணர்வை வெளிப்படுத்தல் |
| 😛 | முட்டாள்தனம் - கேலி உணர்வுகளை வெளிப்படுத்தல் | ✌️ | காரியம் வெற்றிபெற்ற உணர்வை வெளிப்படுத்தல் |
| 😡 | கோபத்தை வெளிப்படுத்தல் | 🙌 | வெற்றிபெற்ற மகிழ்ச்சியை - கொண்டாட்டத்தை வெளிப்படுத்தல் |
| 😢 | கவலையை வெளிப்படுத்தல் | 🤝 | கை குலுக்கும் மனநிலையை வெளிப்படுத்தல் |
| 😭 | அடக்கமுடியாத கவலையை வெளிப்படுத்தல் | 👋 | கையை ஆட்டி அறிமுகத்தை வெளிப்படுத்தல் |
| 😱 | கதறும் உணர்வினை வெளிப்படுத்தல் | 🤦 | 'ஐயோ' எனும் மன உணர்வை வெளிப்படுத்தல் |
| 😲 | நம்பமுடியாத ஆச்சரியத்தை வெளிப்படுத்தல் | 🤷 | 'எனக்குப் புரியவில்லை' எனும் மன உணர்வை வெளிப்படுத்தல் |
| 😴 | நித்திரையை அல்லது களைப்பை வெளிப்படுத்தல் | ❤️ | காதலை - அன்பை வெளிப்படுத்தல் |
| 😘 | அன்பு நிறைந்த முத்தம் தருதலை வெளிப்படுத்தல் | 💔 | இதயம் உடைந்த மனநிலையை வெளிப்படுத்தல் |
| 🥺 | கண்கலங்கும் உணர்வை வெளிப்படுத்தல் | 💯 | 100 சதவீதம் உண்மை என வெளிப்படுத்தல் |
| 🤫 | இதுபற்றி பேசவேண்டாம் எனும் எச்சரிக்கையை வெளிப்படுத்தல் | ✋ | கையுயர்த்தல் அல்லது நிறுத்தும்படி கூறும் உணர்வை வெளிப்படுத்தல் |
| 🤗 | அணைக்கும் உணர்வை - அன்பை வெளிப்படுத்தல் | 🤙 | தொலைபேசியில் அழைக்கவும் எனும் செய்தியை வெளிப்படுத்தல் |
| 🤥 | பொய் கூறுகிறாய் - பொய்ச்செய்தி என்பதை வெளிப்படுத்தல் | 🙏 | நன்றி அல்லது வணக்கத்தை வெளிப்படுத்தல் |

**பிரபல்யமான சில உணர்ச்சிக் குறிகள்**

## இலங்கையில் பயன்பாட்டிலுள்ள தமிழ் சைகை மொழி





சைகை மொழியினை ஒருசேர நிறுத்தி, உணர்ச்சிக் குறிகளை நோக்கும்போது எமோஜியை ஏன் ஒரு மொழியாக கருதக் கூடாது? என எண்ணத்தோன்றுகிறது. அல்லது **‘இலக்கியம் கண்டு அதற்கு இலக்கணம் இயம்பல்’** என்பதற்கு அமைய எதிர்வரும் காலத்தில் எமோஜியானது மொழி எனும் அந்தஸ்த்தைப் பெற்றுக்கொள்ளுமா? அதற்கும் இலக்கணம் வகுக்கப்பெறுமா? போன்ற வினாக்களுக்கு விடைகளை வரையறுப்பது தற்போதைய நிலையில் சிரமமான பணி; பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும்.

எது எவ்வாறு இருப்பினும், விரும்பியோ விரும்பாமலோ உணர்ச்சிக் குறிகளின் பயன்பாடு, தமிழ் மொழியில் ஊடுருவிவிட்டது என்பது நிதர்சனம்.

### 8 - **பரீச்சார்த்த முயற்சி**

*21ஆம்* நூற்றாண்டு தமிழ் மொழியில் இடம்பிடித்துவரும் எமோஜி உணர்ச்சிக் குறிகளை, தமிழ் இலக்கியப் படைப்புகள் உள்வாங்கினால் எவ்வாறு இருக்கும்? எனும் எண்ணம் எழுவதை தவிர்க்கமுடியாதுள்ளது.

இந்த உந்தலினால் மேற்கொண்ட பரீச்சார்த்த முயற்சியாக உணர்ச்சிக் குறிகளை உள்ளடக்கி **தாம்பத்தியம்** எனும் ‘குட்டி’க் கதை இங்கு தரப்பெற்றுள்ளது.












# தாம்பத்தியம்

“கண்ணன் ஃபோன் பண்ணினான்.. ஒரு பிரச்சினையும் இல்லையாம். பாடசாலை டூர் நல்லா போகுதாம்.

நாளை மாலைதான் திரும்புவான்.” அவளின் குரலில் நெகிழ்ச்சி.

“ம்..”

“என்ன ம்...”

“மகன் பிறந்து பதினைந்து வருடங்களுக்குப் பிறகு இன்றுதான் நாங்கள் இரண்டுபேரும் மீண்டும் தனியே இருக்கிறோம் அதுதான் நினைத்துப்பார்த்தேன்.”

அவர்களுக்குப் பதினெட்டு வருட தாம்பத்தியம்.

“நான் என்ன செய்ய?”

“நாங்கள் ரெண்டுபேர் மட்டும்தானே இருக்கோம்.”

“ம்...”

“அப்படியெண்டால் கஷ்டப்படாதே.. இரவுச் சாப்பாட்டுக்கு உப்புமாவைக் கிண்டினால் போதும்.”





## 9 - நிறைவாக

ஐரோப்பியரின் வருகையின் பின்னர் தமிழுக்குள் உள்வந்த தரிப்புக் குறிகளைப் போன்று, ‘எமோஜி’ உணர்ச்சிக் குறிகளும் தமிழுக்குள் உள்வரத்தொடங்கியுள்ளன. தரிப்புக் குறிகளானவை, வாசகனுக்குத் தெளிவினைத் தந்து இலகுத்தன்மையை உருவாக்கி எடுத்துக்கொண்ட விடயப்பொருளை மேன்மைப்படுத்துவதுபோன்று, உணர்ச்சிக் குறிகளும் உணர்ச்சிகளைப் பிரதிபலித்து மேன்மைப்படுத்துகின்றன.

எமோஜி உணர்ச்சிக் குறிகள் ஒரு மொழியா? உணர்ச்சிக் குறிகளை உள்ளடக்கிய இலக்கியப் படைப்புகள் எதிர்காலத்தில் வெளிவருமா? ‘எமோஜி ஓர் உலகளாவிய பொதுமொழி’ எனும் அந்தஸ்த்தைப் பெற்றுக்கொள்ளுமா? உணர்ச்சிக் குறிகளுக்கும் இலக்கணம் வகுக்கப்பெறுமா? அல்லது உணர்ச்சிக் குறிகள், தமிழ் மொழியைச் சிதைக்கின்றன? போன்ற வினாக்களுக்கு காலம்தான் பதில்சொல்லவேண்டும்; காத்திருப்போம்.

# தைத் திங்கள் வழங்கும் தைப் பொங்கல் விழா

இரண்டாயிரம் ஆண்டுகால (சங்கமருவிய காலம்) வரலாற்றை உடையவரும் தமிழ் நாட்டில் பிறந்து வாழ்ந்தவருமான பேரறிஞர் திருவள்ளுவர் உழவுத் தொழில் பற்றி நன்கறிந்திருந்தமையால் "அது அனைவருக்கும் அச்சாணியாக அமையும்" என்ற கருத்துதனை

**உழுவார் உலகத்தார்க்கு ஆணி அ∴து ஆற்றாது**
**எழுவாரை எல்லாம் பொறுத்து**

என்னும் குறள் மூலம் மக்கள் மனதில் பதிய வைத்தார்.

உழவுத் தொழிலுக்குத் திருவள்ளுவர் வழங்கிய "போற்றுதல்" அவரது காலத்திற்கு முந்திய சங்ககாலத்திலும் அத்தொழில் வழக்கில் இருந்தது என்னும் உண்மையை உறுதி செய்யும். கி.பி. 12ம் நூற்றாண்டில் வாழ்ந்தவராகக் கொள்ளப்படும் கவிச் சக்கர வர்த்தி கம்பர் வேளாளரின் அருமை பெருமை பற்றிப் பாடியதாகக் கூறப்படும்

**மேழி பிடிக்கும் கை வேல் வேந்தர் நோக்கும் கை**
**ஆழி தரித்தே அருளும் கை – சூழ் வினையை**
**நீக்கும்கை என்றும் நிலைக்கும் கை நீடூழி**
**காக்கும் காராளர் கை**

(புலவர் அ. மாணிக்கம், தனிப் பாடல் திரட்டு – பக்கம் 93) என்னும்பா, வேளாளரின் மனதை நிச்சயம் வென்றிருக்கும்.

வள்ளுவரால், கம்பரால் வானளாவப் பாராட்டப்பட்ட உழவுத் தொழிலை மகாகவி பாரதியும் "உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்" என்று உரக்கவே சொன்னான். இவ்வுழவுத் தொழிலின் மிகப்பெரிய அடையாளமே தைப்பொங்கல்தான். இப் பொங்கல்விழா தைத்திங்கள் 14ஆம் அல்லது 15ஆம் நாளில் நடைபெறுவதை உலகமே அறியும். எனினும் சங்க காலத்தில் தை என்னும் தமிழ்ச் சொல் வழக்கில் இருந்தமையைச் சங்க இலக்கியங்களில் ஒன்றான "நற்றிணை"யில் உள்ள,

**தை இத் திங்கள் தண் கயம் படியும்**
**பெருந்தோட் குறுமகள்**

என்னும் பாடல் அடி வெளிப் படுத்தும். அதனால் இத்திங்களிலேயே (மாதத்தில்) தைப் பொங்கல் விழாவும் நடை பெற்றிருக்கலாம் என்று எண்ணத் தோன்று கின்றது)

தைப்பொங்கல் என்பது அக்காலத்தில் "அறுவடை விழா" என்று சொல்லப்பட்டதாக டாக்டர் அ. தட்சிணாமூர்த்தி கூறுவார். (தமிழர் நாகரிகமும் பண்பாடும் - பக்கம் 217) ஆயினும் மற்றுமோர் அறிஞரான முனைவர் கோ.ப. சுதந்திரம் இவ்விழா பற்றி எடுத்துரைக்கையில் (தமிழர் தம் மரபுவழி வாழ்வில் இலக்கியத்தின் செயற்பாடுகள் - பக்கம் 42) இதனை இயற் கைக்கும் கால் நடைக்கும் நன்றி கூறும் ஒரு பண்டிகையாகக் கொள்ளலாம் என்பார். இது பற்றி அவர் மேலும் தெரிவிக்கையில் இப் பொங்கல் பண்டிகை முதற்கண் "அறுவடை விழா"வாகத் தொடங்கிப் பின்னர் வளத்தைக் குறிக்கும் விழாவாக மாறியது என்றும் "பொங்கல் விழா" என்பது சமயச் சார்பு இல் லாத உழவர் சார்ந்த இயற்கையான ஒரு பழம் பெருவிழா என இப்பொங்கல் பண்டிகை சுட்டப்படுகின்றது என்றும் மொழிவார்.

ஆரம்பகாலத்தில் பொங்கல் விழா என்பது "அறுவடை விழா" என்று குறிக்கப் பட்டதுபோல அது "உழவர் விழா" என்றும் சொல்லப்பட்டிருக்கலாம். ஏனெனில் உழ வர் என்போரே நெல்விளையும் கழனி (வயல்) யோடு நெருக்கமாக வாழ்பவர்கள். இதனால்தான் அறிஞர் அண்ணா இதனை "உழவர் விழா" என்றே குறிப்பிட்டார். இதற்குத் திருவள்ளுவரின் உழவர் பற்றிய குறள்களும் பின்னணியாய் இருந்திருக்கலாம். உழவர் என்னும் சொல் உழுதப் பயன்படும் கலப் பையை நம் கண்முன்பே கொண்டு வருபவரையும், அறுவடை என்னும் சொல் நெற்கதிர்களை அரிய (அறுக்கப்) பயன்படுத்தப்பட்ட "அருவா" (அரிவாள்) கத்தியையும் நினைக்கச் செய்யும்.



வாகரைவாணன்

உழவர் விழா அல்லது அறுவடை விழா என்றதும் நமக்கு வயலும் வயல் சார்ந்த மருத நிலமுமே தோன்றும். குறிஞ்சியில் வேட்டுவனாக,

நெய்தலில் மீனவனாக, முல்லையில் ஆயனாக நிலங்களின் தன்மைக்கேற்பத் தொழில் புரிந்த பழந்தமிழர் பின்பு மருத நிலத்தில் உழவனாக, வேளாளனாக (வேள்-மண்) பரிணாம வளர்ச்சி அடைந்த வரலாற்றையும் நாம் அறிவோம். மேற்படி நான்கு நிலங்களில் அன்றும் இன்றும் முக்கியத்துவம் பெற்று விளங்கும். மருத நிலம் பற்றித் தாம் படைத்த கம்பராமாயணத்தில் கவிப் பேரரசர் கம்பர்,

**தண்டலை மயில்களாடத் தாமரை விளக்கம் தாங்க**
**கொண்டல்கள் முழவினேங்க குவளை கண் விழித்து நோக்கத்**
**தெண்டிரை எழினி காட்டத் தேம் பிழிமகர யாழின்**
**வண்டுகள் இனிது பாட மருதம் வீற்றிருக்கும் மாதோ!**

என்னும் அர்த்தங்கள் நிறைந்த அற்புதம் மிக்க பாடல் நானிலத்தில் ஒன்றான மருதத் தில் அவருக்கிருந்த மாறாத பற்றையே வெளிப்படுத்தும்.

உழவர் அன்று (சங்க காலத்தில்) தமது முதல் "அறுவடை" யில் பெற்ற புத்தரிசியைக் கொண்டு ஆக்கிய வெண்சோற்றை உண்டு மகிழ்ந்த காட்சியைச் சங்க இலக்கியங்களில் முதன்மை பெற்றுத் திகழும் "புறநானூறு" (பாடல் 61) இவ்விதம் படம் பிடித்துக்காட்டும்.

**கொண்டைக் கூழைத் தண்தழைக் கடைசியர்**
**சிறுமாண் நெய்தல் ஆம்பலொடு கட்கும்**
**மலங்கு மிளிர் செறுவின் தளம்புதடிந் திட்ட**
**பழன வாளைப் பரூஉக்கண் துணியல்**
**புதுநெல் வெண்சோற்றுக் கண்ணுறை ஆக**
**விலாப் புடை மருங்கு விசிப்ப மாந்தி**
**நீடு கதிர்க் கழனிச் சூடு தடு மாறும்**

புத்தரிசி வெண்சோற்றைப் பொய்கையில் பிடித்த வாளை மீன் கறியுடன் சேர்த்து உண்ட தனால் போதை தலைக்கேறிய உழவர் தடு மாறும் காட்சியைப் புலவர் மதுரைக் குமர னார் தமது பாமூலம் படம் பிடித்துக் காட்டுதல் உண்மையில் அழுகுதான்.

புத்தரிசி வெண்சோற்றைப் பழந்தமிழர் உண்டு மகிழ்ந்தது போல நாமும் தைப் பொங் கல் அன்று பக்கத்து வீட்டாரையும் பரிவோடு சேர்த்துக் கொண்டு "புதிர்" உண்டு மகிழ்ந்- தமை என்றும் மறக்க முடியாத நிகழ்வாகும். இந்நிகழ்வு அறிவார்ந்த திருவள்ளுவரின் "பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல்" என்னும் கோட்பாட்டை வெளிப்படுத்தியது. ஆயினும் இவ்வரிய சம்பவம் இன்று, காலச் சூழ்நிலை காரணமாக காணாமல் போய்விட்டதோ என்னும் கவலையை ஏற்படுத்துகின்றது.

தைப்பொங்கலை அடுத்து தமிழர் கொண்டாடும் விழா மாட்டுப் பொங்கல் அல்லது பட்டிப்பொங்கல் எனப்படும். தமிழ் நாட்டின் சேலம் மாவட்டத்தில் இது பட்டிப் பொங்கல் என்று சொல்லப்படுவதுபோல மட்டக்களப்பு மண்ணிலும் அதே பெயர் நிலவக் காண்கின்றோம். பட்டி என்பது காட்டுப் புறங்களில் மாடுகளைத் தங்க வைப்பதற்காக அமைக்கப்படும் ஓர் இடம் ஆகும். இதனை மட்டக்களப்புத் தமிழகத்தில் "காலை" என்றும் சொல்வர். "மரக்கால்" கொண்டு அமைப்பதினால் அது "காலை" (கால்+ ஐ) என்னும் பெயரைப் பெற்றிருக்கலாம்.

பொங்கல் விழாவை நாம் சூரியனுக்கு நன்றி சொல்லும் விழா என்றால் மாட்டுப் பொங்கலை மாடுகளுக்கு நன்றி சொல்லும் விழா என்றே கொள்ள வேண்டும். மாடு என்னும் சொல்லுக்குத் திருவள்ளுவர் "செல்வம்" என்று பொருள் தந்துள்ளதால் இதனைச் செல்வத்தின் விழா என்றே சொல்லலாம். தைப் பொங்கலை அடுத்து நடைபெறும் இவ்விழா மாடுகள் மீது தமிழர் மிக நீண்டகாலமாக (குறிப்பாக மருதநில மக்கள்) வைத்துள்ள அபிமா னத்தையே வெளிப்படுத்தும். இதனை மக்கள் பட்டிகளில் அடைக்கப்பட்டுள்ள மாடுகளுக்கு வழங்கும் "மாலை மரியாதை" எடுத்துக்காட்டும்.

பொங்கல் விழாவின் ஆரம்பமாக பொன் போல ஒளிரும் இளங்காலையிலேயே சூரி யனுக்குக் கொடுக்கப்படும் முக்கியத்துவம் பழங்காலத் தமிழரின் இயற்கை வழிபாட்டையே எடுத்துக்காட்டும். கி.பி. 5ம் நூற்றாண்டில் காரைக்கால் அம்மையார் முகம் காட்டும் முன்னம் தமிழ் நாட்டின் மக்களிடையே இயற்கை வழிபாடே இருந்தது என்பதும் அதன் பின்பே கி.பி. எட்டாம் நூற்றாண்டில் சைவ வைணவ சமயங்களின் செல்வாக்கு அதன் உச்சத்தைத் தொட்டது என்றும் தமிழ் அறிஞர் பெருமக்கள் விளம்புவர். இதனால் இந்தியாவிலேயே கோயில்கள் அதிகம் உள்ள நாடாகத் தமிழ்நாடு மாற்றம் பெற்றது. எதிர்பாராத இந்த மாற்றங்களால் தைப் பொங்கலும் தனது தனித்துவத்தை இழந்தது. எனினும் பெருமளவில் தமிழர் வாழும் ஒருசில பிரதேசங்களில் மாத்திரம் இன்றும் தைப் பொங்கல் விழா தமிழ் உணர்வோடு தலை நிமிர்ந்து நிற்கக் காண்கின்றோம்.


தை பதின்நான்கு (14) தமிழ்ப் புத்தாண்டின் பிறப்பு மட்டுமன்றி திருவள்ளுவரின் திருநாளாக வும் அழகும் அலங்காரமும் மிக்க "ஆரணி" (ஆர் + அணி) ஆகவும் ஒளிர்வதால் அத் தூய ஆண்டை கைகூப்பி வணங்குவோம், கனிவோடு வரவேற்போம்.

○○○

சிறுகதை



# கட்டாக்காலி



சுந்தரிமணியன்
(புதூர் – இந்தியா)

சூரியனின் வெளிச்சம் உச்சத்தைத் தொடும் மத்தியானப் பொழுதில் பனிமலர் தனது வீட்டில் அமர்ந்து துவரம்பருப்பை கை பார்த்துக் கொண்டிருந்தாள். அதிலிருக்கும் வண்டுகளைப் புடைக்கமுடியாமல் அவற்றைக் கையால் எடுத்தால் அது மனிதனைப்போல மயக்கமிடுவதும் கீழே போட்டவுடன் கொஞ்ச நேரத்தில் எழுந்து ஓடிவிடும் அதன் நேர்த்தியைக் கண்டு வியந்துபோனாள். வண்டிற்குக் கூட கடவுள் எவ்வளவு அறிவைக் கொடுத்திருக்கிறார்? ஏன் மனிதனுக்கு ஆறறிவு இருந்தும் இப்படியிருக்கிறான் என தனக்குத்தானே மனதிற்குள் வினவிக் கொண்டாள்.

இந்த மனுசன் எங்கே போனார்? ஆபிசில் நாளைக்கு மீட்டிங் என்றுதானே சொன்னார். இன்றைக்கு ஆளக் காணோமே... என்று வாசலைப் பார்த்தவளுக்கு செழியன் வரவில்லை என்றவுடன் மனதினுள் எழுந்த கோபம் கிர்ரென்று உச்சியில் ஏறியது. மனுசன் வாரத்தில் மூனுநாளாவது எங்காவது போகவிட்டால் சிந்துபைரவி படத்தில் தனக்குத் தெரிந்ததைப் பிறரிடம் சொல்லாவிட்டால் ஜனகராஜ் தலைவிரிவதுபோல இவருக்கும் தலைவெடித்துவிடுமோ என்று எண்ணியவாறே சரி சாப்பிடுவோம் என்று எழுந்து அடுக்களைக்குப் போனாள்.

செழியனுக்கும் பனிமலருக்கும் திருமணமாகி ஏழாண்டுகள் ஆகிவிட்டது. இருப்பினும் மனைவியிடம் சொல்லாமல் தனது உறவினர் வீட்டுக்கோ, நண்பர்களுடன் வெளியூர்களுக்கோ சென்றுவிடும் செழியனின் போக்கு மாறவில்லை. செழியனின் ஆச்சி திருமணமான புதிதிலேயே பனிமலரை எச்சரித்தாள்.

“அவன், அவங்க அப்பா, அம்மா மாதிரி வாரத்துல பாதிநாள் ஊரைச்சுத்திக்கிட்டே திரிவான். நீதான் அவனை அடக்கி வைக்கணும். உன் மாமனார், மாமியார் ரெண்டுபேரும் கவர்மெண்ட் சம்பாத்தியம் அவங்களுக்குக் கவலையில்ல. நீங்க அப்படிக் கிடையாது”


பனிமலருக்குத் திருமணமான புதிதிலேயே செழியனிடம் கடிந்து சொல்லமுடியவில்லை. கொஞ்ச நாள் கழித்து அவரிடம் பேசி சரி செய்யலாம் என்று காத்திருந்தாள். ஆனால் நாட்கள் செல்லச் செல்ல அவன் குணமே அப்படித்தான் யார் பேச்சையும் கேட்க மாட்டான் என்பது பிடிபட்டுப்போயிற்று. செழியனிடம் எங்கு சென்றாலும் என்னிடம் சொல்லிவிட்டுச் செல்லவேண்டும் என்று பனிமலர் சொன்னாலும் அவன் அதை ஒரு பொருட்டாக எண்ணுவதில்லை. சண்டை போட்டால் என்றால் ஒரு வாரத்திற்குப் பேசாமல் தான்தோன்றித்தனமாய்த் திரிவான்.

“யாரையும் அண்டாதீங்க. நமக்குன்னு நாலுபேர் வேண்டாமா? இப்படியே இருங்க”

என்று பேசி அவள் வாயை அடைத்துவிடுவான். அவளிடம் பேசவேண்டிய விசயங்களைக்கூட அவள் மகள் மலர்விழியிடம் கைபேசியில் சொல்ல, குழந்தை “சரிப்பா” என்று சொல்லி வைத்துவிடும். வீட்டிற்கு வந்தபிறகு கேட்டால் “நான்தான் தகவல் சொன்னேனே” என்று நழுவும் செழியனின் குணங்கள் அவர்களுக்குள் வெறுப்பையும் விரிசலையும் ஏற்படுத்தின. முந்தைய தலைமுறையிடம் இருந்த அன்னியோன்யம் இல்லாமல் போனது.

அவன் வாங்குகிற சம்பளத்தில் பாதி போக்குவரத்துக்குச் செலவானது. மீதி

சம்பளத்தில்தான் குடும்பத்தை ஓட்டவேண்டும். பிள்ளைகள் பெரிசாக ஆரம்பிக்கும் முன் ஏதாவது மிச்சம்பிடித்தால்தான் சேமிப்பு என்று ஏதாவது கையில் மிச்சமிருக்கும். இதை எவ்வளவு எடுத்துச் சொன்னாலும் அவனுக்குப் புரிவதில்லை. ஒரு நாள் உடல்நிலை சரியில்லாமல் காய்ச்சலில் உணவும் உண்ணாமல் கிடந்தாள். அதைப் பற்றிய எந்த அக்கறையும் இல்லாது செழியன் ஊர்சுற்றக் கிளம்பிவிட்டான்.



இரவு வீட்டிற்கு வந்து சாப்டியா என்று கூடக் கேட்காமல் மலர்விழியிடம் வந்து “அம்மா சாப்டாளா?” என்று கேட்டான். இதைக் கவனித்த பனிமலர்,

“ஏன் இருக்கனா? செத்தனா என்று பார்க்கவந்தீர்களா?” என்று கேட்டாள்.

“இதற்குத்தான் உங்கிட்ட பேசறதே இல்ல. எது சொன்னாலும் எசலிக்கிட்டே இருக்க” என்று செழியன் பதில் கூற,

“ஆமா காலையிலேர்ந்து காய்ச்சல்ல கிடக்கேன். மாத்திரை வாங்கிக் கொடுக்க, ஒரு வார்த்தை சாப்டியா? என்று கேட்க மனசு வரமாட்டேங்குது. வருசம்பூரா உங்களுக்குச் சமைச்சுக்கொட்ட, துணிதுவைச்சுப் போட, பிள்ளைகளைப் பார்க்க மட்டும் வேலைக்காரி மாதிரி நான் இருக்கனும். எதுவுமே பேசக் கூடாது. நீங்க என்ன செஞ்சாலும் ஊமையா வாயமூடி இருக்கனும்” என்றாள்.

“ஆரம்பிச்சுட்டா” என்று சலித்துக்கொண்டே கடந்து போனவனைப் பார்த்துத் தன்னையும் மீறி எட்டிப்பார்த்த கண்ணீரைச் சேலையில் துடைத்தாள். உடல்நிலையோடு மனநிலையும் சேர்ந்து வீணாய்ப்போனது.

செழியனைப் பற்றிய ஒரே ஆறுதல் பிள்ளைகளிடம் கொஞ்சம் அக்கறையாகவும் அன்பாகவும் இருப்பான். தன்னிடம் பிரியமில்லாவிட்டாலும் பிள்ளைகளிடம் அன்பாகத் தானே இருக்கிறான் என்று தன் மனதிற்குள் ஆறுதல் பட்டுக்கொள்வாள் பனிமலர்.

நாளடைவில் எதிர்பார்ப்புகள் இருக்கப் போய்த்தானே மனது வலிக்கிறது. எதிர்பார்ப்பைக் குறைத்துக்கொண்டு பிள்ளைகளுக்காக வாழப் பழகிக் கொள்வோம் என்று விட்டேத்தியாக இருக்கத்தொடங்கிவிட்டாள்.

சரியாகச் சாப்பிடுவது கூடக்குறைந்து போனது பனிமலருக்கு. மனதின் இறுக்கம் தந்த வேதனை அவளது உடம்பையும் இளைக்கச் செய்தது. சங்க இலக்கியத்தில் தலைவனை நினைத்து தலைவி மெலிவதால் கைவளையல்கள் கழன்று மேனியில் பசலை படரும் என்று படித்திருக்கிறாள். அது அன்பின் வெளிப்பாடு. ஆனால் இவளுக்கு அவனால் ஏற்பட்ட மனவேதனையிலும் விரக்தியிலும் உடல்மெலிகிறது. இதை யாரிடம் போய்ச் சொல்வது?

செழியனுக்கும் அவளுக்கும் ஏற்பட்ட சண்டையில் ஒரு நாள் கோபத்தின் உச்சமாய் பனிமலர் என்ன செய்வது என்று தெரியாமல் வீட்டில் இருந்த பினாயிலை எடுத்துக் குடித்துவிட்டாள். குடித்தபிறகு அவள் உடலும் மனமும் படபடத்தது. பிள்ளைகள் இருவரும் தனக்கு ஏதாவது நேர்ந்தால் அநாதையாகி விடுவார்கள், அந்தப் பிஞ்சு முகங்கள் இரண்டும் மனதில் வந்து அவளை நிலைகுலைய வைத்தன. வேறுவழியின்றி உண்மையைச் செழியனிடம் சொன்னாள். பதறிப்போய் செழியன் உள்ளூர் மருத்துவமனையில் சேர்க்க, அத்தனையும் வாந்தியெடுக்கச் செய்தனர். அப்பொழுதும் வீணாய்ப்போனது பனிமலரின் உடலும் மனமும்தான். அந்தநேரம் பனிமலருக்குச் சமாதானம் சொன்னாலும், கட்டாக்காலி மாடு போல இன்னும் செழியன் வேலைசெய்யும் நேரம்போக, மற்ற எல்லா நேரமும் ஊர்சுற்றிக் கொண்டிருக்கிறான்.

❍❍❍

# நினைவில் நீங்காத இலக்கியவாதி சுலைமா சமி இக்பால்



அண்மையில் அதாவது 2024 ஜூன் மாதம் 07ஆம் திகதி பிரபல பெண் எழுத்தாளரான கலாபூஷணம் சுலைமா சமி இக்பால் அவர்கள் இறையடி சேர்ந்தார்கள்.

இலங்கைத் திருநாட்டின் சப்ரகமுவ மாகாணம், கேகாலை மாவட்டம், மாவனல்லை தேர்தல் தொகுதியில் அமைந்த, கிருங்கதெனிய என்ற கிராம சேவகர் பிரிவில் வசித்து வந்தவரே திருமதி. சுலைமா சமி இக்பால் அவர்கள். இவர் மாவனல்லையைச் சேர்ந்த மௌலவி **A.C.M.** இக்பால் அவர்களின் அன்பு மனைவியாவார். 03 பிள்ளைகளுக்குத் தாயுமானவர்.

1960ஆம் ஆண்டு ஜூன் மாதம் 15ஆம் திகதி பிறந்த சுலைமா சமி அவர்கள், களுத்துறை மாவட்டத்தின் தர்காநகர், மீரிப்பன்னையைப் பிறப்பிடமாகக் கொண்டவர். துந்துவையைச் சேர்ந்த காலஞ்சென்ற அப்துல் சமி - தர்கா நகரைச் சேர்ந்த காலஞ்சென்ற உம்மு தமீமா ஆகியோரின் மகளாகப் பிறந்த இவருக்கு, ஐந்து உடன் பிறப்புக்கள். ஆரம்ப வகுப்பு முதல் உயர்தரம்வரை தற்போதைய தேசிய பாடசாலையான தர்காநகர் முஸ்லிம் மகளிர் மத்திய கல்லூரியிலேயே இவர் கல்வி கற்றுள்ளார். பின்னர் அதே பாடசாலையில் சில வருடங்கள் ஆசிரியராகவும் பணி புரிந்துள்ளார்.

தென்னிலங்கையில் பேருவலை, தர்காநகர் போன்ற இடங்கள் காலங்காலமாக ஆன்மிகம் மற்றும் இலக்கியத் துறைகளில் முன்னணி இடம் பெற்றுத் திகழ்கின்றது. இங்கு பெண்கள் தனியிடம் பெற்றுத் திகழ, ஏக காலத்துப் படைப்பாளி சுலைமா சமி தனது பாடசாலைக் காலத்திலிருந்தே "தினகரன்" பத்திரிகையின் வழியாக பேனா பிடித்தவர். தினகரன் பத்திரிகையில் மூத்த எழுத்தாளர் தமிழ்மணி, தாஜூல் உலூம் மானா மக்கீன் அவர்களின் பொறுப்பில் இருந்த, "கண்டதுண்டா, கேட்டதுண்டா" மற்றும் "லைட்ரீடிங்" ஆகிய இரண்டு பத்திரிகைப் பக்கங்களிலும் தனது ஆக்கங்களை எழுதிக் கால் பதித்தார். 1977ஆம் ஆண்டில் அதாவது சுலைமா சமி அவர்களுடைய 17ஆவது வயதிலேயே இவரது முதலாவது பத்திரிகை ஆக்கம், மூன்று சத முத்திரை பொறித்த அஞ்சல் அட்டையில் அனுப்பப்பட்டு, மானா மக்கீன் அவர்களின் கரங்களுக்குச் சென்றதாக மூத்த ஆளுமை மானா மக்கீன் அவர்கள் மூலமே தகவல் அறியக் கிடைத்தது. மேலும் "கண்டதுண்டா கேட்டதுண்டா?" என்ற பகுதியில் ஒரு துணுக்கினை எழுதியதன் மூலமே இவருடைய எழுத்துப் பயணம் ஆரம்பித்ததாகவும் அவர் குறிப்பிட்டார்.

இதே காலகட்டத்தில் ஜும்ஆ, முஸ்லிம் ஆகிய இஸ்லாமிய சஞ்சிகைகளிலும் இவரது ஆக்கங்கள் வெளிவந்துள்ளன. தொடர்ந்து சிந்தாமணி, தினகரன், நவமணி, தினக்குரல், வீரகேசரி, விடிவெள்ளி போன்ற தேசிய பத்திரிகைகளிலும் பாமீஸ், உதயம், பிரியநிலா போன்ற சஞ்சிகைகளிலும் இவருடைய பல்வேறு வகையான ஆக்கங்கள் பிரசுரிக்கப்பட்டு வந்துள்ளன. சுமார் 04 தசாப்த காலங்களுக்கும் மேலாக இவர் எழுத்துப் பணிகளில் தொடர்ச்சியாக ஈடுபட்டு வந்துள்ளார்.

சுலைமா சமி, தர்கா நகர் சுலைமா சமி, சுலைமா சமி இக்பால் போன்ற பெயர்களிலேயே தனது படைப்புகளான சிறுகதைகள்,



**வெலிகம ரிம்ஸா முஹம்மத்**



கவிதைகள், கட்டுரைகள் போன்றவற்றை இவர் பத்திரிகைகள் மற்றும் சஞ்சிகைகளில் களப்படுத்தி வந்துள்ளார்.

அந்தவகையில் 60க்கும் மேற்பட்ட சிறுகதை களையும், அதிக அளவிலான கவிதைகளையும், நூற்றுக்கணக்கான கட்டுரைகளையும் எழுதி, ஊடகங்களில் பிரசுரித்து தனக்கென்று ஒரு இலக்கியத் தடத்தினை அவர் சிறப்பாகப் பதிவு செய்தார். அத்துடன் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன தமிழ்ச் சேவை மற்றும் முஸ்லிம் சேவை போன்ற வானொலி நிகழ்ச்சிகளினூ டாகவும் இவருடைய பல்வேறு வகையான ஆக்கங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. குறிப் பாக 1984 முதல் 1996 வரை இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன முஸ்லிம் சேவையில் ஒலிபரப்பப்பட்ட நெஞ்சோடு நெஞ்சம் மாதர் மஜ்லிஸ் நிகழ்ச்சியில் பிரதித் தயாரிப்பாளராக இருந்து, நூற்றுக்கணக்கான பிரதி ஆக்கங்களை இவர் சமர்ப்பித்துள்ளார். எனவே தனது படைப்புகளின் மூலம் சமூக சிந்தனையுள்ள, ஒரு சிறந்த எழுத்தாளராக இவர் மிளிர்ந்தார் என்பதில் மாற்றுக் கருத்துகளுக்கு இடமில்லை.

திருமணத்தின்பின் ஒரு பெண் எழுத்துத் துறையில் நீடித்து நிற்பதென்பது கேள்விக்குரிய விடயம்தான். பல பெண் எழுத்தாளர்கள், திருமண வாழ்வில் நுழைந்த பின்னர் எழுதுவதையே நிறுத்திவிடுவதுண்டு. அல்லது மிகவும் சுருக்கிக்கொள்வதுமுண்டு. ஆனால் சுலைமா சமி அவர்களது நிலை இதற்கு மாறாக அமைந்துவிட்டது. அவரை மென்மேலும் எழுதத் தூண்டுவதும், உற்சாகப்படுத்துவதும், வெற்றிக்குத் துணை நின்று உழைப்பதும் தன் கணவர்தான் என்பதை சுலைமா சமி அவர்கள் பல இடங்களில் கூறியுள்ளார். இவருடைய எழுத்து முயற்சிகளில் அவரது கணவரான மர்ஹூம் **A.C.M.** இக்பால் மௌலவி அவர்களின் பங்களிப்புப் பற்றியும் இங்கு நினைவு படுத்தியாக வேண்டும். எக்மி பதிப்பகம் என்ற பெயரில் ஒரு பதிப்பகத்தை உருவாக்கி, அதன் மூலம் சுலைமா சமி அவர்களின் ஒரு சில நூல்களையும் இவரே வெளியிட்டுக் கொடுத்தார்.

இவருடைய படைப்புகளைப் பொதுவாக நோக்கும் போது பெரும்பாலான சிறுகதைகளில் சமூக அவலங்கள் பிரதிபலிக்கும். அத்துடன் நாட்டு நடப்புகள், பெண்கள் எதிர்நோக்கும் துயரங்கள், பல்வேறு வகையான பிரச்சினைகள் போன்றவை கதைகளில் அழகாக வெளிப் படுத்தப்பட்டிருக்கும். சமூகத்தில் புரையோடிப் போயுள்ள மூடநம்பிக்கைக் கொள்கைகளைக் களைவதிலும் இவருடைய சில சிறுகதைகள் துணை நிற்கின்றன. எமது நாட்டைப் பொறுத்தவரை பல்லின மக்களும் வாழுகின்ற ஒரு நாடு இது. இனங்களுக்கிடையே நல்லுறவும், புரிந்துணர்வும் இருந்தால்தான் நாடும், மக்களும் நன்றாக இருக்க முடியும். எனவேதான் இனங்களை இணைக்கின்ற சிறுகதைகளையும் இவர் எழுதியுள்ளார்.

1988ஆம் வருட காலங்களில் திஹாரிய இஸ் லாமிய அங்கவீனர் நிலையத்தில் விழிப்புலன் இழந்த மாணவர்களுக்கு ஆசிரியப் பணி செய்யும் போது இவர் அந்த மாணவர்களுடன் நெருங்கிப் பழகியதால் அவர்களின் உணர்வுகள், மனக்காயங்கள், எதிர்பார்ப்புகள், ஏக்கங்கள் என்பவற்றை இலகுவில் புரிந்து கொண்டு, அவற்றை வைத்தும் ஒரு சில சிறுகதைகளை இவர் எழுதியுள்ளார்.

அத்துடன் சமூக முன்னேற்றத்தை நோக்கிய முற்போக்குச் சிந்தனைகளை முன்வைப்பதிலும் இவருடைய சிறுகதைகள் பின்நிற்கவில்லை. பொதுவாக நோக்கும் போது இவருடைய இலக்கியப்பணி இஸ்லாமிய வரையரைகளுக்கு உட்பட்டு, அதன் வரம்புகளை மீறாது சமூகத் துக்கு கொடுக்க வேண்டிய செய்திகளை, விழிப்புணர்வை தனது எழுத்துக்களினூடாக வெளிப்படுத்துவதாகவே அமைந்தது. எனவே இவருடைய பல கதைகள் சமூகத்தில் விழிப் புணர்ச்சி ஏற்பட தூண்டலாக அமைந்து, சமூகத் தில் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது என்று குறிப்பிடலாம்.

பிரதேச, மாகாண, மாவட்ட, தேசிய ரீதி யாக நடைபெற்ற சிறுகதை, கவிதை, கட்டு ரைப் போட்டிகளில் பங்குபற்றி தனது படைப் புகளுக்காக பல பரிசில்களையும் பாராட்டுச் சான்றிதழ்களையும் இவர் பெற்றுள்ளார். அதிலும் குறிப்பாக 1997ஆம் ஆண்டு மாத் தளை மாவட்ட முஸ்லிம் காங்கிரஸ் மத்திய

குழுவினால் அகில இலங்கை ரீதியாக நடாத்தப்பட்ட சிறுகதைப் போட்டியில் முதலிடத்தைப் பெற்று, அப்போதைய முஸ்லிம் காங்கிரஸ் தேசியத் தலைவர் மர்ஹூம் ஆ.ர்.ஆ. அஷ்ரப் அவர்களினால் தங்கப் பதக்கம் வழங்கி கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடக்கூடிய விடயமாகும். தங்கப் பதக்கம் பெற்ற இந்த நிகழ்வை தனது வாழ்க்கையில் மறக்க முடியாத ஒரு நிகழ்வாகவும் இவர் குறிப்பிடுவார். ஏனென்றால் இவருக்குக் கிடைத்த இந்தத் தங்கப் பதக்கமானது இரண்டரைப் பவுண் எடையுள்ள அசல் தங்கத்தினாலான பதக்கமாக அமைந் திருந்ததாம். அப்போதைய அதன் பணப் பெறுமதி மிகவும் கூடிய தொகையாக இருந்ததாகவும் குறிப்பிட்டுள்ளார்.

2002ஆம் ஆண்டு தினகரன் பத்திரிகையும், கண்டி மக்கள் கலை இலக்கிய ஒன்றியமும் இணைந்து நடாத்திய "குறிஞ்சித் தென்னவன் நினைவு இலக்கிய விழாவில்'' அன்றைய மத்திய மாகாண கல்வி அமைச்சர் வீ. ராதா கிருஷ்ணன் அவர்கள் பொன்னாடை போர்த்தி இவரை கௌரவித்துள்ளார்.

இதைத்தவிர 2006ஆம் ஆண்டு அரச சாகித்திய சிறுகதைப் போட்டியில் "உண்டியல்'' என்ற இவருடைய சிறுகதை தேசிய ரீதியில் மூன்றாம் இடத்தைப் பெற்றுக் கொண்டது. 2006ஆம் ஆண்டு அரசியல் அமைப்பு அலுவல்கள் மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சு, தேசிய ஒருமைப்பாட்டு ஆக்கம் எனும் கருத்திட்டத்தில் நடாத்திய சிறுகதைப் போட்டியில் முதலிடம் பெற்று தங்கப் பதக்கத்தையும், கவிதைப் போட்டியில் மூன்றாவது இடத்தைப் பெற்று வெண்கலப் பதக்கத்தையும் இவர் பெற்றுக் கொண்டார்.

மேலும் 2007ஆம் ஆண்டிற்கான சப்ரகமுவ மாகாண சாகித்திய கலை நிர்மாணப் போட்டியில் இவருடைய சிறுகதைகள் அடங்கிய கையெழுத்துப் பிரதி இரண்டாம் இடத்தையும், 2008இல் இதே போட்டியில் இவருடைய சிறுகதைகள் அடங்கிய கையெழுத்துப் பிரதி முதலாம் இடத்தையும் பெற்றுக் கொண்டது. அத்துடன் 2011ஆம் ஆண்டிற்கான இதே போட்டியில் இவரது சிறுகதைகள் அடங்கிய பிரதி இரண்டாம் இடத்தையும் பெற்றுக் கொண்டது.

இதைத்தவிர 2008ஆம் ஆண்டு இந்தியாவின் நர்கிஸ் சஞ்சிகையும், மல்லாரிப் பதிப்பகமும் இணைந்து நடாத்திய சர்வதேச இஸ்லாமிய நாவல் போட்டியில் இவரது "ஊற்றை மறந்த நதிகள்'' என்ற நாவலுக்கு சிறப்புப் பரிசு கிடைத்தது. இதே அமைப்புக்கள் 2009ஆம் ஆண்டு சர்வதேச ரீதியாக நடாத்திய சிறுகதை, கவிதைப் போட்டிகளிலும் இவருடைய படைப்புகளுக்குப் பரிசு கிடைத்துள்ளது.

இன்னும் 2011ஆம் ஆண்டு இறுதியில் பாணந்துறையில் இயங்கும் "ஜனசங்கதய'' என்ற மனித உரிமைகளுக்கான அமைப்பு நடாத்திய தேசிய ரீதியிலான சிறுகதைப் போட்டியில் சிறப்புப் பரிசையும், அதே ஆண்டு மலையக தமிழ் எழுத்தாளர் மன்றம் நடாத்திய தேசிய ரீதியிலான சிறுகதைப் போட்டியில் ஆறுதல் பரிசையும் பெற்றுள்ளார். 2011ஆம் ஆண்டு அல்ஹஸனாத் இஸ்லாமிய சஞ்சிகை நடாத்திய நாடளாவிய சிறுகதைப் போட்டியிலும் இவருக்கு பரிசு கிடைத்துள்ளது.

2012ஆம் ஆண்டிற்கான மாவட்ட, மாகாண அரச சாகித்திய சிறுகதைப் போட்டியில் முதலாமிடத்தையும், கவிதை, பாடல் இயற்றல், சிறுவர் கதை ஆகிய போட்டிகளில் இரண்டாம் இடத்தையும் இவர் பெற்றுக் கொண்டுள்ளார்.

இவைதவிர களுத்துறை மாவட்ட முஸ்லிம் லீக் வாலிப முன்னணி, பம்பலப்பிட்டி இஸ்லாமிய செயலகம், தேசிய இளைஞர் சேவை மன்றம், முஸ்லிம் சமய கலாச்சாரத் திணைக்களம், கல்வி அமைச்சு, அரசாங்க கலாசாரத் திணைக் களம் போன்ற பல்வேறு அமைப்புக்கள் நடாத்திய இலக்கியப் போட்டிகளிலும் இவர் பரிசுகளைப் பெற்றுள்ளார்.

இவர் வெளியிட்ட நூல்கள் என்று பார்க்கும் போது, 04 சிறுகதைத் தொகுதிகளும் ஒரு நாவலும், ஒரு சிறுவர் பாடல் நூலுமாக மொத்தம் 06 நூல்கள் காணப்படுகின்றன. அவை பின்வருமாறு :-



01. 1987 இல் கல்ஹின்னை தமிழ் மன்றம் வெளியிட்ட "வைகறைப் பூக்கள்" (சிறுகதைத் தொகுதி)
02. 1988 இல் கல்ஹின்னை தமிழ் மன்றம் வெளியிட்ட "மனச் சுமைகள்" (சிறுகதைத் தொகுதி)
03. 2003 இல் சிந்தனை வட்டம் வெளியிட்ட "திசை மாறிய தீர்மானங்கள்" (சிறுகதைத் தொகுதி)
04. 2009 இல் எக்மி பதிப்பகம் வெளியிட்ட "ஊற்றை மறந்த நதிகள்" (சமூக நாவல்)
05. 2015 இல் எக்மி பதிப்பகம் வெளியிட்ட "நந்தவனப் பூக்கள்" (சிறுவர் கதைகள்)
06. 2018 இல் எக்மி பதிப்பகம் வெளியிட்ட "உண்டியல்" (சிறுகதைத் தொகுதி)

போன்ற 06 நூல்களை இவர் வெளியிட்டு ஈழத்து இலக்கியப் பரப்பில் முத்திரை பதித் துள்ளார்.

இவருக்குக் கிடைக்கப்பெற்ற விருதுகளில் முக்கியமானவையாகப் பின்வருவனவற்றை முன்வைக்கலாம்.

2002ஆம் ஆண்டு கொழும்பில் நடைபெற்ற "உலக இஸ்லாமியத் தமிழ் இலக்கிய மாநாட்டில்" இவரது இலக்கியப் பங்களிப்புக்காக விருது வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளார். அத்துடன் 2008ஆம் ஆண்டில் இவருடைய இலக்கியச் சேவைகளை கௌரவிக்கும் முகமாக, "அகில இன நல்லுறவு ஒன்றியம்" நடாத்திய பாராட்டு விழாவில் சாமஸ்ரீ கலாஜோதி பட்டமும், விருதும் வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளார். மேலும் 2013ஆம் ஆண்டு "இன ஒற்றுமைக்கான அகில இலங்கை தேசிய கவி சம்மேளனம்" என்ற சிங்கள அமைப்பு நடாத்திய விருது விழாவில் இவருக்கு "காவியப் பிரதீப" அதாவது கவிச் சுடர் என்ற பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளார். கடைசியாக 2022ஆம் ஆண்டில் அரச மட்ட விருதான கலாபூஷண விருதையும் இவர் பெற்றுள்ளார்.

இறுதியாக, "வாசிப்புத் தளத்தை விரிவுபடுத்திக் கொள்ளுங்கள். சிறந்த பயனுள்ள எழுத்துக்களை எழுதுங்கள். முஸ்லிம் எழுத்தாளர்கள், இஸ்லாமிய வரம்புகளை மீறாத முறையில் சமூகத்தின் மேம்பாட்டுக்காக எழுதுங்கள்'' என்று வளர்ந்து வரும் எழுத்தாளர்களுக்கு சுலைமா சமி அவர்கள் முன்வைத்த கருத்தை இங்கு நினைவுபடுத்தி நிறைவு செய்கின்றேன்.

○○○

# அம்பும் பாடலும்

வானம் நோக்கி நானும்
அம்பொன்றை எய்தேன்
வீழ்ந்தது அது பூமியில்
எங்கே என எனக்குத்
தெரியவில்லை
அப்பக்கத்தில் அது
விர் என வேகமாகப் பாய்ந்தது
அந்தப் பாய்ச்சலைப்
பின்பற்றி நோக்கவே
முடியவில்லை

பெருவெளியில்
ஒலிக்கும்படியாக
நானொரு பாடலைப்
பாடினேன்
அது பூமியை நிறைத்தது
எங்கே என்று எனக்குப் புரியவில்லை
கூரிய பலமான
பார்வை யாருக்குள்ளது
பாடலின் பாய்ச்சலை
பின்பற்றும் அளவுக்கு?

நீண்டநெடுங் காலத்தின்பின் ஒரு
மரமொன்றில் நான்
அந்த அம்பினைப்
பார்த்தேன்
இன்னும் முறிந்து
விடாமல்!
அந்தப்பாடல் ஆரம்பம் முதலாக
இறுதிவரை யுமாய்

நண்பன் ஒருவனின்
உள்ளத்தில் ஒலிப்பதை
மீண்டும்கண்ணுற்றேன்!

**ஆங்கில மூலம்**
**ரஹென்றி வேர்ட்ஸ்வேர்த் – லோங்பெலோ**
**தமிழ் வடிவம்**
**அன்னலட்சுமி இராஜதுரை**



# தைப்பொங்கல் – ஓர் உணவுத்தேட்ட விழாவாகும்

ஏலையா க.முருகதாசன்
(ஜேர்மனி)

மனிதன் எதனால் இயக்கப்படுகிறான் என்றொரு கேள்வியை முன்வைத்தால், இன்றைய நவீன உலகம் நவீன கணினித் தொழில்நுட்பத்தாலயே இயக்கப்படுகிறான் என கேள்வி கேட்ட அடுத்த விநாடியே வேக மாகப் பதில் சொல்லிவிடும்.

ஆனால் அந்தப் பதில் பொருத்தமான பதிலே அல்ல, பசியாலும் அந்தப் பசியைப் போக்கிய உணவாலுமே மனிதன் இயக்கப் படுகிறான் என்பது மட்டுமல்ல இன்றைய உலக நிர்மாணத்திற்கு இவையிரண்டுமே முழுக்காரணங்களாகும் என்பதே திடமான தெளிவான பதிலாகும்.

மிக இயல்பாக எமது தேடல் செல்லு மானால் பல விடயங்கள் எமக்கு முன்னால் விரியும்.

மனித குலத்தின் பன்முக வளர்ச்சியை பின்னோக்கிப் பார்த்து இந்த உலகம் இன்று அடைந்துள்ள வளர்ச்சிக்கு மனிதன் எதனைக் கருவியாகப் பயன்படுத்தினான் என்ற ஆய் வில் கிடைக்கும் ஒரே பதில், அவனது உடம்பு தான் அந்தக் கருவி என்பதாகும்.

மனிதனுக்கு பசி என்று ஒன்றில்லாவிட்டால் இந்த உலகம் முன்னோக்கி வளர்வதற்கு எந்தச் சாத்தியமுமே இல்லாதிருந்திருக்கும்.

ஆதி மனிதன் பூமியில் எவ்வாறு தோன்றி னான் என்பதற்கு மனித ஆய்வாளர்கள் பல் வேறு தோற்றங்களைக் காரணமாக கூறி வருகின்றனர். அவை முடிவில்லாத ஆய் வுகள். தோன்றிய மனிதனின் தேவைக்கு அடிப்படையாக அவனுக்கிருந்த உணவுப் பசியே அவனை உணவைத் தேடி அலைய வைத்தது.

காடுகளே மனிதனின் முதல் குடில், அதுவே முதல் இருப்பிடம். அங்கேதான் அவன் தனக்கான பசிக்கு உணவைத் தேடத் தொடங்கினான். பசி அவனை வாட்டி வதைத்த போது எதையாவது உண்டு தனது பசியைத் தீர்ப்பதற்காக மரங்களில் காணப்பட்ட காய் கனிகளையும் பின்னர் கிழங்கு வகைகளை யும் உண்ணத் தொடங்கினான்.

எது உடலுக்கு தீங்கு விளைவிக்காதது என்பது காட்டிடை வாழ்ந்த ஆதி மனிதனுக்குத் தெரிந்திருக்க முடியாது. அதனால் அவன் பசிக்காக உண்ட காய்கனிகளிலும் கிழங்கு வகைகளிலும் இருந்த விசத்தன்மை காரணமாக ஆதி மனிதர்களில் பலரை அவை இறக்கச் செய்தது. அப்பொழுது அவன் சிந்திக்கத் தொடங்கினான். அவன் உண்ட காய்கனிகளை பகுத்து எவை யெல்லாவற்றையும் உண்ணலாம் எவை விசத்தன்மையுள்ளவை என்று கணடறிந்து கொண்டதனால் உணவுத் தேடல் வளர்ச்சியே உலக மக்களிடம் காணப்படுகின்ற உணவு வகைகளாகும். ஒவ்வொரு இனக் குழுமமும் தமக்குகந்த இலகுவாகக் கிடைக்கக்கூடிய உணவை தமது பிரதான உணவாக்கியபோது அவை அந்தந்த இனக்குழுமங்களின் உணவுப் பண்பாடாக மாறி அடையாளமாகியது.

ஐரோப்பா, ஆபிரிக்கா, ஆசியா எனக் கண்டரீதியான பெரும் பிரிவாகப் பிரிக்கப் படுகையில் பொது உணவாக ஐரோப்பா வில் கோதுமையும், ஆசியாவில் அரிசியும், ஆபிரிக்காவில் அரிசியும் சோளனும் முக்கிய உணவாக இடம்பெற்றன

மேற்காட்டிய கண்ட மக்களிடம் இன்னும் பலவகையான துணை உணவுப் பொருட்கள் இருந்த போதிலும் பிரதானமானவையாக இருந்தவைதான் மேலே கூறியவையாகும்..

ஆசியாவைப் பொறுத்தவரை, ஆசிய நாடு களில் தமிழர்களும் வாழ்கின்ற காரணத்தால்

அவர்கள் தமது பிரதான உணவாக அரிசியைப் பயன்படுத்துதல் என்பது தொடர்ச்சியாக அந்த இன மக்களிடம் இருந்துவருகின்றது.

தமது பிரதான உணவான அரிசியை தமிழர்கள் கொண்டமை ஆதிமூலமானது அல்ல. அரிசியை அவர்கள் உணவாகப் பயன் படுத்துதலுக்கு முன்னர் சிறுதானியங்களான குரக்கன், சாமி, தினை என்பனவே தமிழர்களின் பிரதான உணவாக இருந்து வந்தன.

பண்டமாற்று வியாபாரத்தில் இந்த தானிய உற்பத்திகள்கூட இருந்திருக்கின்றன. இருப்பினும் இத்தானியங்கள் பெரும் வணி கத்தை நடத்தத்கூடிய பெரும் பொருளாக இருக்கவில்லை. அத்துடன் இத்தானியங்களை அறுவடை செய்து அவற்றை துப்பரவாக்கி உணவுக்குப் பயன்படுத்துவதற்கு பலபடி களைத் தாண்ட வேண்டியும் இருந்தது.

அரிசிக்கான நெல்லை தமிழர்கள் கண்டு பிடிக்கவில்லை. அதனைக் கண்டுபிடித்த வர்கள் சீனர்களும் பிற்காலப் பகுதிகளில் ஆபிரிக்கர்களும் என உணவு வரலாறு சொல் கின்றது. சீனர்கள் அரிசியைக் கண்டுபிடித்த வரலாற்றுக் காலம் பலவாக இருக்கின்றது. கி.மு.வுக்கு *2800* ஆண்டுகளுக்கு முன்னர் என்று ஒரு தகவலும், கி.முவுக்கு *11,000* ஆண்டுகளுக்கு முன்னர் சீனர் யங்கிசி ஆற்றுப்படுக்கையில் நெல்லைக் கண்டு பிடித் தார்கள் என்ற இன்னொரு தகவலும் இதை விட, ஆபிரிக்காவில் கி.மு.வுக்கு *1500* ஆண்டு களுக்கு முன்னரிலிருந்தே அங்கு நெல் பயிரிடப்பட்டு வந்தது என்ற தகவலும் உண்டு.

எந்த வரலாறாக இருந்தாலும் ஒரு புள்ளி யைக் அறுதியிட்டுக் காட்டி இங்கிருந்துதான் இந்தெந்த வரலாறுகள் ஆரம்பித்தன என்று எதையுமே வரையறுத்துக்கூற முடியாது உள்ளது. எந்தவொரு வரலாற்றாசிரியராலும், எந்தவொரு வரலாற்றாய்வாளராலும் எந்த வொரு வரலாற்றின் ஆரம்ப காலத்தை நிலைநிறுத்திச் சொல்லவே முடியாது.

அதுபோன்றதே நெல்லின் வரலாறுமாகும். தமிழருக்குள் இத்தானியம் அறிமுகப்படுத்தப் பட்டபோது, நெல்லைப் பயிரிடும் காலமும் அறுவடை செய்யும் காலத்துக்குமிடையிலான கால இடைவெளி ஆறுமாதங்களாக இருந்தன.

மழைக்காலத்தை அண்டியும் விதைக்கப் பட்ட நெல் ஆறுமாதங்களில் வளர்ந்து அறு வடைக்கு தயாராகிவிடும் என்பதை அவ தானித்துத்தான் தை மாதத்தில் நெல்லை அறுவடை செய்ய முடிந்தது.

தமிழர்களின் உணவாக இதுவரை காலமும் இருந்து வந்த சிறுதானியங்களின் இடத்தை சீனாவிலிருந்து வந்த நெல் ஆக்கிர மிக்கத் தொடங்கியது. அறுவடை செய்து பலபடித் துப்பரவாக்கல் மூலம் உணவாக்கிக் கொண்ட சிறு தானியங்கள் போல நெல்லை உணவுக்கான அரிசியாக்குவதில் சிரமங்கள் இருக்கவில்லை என்பதும் அரிசி சோறா கியபோது இதுவரை அனுபவித்திராத ஒரு சுவையை தமிழர்கள் அனுபவித்த காரணத்தி னால் அதனை மகிழ்ச்சியுடன் வரவேற்றனர்.

ஒரு உணவு மக்களிடம் வரவேற்பு பெற வேண்டுமெனில் முதலில் அதன் சுவையையே மக்கள் விரும்புவார்கள்.ஆரம்பகால மனிதர்கள் தொடங்கி இன்றுவரை சுவைதான் முதலிடம் வகிக்கின்றது.

காய்கனிகளையும், கிழங்கு வகைகளை யும் உண்டு வந்த மனிதன் ஏதோ ஒரு சந்தர்ப்பத்தில் விலங்குகளின் இறைச்சியை உண்டான், பின்னர், அதனை நெருப்பில் வாட்டியும் தேனில் ஊறவைத்தும் உண்டான். அதனால் மாறுபட்ட சுவையை அவன் உணரத் தொடங்கினான். அது அவனுக்குள் ஒரு தேடலானது. இவற்றை உணர்ந்த காட்டு மனிதன் காட்டு விலங்குகளின் இறைச்சியைப் பசியைப் போக்குவதற்காகவும், மாமிசத்தின் சுவையறிந்தும் உண்ணத் தொடங்கினான்.

இது போன்றதுதான் நெல்லும் தமிழர் களிடத்தில் பரவத் தொடங்கியது. இன்று பல்வேறுபட்ட நெல்லரிசிகள் உலகெங்கும் மனிதர்களால் பன்படுத்தப்படுகின்றன.. ஆறு மாதங்கள் என்பன சுருங்கி இரண்டு மாதங்களி லேயே அறுவடையாகக்கூடிய நெல்வகைகள் நவீன விவசாய விஞ்ஞானத்தால் உலகுக்கு கிடைத்து வருகின்றன..

அன்று தை மாதத்தில் அறுவடையாக்கி உரலில் இட்டு உமி நீக்கி அரிசியை கையி லெடுத்துப் பார்த்தவர்கள் அந்த மகிழ்ச்சியைக் கொண்டாட அந்த அரிசியை பானையில் இட்டு முற்றத்தில் வைத்துப் பொங்கினார்கள்.

உலக மக்களின் வாழ்வுக்கான ஆரம்பமே விவசாயமும் உணவுத் தேடலுமே. இன்றும் விவசாயந்தான் உலகை இயக்குகின்றது.

விவசாயத்தை வாழ்வாதாரமாகக்கொண்ட அன்றைய காலகட்டத் தமிழர்களால் அறுவடை செய்யப்பட்ட புத்தரிசியை ஒருவரைப் பார்த்து ஒருவராக பொங்கத் தொடங்கி அது முற்றத்துப் பொங்கலாகியது.

புத்தரிசிச் சோறு பின்னாட்களில் சுவைக் காக சக்கரையும் பாலும் சேர்க்கப்பட்டும், பொங்கலிட்ட பானையின் வாய்க்கு மேலாக பாலுடன் தண்ணீர் கொதித்து நுரை கிளம்பி வருதலை பொங்கிவிட்டது என மகிழ்ச்சியுடன் ஆரவாரித்துக் கூறியதால் பின்னர் பொங்கலாக விளிக்கப்பட்டு அது தொடர்கிறது.

அரிசி, பால், சர்க்கரை எனச் சேர்க்கப் பட்ட பொங்கல் இன்று ஏலக்காய், முந்திரிகை வற்றல், கஸ்கொட்டை ஆகியவற்றையும் பொங்கலிலிட்டு பொங்கும் நிலை உருவாகி யுள்ளது.

இன்னும் சிலரோ வாசனைக்கு வனிலாச் சுவையையும் பொங்கலில் சேர்க்கின்றனர்.

அறுவடைக் காலமான தை மாதத்தில் மிக எளிமையாக புதிய தானியம் கிடைத்த மகிழ்ச்சியில் அதை அனுபவிக்க பொங்கி மகிழ்நத தமிழர்கள் காலப்போக்கில் பொங் கும் இடத்தை மாட்டுச் சாணியினால் மெழுகியும், மாவால் சற்சதுரமாக மட்டுமே கோலம் போட்டுப் பொங்கலைச் செய்தனர்.

ஒவ்வொரு செயலும் இன்னொரு படி முறை வளர்ச்சிக்கான தேடலை நோக்கிச் செல்லும். பொங்கலிடும் இடத்தில் வண்ணப் பொடிகள் கொண்டு கோலம் போடுதலும், தென்னங்குருத்து தோரணம் கொண்டும் மாவிலை கொண்டும் சற்சுதுரமாக கயிறுகட்டி தோரணம் கட்டுதலும், இலைவாழைக் குட்டி களைக் கட்டுதல், கரும்பு கட்டுதல், மஞ்சள் செடி கட்டுதல் என்பன இடம்பெற்றன.

அறுவடை செய்த நெல் வெறும் உணவுக்காக மட்டுமல்ல, அது விவசாயிக்கு பொருளாதாரத்தை மேம்படுத்துகிற பணத்தை ஈட்டுகிற வணிகப் பண்டமாகவும், நெல் ஒரு மூலதனமாகவும் மாற்றமடைந்தது.

தைப்பொங்கல் என்பது காலப் போக் கில் தமிழர்களுடைய ஒரு விழாவாக கொண் டாடப்பட்டது. தை மாதம் முதலாம் திகதியில் பொங்கலிடுவதால் அதுவே தமிழர்களின் வருடப் பிறப்பெனவும் கொண்டாடப்படுகிறது. எனினும் தைப்பொங்கல் என்பது அறுவடையான நெல்லின் புத்தரிசியை பொங்கலிட்டு மகிழும் நாள் எனவும் சித்திரையில் வரும் வருடப் பிறப்பே தமிழர்களின் வருடப்பிறப்பு என்ற நம்பிக்கையும் அதனை ஏற்றுக் கொண்டு கொண்டாடும் தமிழர்களும் இருக்கவே செய் கின்றனர்.

தைப்பொங்கலைக் கொண்டாடும் தமிழர் களே சித்திரை வருடப் பிறப்பினையும் கொண்டாடி வருகின்றனர். ஆரம்ப காலகட்டங் களில் தைப்பொங்கலை தமிழர்களில் சைவத் தமிழர்களே கொண்டாடி வந்தனர் என்பதை வரலாற்றுப் பார்வையிலிருந்து பார்க்கும் போது அதனை நிராகரிக்கமுடியாது.

இந்தக் கட்டுரையை எழுதுகிற நான் சில விடயங்களை இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். எனதூரில் தைப்பொங்கல் கொண்டாடப்பட்ட காலங்களில் எனதூரில் வாழ்ந்த எனக்கு நன்கு தெரிந்த தமிழ்க் கிறீஸ்தவர்கள் இது ஒரு பொதுப் பொங்கல் என்று பார்க்கவும் இல்லை அவர்கள் இது விவசாயம் சம்பந்தப்பட்டது என்ற பொது நிலையில் கொண்டாடவுமில்லை.

எனது இந்தக் கருத்தானது தைப்பொங்கல் என்பது சைவத் தமிழர்களின் கொண்டாட்டம் என்ற கோணத்தில் சொல்லப்படவில்லை. தமிழ்க் கிறீஸ்வர்களில் சிலர் தைப்பொங்கலை விரும்பத்தகாத கொண்டாட்டமாக எள்ளலுடன் பார்த்துமிருக்கிறார்கள்.

தமிழ்க் கிறீஸ்தவர்களின் சைவத்தைத் தழு விய உறவினர்கள் பொங்கலிட்ட பொங்கலை தமது உறவினர்களுக்கு கொடுத்தபோது அதனை வேண்டா வெறுப்பாக வாங்கி அதை உண்ணாது எறிந்த சம்பவங்களும் உண்டு.

இன்று நவீன சிந்தனையும் முற்போக்கு எண்ணமும் கொண்ட தமிழ்ச் சமூகத்தில் தைப்பொங்கல் ஒரு சமயத்துக்குரியது அல்ல அது விவசாயிகளின் அறுவடை விழா என தொடர்ச்சியாகச் சொன்னதன் விளைவாக விவசாயிகளாக உள்ள சைவத்தமிழரல்லாத மற்றைய சமயத்தில் உள்ள தமிழர்களும் பொங்கலிட்டுக் கொண்டாடி வருகின்றனர்.

தைபிறந்தால் வழிபிறக்கும் என்ற சொற் பிரயோகம் தமிழர் சமூகத்துக்குள் தைப் பொங்கலிட்ட காலத்திலிருந்து காலம் காலமாக இருந்து வருவதாகும். அதற்குக் காரணம் அதில் பொருளீட்டல், பணம் சேர்த்தல் என்ற தேட்டமும் உள்ளீடாக இருப்பதுமேயாகும்.

நெல்லை விளைவித்த விவசாயி அறு வடையான நெல்லிலிருந்து தனது தேவை போக மிஞ்சிய நெல்லை, நெல்லாகவோ அரிசியாகவோ விற்பனை செய்வதன் மூலம் பணத்தை ஈட்டுவதும் இந்தப் பணத்தின் மூல மாக அவன் தனது குடும்பத்தில் திருமணங் களையோ, வீடு கட்டுதலையோ, பிள்ளைகளை படிக்க வைப்பதையோ அல்லது இன்னும் புதிய விவசாய நிலங்களை வாங்குவதற்கோ அப்பணத்தை பயன்படுத்துகிறான்.

அதனால்தான் ஒரு விவசாயின் குடும்ப நலன்கள் பூர்த்தியடைவதையே தைபிறந்தால் வழிபிறக்கும் என்பது அதற்கான ஈடேற்ற வழிகள் பிறக்கும் என்பதையும் குறித்து நிற்கும்.

நெல் என்பது ஒரு மூலதனமாகும். நெல்லின் அரிசியை வாங்கி உண்பவனுக்கு அது உணவாகவும் அதை விற்பவனுக்கு அது வணிகப்பொருளாகி பணத்தை ஈட்டிக் கொடுக்கின்றது.

எனவே தைப்பொங்கல் என்பது வேறு வேறு கருத்துக்களை வெளிக் கொணர்ந் தாலும், அதனுடைய மூலக்கருத்து தைப் பொங்கல் என்பது உணவுத்தேட்ட விழாவே யாகும். அதனை மறுக்க இயலாது. பசியும் உணவுமே உலகை இயக்குகின்றது.

○○○

---

# முஸ்லிம்கள் தமிழைக் காப்போம்

முன்னரெங்கள் முஸ்லிம்கள் தமிழை ஓர்ந்து
முறையாகக் கற்றார்கள் இலக்க ணத்தில்
தன்னிகரற் றிருந்தார்கள் தமிழ்ப்பா யாப்பில்
தலைசிறந்து காப்பியங்கள் படைத்திட் டார்கள்
கன்னலெனக் கவியமுதம் தந்திட் டார்கள்
காசினியில் முதன்மையுற்றுத் திகழ்ந்திட் டார்கள்
என்னவின்று எமதுநிலை எண்ணிட் டாலே
இதயமெலாம் நெருப்பாகத் தகிக்கு தன்றோ?

உள்ளதமிழ் இலக்கியத்தின் வகைக ளோடே
உயரியநற் புதுவகையும் உருவாக் கித்தம்
தெள்ளுதமிழ்த் திறன்காட்டித் தமிழ்த்தாய்க் கின்று
தொகைதொகையாப் பாச்சரங்கள் படைத்த ளித்தார்
எள்ளளவுங் குறைவிலையே முஸ்லிம் கள்தம்
எழுத்துலகில் சாதித்த சாத னைகள்
உள்ளநிலை இன்றென்ன வெனவோர்ந் தாலோ
உளம்நொந்து போகுதந்தோ உணர்வார் யாரோ?

நமதுமொழி தமிழ்நமது முன்னோர் செய்த
நற்றமிழின் பொற்சரங்கள் தமிழ்த்தாய் மார்பில்
அமர்ந்தழகு செய்குதவர் வழிவந் தோர்நாம்
அன்னியரைப் பின்தொடர் தேன் போக வேண்டும்?
சமகாலப் "பண்டிதர்கள்" தமிழைக் கொல்லச்
செய்கின்ற சதிக்கேன்நாம் உடந்தை யானோம்?
இமயமென உயர்ந்திருந்தோம் இன்றேன் நாமும்
எமதன்னை மொழியழியக் கரங்கொ டுத்தோம்?

மேநாட்டு "இஸங்க"ளிலே மோகங் கொண்டோர்
மொழிக்கின்று இலக்கணமே வேண்டாம் என்றார்
மேநாட்டு இலக்கியத்தின் மாற்றங் கண்டோர்
முறையான யாப்பெதற்கு கவிதைக் கென்றார்

தேனாட்டம் இருக்குமன்றோ கவிதை ஓசை
துள்ளுகின்ற போழ்தினிலே அதைம றந்தே
ஏன்நாட்டம் கொண்டனரோ எம்மோர் இந்த
இழிநிலையை எண்ணிமனம் வேகு தன்றோ?

வழிவழியாய்ப் பேணிவந்த மரபை மாற்ற
வேண்டிவந்த அவசியமென் பிறநாட் டாரின்
மொழிக்குகந்த வாறவர்கள் செய்யும் மாற்றம்
வேண்டுமெங்கள் மொழிக்குமென்றால் முறைய தாமோ
அழிவுக்கு வித்திட்டார் பிறர்நம் முஸ்லீம்
அறிஞர்களும் துணைநின்றால் எதிர்கா லத்தில்
மொழியழியும் தமிழ்முஸ்லீம் இலக்கி யங்கள்
முறையாகத் தோன்றாபின் நிலையபே றில்லை.

பலநூறாய் ஆண்டுகள்சென் றிட்ட போழ்தும்
பழந்தமிழின் இலக்கியங்கள் இன்றும் வாழும்
நிலைக்கவற்றின் கருவோடே அடிகள் தோறும்
நடைபோடும் சந்தத்தின் அழகு மாகும்
பலதேசத் தறிஞர்களும் இன்றும் ஒன்றிப்
போற்றுவதைத் தமிழைத்தான் புதுமை என்று
நிலையாத படைப்புகளை அல்ல அஃதை
நெஞ்சிருத்தித் தாய்த்தமிழைக் காக்க வேண்டும்

நூறாண்டு பின்செல்ல இந்நூற் றாண்டில்
நாம்செய்த தமிழ்த்தொண்டை ஆய்வு செய்தல்
தேறுவது எத்தனைதான் தொடர்ந்தும் இன்று
துணைநிற்கும் நமதுமுன்னோர் முதுசொல் ஒன்றே
வேறுபுதி தாகவொன்றும் பெருமை யோடு
விமர்சிக்க விலாதிருக்கும் முஸ்லீம் கள்நாம்
மாறிவழி செலாதெங்கள் மரபோ டிஸ்லாம்
வளர்த்ததமிழ் வழிதொடர்வோம் நிலைத்து வாழ்வோம்

**– ஜின்னாஹ் ஷரிபுத்தீன்**

சிறுகதை



# ஏன்?



பாலரத்னம் சரண்யா
தற்காலிக உதவி விரிவுரையாளர்,
கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

"அம்மா... ரொம்ப கஷ்டமா இருக் கும்மா...... முடியலம்மா... ரொம்ப கஷ்டப் படுத்துறாங் கம்மா... எனக்கு வாரப் பிரச்சனை களையெல்லாம் கடந்துப்போற என்னால அதுனால வார கவலைகள கடந்துப்போக முடியலம்மா..... உன் ஞாபகமாவே இருக் கும்மா...." தீடிரென தொலைப்பேசி சிணுங்கு கின்றது.

தன் கற்பனை உலகிலிருந்து வெளியில் வந்து பார்க்கின்றாள் கண்மணி. தன் கண்களை துடைத்துக் கொண்டு சோகத்தை தொண்டைக் குழியில் அடக்கி சிரித்துக் கொண்டே அம்மா என்கின்றாள்.

"என்னம்மா எப்படி இருக்க... ரொம்ப நாளாச்சி பேசவே இல்ல" என்றாள் அம்மா.

அப்போதுதான் அவளுக்கு ஞாபகம் வந்தது அம்மாவிடம் பேசி இரண்டு தினங்கள் ஆகிவிட்டன. "இல்லை அம்மா! சரியான வேல எல்லாம் முடிச்சிட்டு எடுக்கலானு இருந் தேன்..." என்றாள்.

"நம்ம பக்கத்து வீட்டு பாட்டி செத்து போச்சும்மா. செத்தவீட்டுக்கு வந்தவங்க எல்லாம் உன்னையே கேட்டுட்டு இருந்தாங்க. எல்லார்கிட்டயும் அவ கொழும்புல வேல இப்பலாம் லீவே இல்ல. அப்பிடினு சொன்னே. சரிம்மா.. இங்க ஒரே ஆக்களா இருக்கு அப்பறமா எடுக்குறே.." என்றாள் அம்மா.

சரிம்மா.. அழைப்புத் துண்டிக்கப்படுகின்றது. மறுபடியும் தனது கனவுலகத்திற்குள் நுழைய பார்க்கிறாள். அவளைப் பொறுத்தவரை அவளின் கஷ்டங்கள் அனைத்தையும் தனது கனவுலகத்தில் யாரேனும் ஒருவரை நினைத்து சொல்லித் தீர்ப்பதில்தான் அவளுடைய ஆறுதல் அடங்கியிருக்கின்றது. நிஜ உலகில் எந்த உறவிலும் அவளுக்கு நம்பிக்கை இல்லை.

கதவை தட்டும் சத்தம் கேட்கின்றது. எழுந்து போய் திறக்கின்றாள். ஓர் புதிய விருந்தாளி. ஆனால் உறவு பழையதுதான். உள்ளே வரும்படி அழைக்கின்றாள். நீண்ட நாட்களுக்கு பின் சந்தித்ததும் ஒருவரை ஒருவர் கட்டியணைத்து கொள்கின்றனர்.

எலுமிச்சை இலை சேர்த்து கொதிக்க வைத்த வடித்த கொட்டை வடிநீர் (black coffee) தயாரித்து, இருவரும் அமர்ந்து குடித்துக் கொண்டிருந்தனர். இடையில் தன்னுடைய கைப்பையிலிருந்து ஒரு அழைப்பிதலை எடுத்து நீட்டி "எனக்கு கல்யாணம் நீ கட்டாயம் ஒரு மாசத்துக்கு முன்னாடியே வந்திடனும்" என்றாள் இந்து. அவளும் சிரித்துக் கொண்டே "என்னடி இதபத்தி ஒரு வார்த்த கூட சொல்லவே இல்லையே" என்றப்படி பத்திரிகையை வாங்கிப் பிரித்துப் படித்தாள். "கள்ளி... இவனையா கல்யாணம் பண்ணிக்க போற, கேக்கும் போதெல்லாம் இல்ல இல்லனு சொல்லிட்டு ம்ம்ம்ம்..... கில்லாடிதான் போ...." என்றப்படி பத்திரிகையை மடித்து மேசையில் வைத்துவிட்டு கட்டாயம் வருவேன் என்றாள் கண்மணி.

சரிடி... இன்னும் நிறைய பேரைப் பாக்க போகனும் கட்டாயம் வந்திடு என்று கிளம்ப, அவளை வழியனுப்பியதும் தனது வழக்கமான சோபாவில் அமர்ந்து இடையில் படித்து வைத்த புத்தகத்தைப் புரட்டத் துவங்குகின்றாள் கண்மணி. ஆனால் அவள் மனது பழைய நினைவுகளை புரட்டத் துவங்குகின்றது.

*'அவ்வளவு எளிதல்ல அன்பினை தனதாக்கல்'* என்பது, அவளிடம் ஓர் குணம் உண்டு. எல்லோரிடமும் இயல்பாய் பேசி சிரிப்பது. யாரையும் தனக்காக பயன்படுத்திக் கொள்ள மாட்டாள். சில உறவுகள் தன்னை பயன் படுத்திக் கொள்ளத்தான் பழகுகின்றன என்று தெரிந்தாலும் சிரித்துக்கொண்டே அமைதியாய் அவர்களின் தேவைகளையும் பூர்த்திச் செய்வாள். யாரையும் எக்கணமும் காயப்படுத்தி விடக்கூடாது என்பதில் கவன மாய் இருப்பாள். தன்னை காயப்படுத்திக் கொண்டேனும் பிறர் நலம் காண வேண்டும் என்பதில் அதீத விருப்பம் அவளுக்கு அப் படியே அவள் அவளது அப்பாவை போல என்று அப்பாவின் உறவுகள் அவ்வப்போது கூறும் வார்த்தைகள் அவள் செவிகளில் ஒலித்துச் செல்லும்.

தன்னைச் சுற்றி எப்போதும் ஒரு கூட்டம் இருக்க வேண்டும், எங்கு சென்றாலும் என்னை அறிந்தவர்கள் இருக்கவேண்டும் என்ற எண்ணம் எப்போதும் அவளுக்கு உண்டு. பாவம் தனியாய் பிறந்து வளர்ந்தவள் அல்லவா. சிறு வயதில் இருந்து தாயின் அரவணைப்பை தாண்டி அவளிற்கு எதுவும் கிடைத்ததில்லை. தனக்கு கிடைக்காத அன்பையும், சுகத்தையும் உறவுகளையும் எப் போதும் தன்னை சுற்றி இருக்கும் சூழலில் தேடிக் கொண்டே இருப்பாள். அவளின் தேடுதலில் கிடைத்த உறவுகள் எதுவுமே அவளை சரியாகப் புரிந்துக் கொண்டதில்லை. அவளை சுற்றி இருந்த உறவுகள் அவளுடைய எதிர்ப்பார்ப்பற்ற அன்பை ஒவ்வொரு முறையும் நொறுக்கிக் கொண்டேயிருந்தன.

பாடசாலை நாட்களில் வகுப்பறையில் இவளை யாருக்கும் அவ்வளவாக பிடிக் காது. கருவண்டினை போல கறுத்த மேனி ஒழுங்காக சீவிவார்க்காத தலை, படிப்பிலோ விளையாட்டிலோ எவ்வித ஆர்வமும் அற்று எதையோ சிந்தித்தப்படியே இருப்பாள். இவளாக சென்று யாரிடம் பேசினாலும் யாரும் பெரிதாகப் பேசிக் கொள்ளமாட்டார்கள். பெரும்பாலும் தனித்தே வைக்கப்பட்டிருப்பாள். வகுப்பறையின் குழு செயற்பாடுகளில் கூட யாரும் சேர்த்துக் கொள்ளப்படமாட்டார்கள். தனியே யாருக்கும் தெரியாமல் போய் அழுதுவிட்டு மறுபடி வந்து வகுப்பறையில் ஒரு ஓரமாய் அமர்ந்துக் கொள்வாள். அப்போது அவளுக்கு ஒரு ஒன்பது வயதிருக்கும். ஒதுக்கப்படுத்தலின் வலியை அப்பொழுதே அனுபவிக்கப் பழகிவிட்டாள்.

ஆனால் அதற்காக அவள் ஒருபோ தும் யாரையும் வெறுத்ததில்லை. அவர்கள் தங்களின் வேலைகளுக்காக கேலி கிண்ட லுக்காக அழைத்தாலும்கூட சிரித்துக் கொண்டே அவர்கள் முன்போய் நிற்பாள். அவளிற்கு தெரியும் தன்னை பயன்படுத்திக் கொள்கின் றார்கள் என்று ஆனாலும் சிறு நிம்மதி இப்படி யாவது தன்னுடன் கதைக்கின்றார்களே என்று.... (எப்படிப்பட்ட வாழ்க்கை.....? எல்லாருடைய தேவையும் ஒன்றல்லவே)

அவர்களில் ஒருத்திதான் இன்று பத்திரிகை வைத்துச் சென்றவள். இப்பொழுது வயதுவந்து விட்டதல்லவா! புரிதலின் விளைவு அந்த பாரபட்சம் இல்லை. ஆனால் தந்த வலிகளின் வடுக்கள்தான் இன்னும் நீங்க வில்லை. ஓரிருவருக்கு இவள் மீது பரிவு இருக்கும் ஆனால் மற்றவர்களின் சிநேகம் கிடைக்காமல் போய்விடும் என்ற பயத்தால் அவர்களும் தள்ளியே இருந்துவிடுவார்கள்.

அப்படிதான் ஒருநாள் தரம் ஐந்தில் கல்வி கற்றுக் கொண்டிருக்கும் போது அனைவரையும் மூன்று குழுக்களாகப் பிரிக்கின்றார் ஆசிரியர். இனி நீங்கள் அனைவரும் குழுவாகவே செயற்பட வேண்டும், ஒன்றாக சாப்பிட வேண்டும், விளையாட வேண்டும், படிக்க வேண்டும், வகுப்பறையை சுத்தம் செய்ய வேண்டும் என சொல்லிக் கொண்டிருக்க கண்மணிக்கோ மனதில் பட்டாம்பூச்சி பறந்துக் கொண்டிருந்தது. "அம்மாடி.. இனி தனியாக ஓரமாக இருக்க வேண்டியதில்லை. ஒன்றாக சாப்பிடலாம். விளையாடலாம். அச்சோ... ஜோலி.. ஜோலி..." என மனதிற்குள் குதூ கலத்தில் குதித்துக் கொண்டிருந்தாள்.

வகுப்பறையிலிருந்த மேசைகள் மூன்று பிரிவாக பிரிக்கப்பட்டு தயாரானது. இவளுக்கு முதலாவது குழுவில் இடம் கிடைக்கின்றது. ஆனால் கடைசி இருக்கைதான். அதில் அவளுக்கு கவலை இல்லை. சேர்ந்திருப்பதில் தான் அவளுக்கு சந்தோசம். மனதில் நினைத் துக் கொள்கின்றாள். எல்லோருடனும் நன் றாகப் பழக வேண்டும், நட்பு பிடித்துக் கொள்ளவேண்டும் அப்போதுதான் அவர்களை போல நாமும் ஒன்றாகப் பேருந்தில் பாட சாலைக்கு வரலாம். பாடசாலை முடிந்து



என்று கேட்க, குப்பைத்தொட்டியில் தானே போட வேண்டும் என்று கூறி உரத்துச் சிரிக்கின்றார்கள். நிமிர்ந்து பார்த்த அவளின் கண்கள் குளமாகிவிட்டன. சிரித்துக்கொண்டே உணவுப்பொதியை சுருட்டி குப்பையில் போட்டு கைக்கழுவி விட்டாள். அன்றோடு உறவினை சேர்க்க வேண்டும் என்ற எண்ணத்தையும் கைக்கழுவி விட்டாள்.

சோபாவில் ஒரே பக்கமாய் அமர்ந்திருந்தது கால் பிடித்துக் கொண்டது. கண்மணி மெதுவாக எழுந்து மேசையின் மேல் வைத்த பத்திரிகையை எடுத்துப்பார்த்தாள். அதிலிருந்த பெயர்கள் தன்னுடைய உணவுப் பொதியை குப்பைத்தொட்டி என்றவர்கள் என்று ஞாபகம் வர அப்படியே சிரித்துக் கொண்டு பத்திரிகையை வைத்துவிட்டு ஜன்னலோரமாய் அமர்ந்து வெளியுலகத்தை பார்த்தாள்.

காலம் எவ்வளவு வேகமாக சுற்றுகின்றது. உறவுகள் மாறுகின்றன. பிழைகள் திருத்தப்படுகின்றன. ஆனால் ஏன் குறித்த கவலை மட்டும் தொடர்ந்துக் கொண்டே இருக்கின்றது என்று ஒரு கேள்வி அவளுக்குள்...?

பாடசாலையைக் கடந்து பல்கலைக்கழகம் நுழைந்துப் பட்டப்படிப்பை முடித்து ஒரு தொழிலுக்குச் சென்ற பின்னும் ஒதுக்கிவைக்கப் படுகின்றாள். சிலவேளைகளில் அதற்கு நான்தான் காரணமோ என்ற ஐயம் வேறு. அடிக்கடி கண்ணாடியைப் பார்த்துக் கேட்டுக் கொள்கின்றாள். ஆனால் பதில் இல்லை. அன்று அவளுடைய உடை, தோற்றம் பிடிக்கவில்லை என்றார்கள். அதை சரி செய்துக் கொண்டாள். இப்பொழுதெல்லாம் அவளின் உடைகளிலும் அவளை அழகாகக் காட்டிக் கொள்வதிலும் அதீத முனைப்போடு செயல்படுகின்றாள். அதற்கான காரணம் அறிந்தவளும் அனுபவித்தவளும் அவள் ஒருத்தியே.

படிப்பதிலும் பின்வாங்கவில்லை. படிப்பு வரவில்லை என்பதனாலோ என்று நன்கு படிக்க ஆரம்பித்தாள். பல்கலைக்கழகமும் சென்றாள். எப்போதும் தன்னை புத்துணர்வுடனேயே வைத்துக் கொண்டாள். ஆனால் இப்போதும்

பேசிக் கொண்டே நடந்துப் போகலாம். ஒன்றாக ஐஸ் குடிக்கலாம் என்று கனவுக் கொண்டே இருக்கையில் போய் அமர்ந்து எல்லோரையும் பார்த்துச் சிரிக்கின்றாள். யார் முகத்திலும் சிரிப்பில்லை முகத்தை திருப்பிக் கொள்கின்றனர். ஒருத்தி மட்டும் பார்த்து சிரித்தாள். எனினும் பக்கத்தில் இருந்தவள் கண்ணசைத்ததும் தன் சிரிப்பை மறைத்துக் கொண்டாள்.

இடைவேளைக்கான மணி அடித்தது எல்லோரும் உணவு உண்ணத் தயாரானார்கள். மேசையை சுற்றி இருந்து தமது உணவு பெட்டிகளை எடுத்து மேசையின் மேல் வைத்தனர். எல்லோரும் சிரித்துக் கதைத்துக் கொண்டே சாப்பிட்டுக் கொண்டிருக்க தன்னிடம் யாரும் கதைக்காவிட்டாலும் பரவாயில்லை அந்த இடத்தில் தான் இருப்பதில் அவளுக்கு சந்தோசம் அப்படியே தன்னுடைய பைக்குள் கைவிட்டு சாப்பாட்டை எடுத்து மேசையில் வைத்தாள்.

சாப்பாட்டை சுற்ற ஒரு பேப்பர் இல்லாமல் கடைகளில் சரக்குகள் சுற்றி தரும் பேப்பரில் சுற்றி கொண்டு வந்திருந்தாள். அவள் கஷ்டம் அவளுக்கு எல்வோருடைய முகமும் மாறியது. உணவினை திறந்ததும் சோறும் தேங்காய்ச் சம்பலும் இருந்தது. எல்லோரும் பார்த்துச் சிரித்தார்கள். அவளுக்கு விளங்கவில்லை அவளும் சேர்ந்து சிரித்தாள் பைத்தியக்காரி.

எல்லோரும் சாப்பிட ஆரம்பிக்கின்றனர். இவளும் சாப்பிட்டுக் கொண்டிருக்கின்றாள். பக்கத்தில் அமர்ந்திருந்த இருவர் சாப்பிடும் போது சிதறிய உணவினை சாப்பிட்டுக் கொண்டிருக்கும் இவளின் சாப்பாட்டுப் பொதியில் போட்டுச் சிரிக்கின்றார்கள். அதில் ஒருத்தி "ஏன் இப்படி செய்கிறாய்..?"

தன்னை ஒதுக்கி வைப்பதன் காரணம் என்னவோ என்று கேட்டுக் கொண்டே இருப் பாள். அது நமக்கான சாபமோ விதியோ என்று ஒவ்வொரு முறையும் கடந்து போய்விடுவாள். ஆனால் இரு தினங்களுக்கு முன்னர் நடந்த சம்பவம் சற்று அதீத கவலையை அவளுக்கு தந்துவிட்டது.

அலுவலகத்தில் எல்லோரும் ஒரு செயலமர்வுக்காக மூன்று நாட்களுக்கு கண்டி புறப்பட இருந்தார்கள். இவ்விடயம் ஐந்தாறு மாதங்களுக்கு முன்பதாகவே முன்மொழியப்பட்ட திட்டம். அன்றைய செயலமர்வில்தான் பார்க்கப் போகும் மேதாவிகளை எண்ணிக் குதூகலித்துக் கொண்டிருந்தாள். செல்வதற்கு தயாராக மூன்று மாதங்களுக்கு முன்பதாகவே கடை கடையாகத் தேடி உடைகளையெல்லாம் வாங்கி வைத்துக் கொண்டாள். அங்குள்ள தன் நட்பு வட்டாரங்களுக்கு எல்லாம் சொல்லி வைத்து விட்டாள். எல்லோருடனும் சேர்ந்து ஒன்றாகச் செல்லப் போகிறோமே என்ற குதூகலம் அவளுக்கு போகும் நாளை எதிர்பார்த்துக் காத்துக் கொண்டிருந்தாள்.

குறித்த செயலமர்விற்கான நாள் நெருங்கியது. வெறுமனமே இரண்டு நாட்கள் இருக்கும். அலுவலகத்தின் தலைமையிட மிருந்து அவசர அழைப்பு ஒன்று வந்தது. அவளும் செயலமர்வு குறித்ததாக இருக்கும் ஏதேனும் தனக்கு கடமைகள் வழங்கப்போகின் றார்கள். அதனை சிறப்பாகச் செய்து முடிக்க வேண்டும். அங்கு சென்று தான் பேச தயாராக இருப்பதையும் பேச நினைத்த விடயங்களையும் சொல்லி அனுமதி வாங்க வேண்டும் என்று பல எண்ணக்கோட்டைகளுடன் தன் அறையில் இருந்து எழுந்து தலைமை அலுவலக அறைக்குள் நுழைகின்றாள்.

“நாங்கள் ஒரு முடிவெடுத்துள்ளோம் இன்னும் இரு தினங்களில் கண்டியில் ஓர் செயலமர்வு உள்ளது. எனினும் அலுவல கத்திலுள்ள எல்லோரையும் அழைத்துச் செல்ல முடியாது. ஆகவே உம்மை இங்கு விட்டுச்செல்லலாம் என்று முடிவெடுத்துள் ளோம்” என்றார் தலைமை.

ஒரு கணம் அவள் மனதில் கட்டிக் கொண் டிருந்த கனவுக் கோட்டை தகர்க்கப்பட்டு சரிந்து கீழே விழுந்தது. மனதில் கடும் வேதனை ஆனால் அவள் சிரித்துக் கொண்டே “சரி சேர்” என்றாள். அவள் மன தெங்கும் “மறுபடியுமா?” என்ற கேள்வி அங்கும் இங்கும் ஓடிக்கொண்டிருந்தது. இம்முறையல்லாமல் நீங்கள் பணிவிடை பெறுவதற்கு முன்பாக வாய்ப்புக்கிடைத்தால் அடுத்தமுறை செல்லலாம் என்றார். அவரின் வார்த்தைகளைக் கேட்டு சிரித்தப்படி அதற்கு இன்னும் 4 மாதங்களே உண்டு என்று எண்ணிக்கொண்டாள். 4 மாதங்களில் அவள் பணி இடமாற்றம் பெற இருக்கின்றாள்.

இதற்குபின் வாய்ப்பே இல்லையென்ற நிலையிலும் ஒரு விடயம் உங்களுக்கு மறுக்கப்படுமானால் அங்கிருப்பது என்ன? அவள் மனதில் தோன்றியது என்னவோ எனக்கு இது புதிதல்ல. ஆனால் இடமும் நபர்களும்தான் புதிது.

அலுவலகத்தில் இருந்து வெளியில் வந்தவளுக்கு இனம்புரியாத ஒரு வலி. ஏன் எல்லா இடங்களிலும் நான் மட்டும் ஒதுக்கப்படுகின்றேன். என்னில் ஏதும் தவறுண்டா? ஏன் இப்படி என்று எண்ணிக் கொண்டு இருக்கையில் அமர்ந்தாள். அவளுடைய சிந்தனை நேரத்தைக் கடந்து போய்க் கொண்டிருந்தது. அன்றிரவு அவள் தூங்கவே இல்லை. அவளது மனம் கனத்து இருந்தது.

அடுத்தநாள் காலை அனைவரும் அலு வலகத்தில் பரபரப்பாய் தயாராகிக் கொண் டிருந்தனர். எல்லோரும் ஓட்டமும் நடையுமாக சிரித்தப்படி தங்களது திட்டங்களை வகுத்துக் கொண்டிருந்தனர். அவ்வப்போது சிலர் அவளது மேசைக்கு அருகில் வந்து நாளை செல்ல இருக்கும் பயணத்தின் குதூகலம் குறித்து அவர்களுக்குள் பேசி சிரித்துவிட்டுச் சென்றனர். அங்கு பணிபுரிபவர்கள் அனைவரிலும் வயதிற் சிறியவள் அவள்தான்.

அவளிற்கும் மனதென்று ஒன்று உண்டு அவளுக்கும் வலிக்கும் என்பதை யாரும் புரிந்துக்கொள்ளவில்லை. அவளை யாரும் சமாதானம் செய்யவும் இல்லை. ஆறுதல் வார்த்தை கூறவுமில்லை. பேச்சுக்காவது நீங்களும் வந்திருந்தால் நன்றாக இருந் திருக்கும் என்று கூட கூறவில்லை. இப்படியான வர்களுடன் தான் இவ்வளவு காலம் வேலை செய்தோமா....? இவர்களின் வேலைப்பளுவை

குறைக்கத்தான் மேலதிக வேலைநேரங்களில் உடனிருந்து உதவி செய்தோமா..? என்று மனதிற்குள் எண்ணிக் கொண்டாள்.

இன்று விடியற் காலையில் எல்லோரும் கிளம்பிவிட்டார்கள். இவ்வளவு நாள் பழகியும் யாரிடமுமிருந்தும் விடைபெறும் குறுஞ் செய்திகள்கூட வரவில்லை. வாட்ஸ்ப் பதிவு களைப் பார்த்துத் தெரிந்துக் கொண்டாள். அவள் கவலைப்படும் போதெல்லாம் அவளது கனவுலகில் தோன்றி அவளது புலம்பல் களையெல்லாம் கேட்டு ஆறுதல் தரும் தன் தாயை மனதில் நினைத்து புலம்பிக் கொண் டிருக்கின்றாள். அப்போதுதான் தாயிடமிருந்து அழைப்பும் வந்தது. தாயிற்கு தெரியுமல்லவா தன் பிள்ளை தன்னை எப்போது தேடும் என்பது. என்னைப் பொறுத்தவரை அவளும் அன்பை தனதாக்கியவள்தான். எது எப்படியானாலும் ஜன்னலருகில் இருக்கும் அவளின் கேள்வி ஒன்றுதான் ஏன்..?

○○○

# ஈரப்பசும் வெளி...

என்
புன்னகையைக்
களவு செய்து
அழுகையைப்
பரிசளிக்கிறீர்கள்

என் புன்னகையை நேசிக்கும் நீங்கள்
அழுகையை வெறுத்து வெறுமையாக்கி
என்னிடம்
வீசுகிறீர்கள்

என் வெளியழகை
ரசித்த நீங்கள்
என் கனவுலகைத்
தரிசிக்கத் தவறி விட்டீர்கள்

ஆனால்
நீங்கள்தான் எனது நேசம்
புன்னகையோ
கண்ணீரோ அல்ல

நேசிப்பவரின்
ஆசையில் ஆகாயமளந்து
வலியில் விரல் தந்து
ஈரப்பசும்வெளியாய்
நான்
நனைந்திருக்கிறேன்

நான் நேசிப்பவரின்
புன்னகை கண்ணீர்
இரண்டுக்கும்
ஒரே நிறுவை
என் தராசில்

இரண்டாம் இடமென்று
இதயத்தில் எந்த மூலையும்
கிடையாது

ஆனால்...

என் புன்னகைக்குள் ஒளிந்திருக்கும்
அழுகையையும்
கண்ணீருக்குள்
ஒளிந்திருக்கும் கனத்தையும் எப்போது
அறிந்து கொள்ளப் போகிறீர்கள்?

**Dr. ஜலீலா முஸம்மில்**
ஏறாவூர்

# எழுதத் தூண்டும் எண்ணங்கள்



பேராசிரியர் துரை மனோகரன்

## நல்ல ஒரு தொடக்கம்

கடந்த ஆண்டு டிசம்பர் மாதத்தில் இலங்கையில் நல்ல ஒரு நிகழ்வு நடந்திருக்கிறது. தற்போது தனது 92ஆவது வயதில் தொடர்ந்தும் வாழ்ந்துகொண்டிருக்கும் இலங்கையின் தேசியத் தமிழ் நாள் இதழ்களில் ஒன்றான தினகரனும், தினகரன் வாரமஞ்சரியும், காவேரி கலாமன்றமும் இணைந்து மாபெரும் விருது விழா ஒன்றினை கொழும்பு லேக்ஹவுஸ் மண்டபத்தில் நிகழ்த்தின. முதன்முறையாக நடந்த இவ் விருது விழாவுக்குத் தினகரன், தினகரன் வாரமஞ்சரி பிரதம ஆசிரியர் செந்தில்வேலவர் தலைமை தாங்கினார். அமைச்சர் சரோஜா சாவித்திரி போல்ராஜ் பிரதம அதிதியாகவும், பிரதி அமைச்சர் முனீர் முளப்பர் சிறப்பு அதிதியாகவும் கலந்து சிறப்பித்தனர். அமைச்சர், பிரதி அமைச்சர், புரவலர் ஹாஸிம் உமர், வீரகேசரி நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி செந்தில்நாதன், தமிழன் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் சிவராஜா, வசந்தம் தொலைக் காட்சிச் செய்திப் பிரிவுப் பணிப்பாளர் சித்தீக் ஹனீபா ஆகியோர் கௌரவிக்கப்பட்டனர்.

இவ்விழாவில் பேராசிரியர் துரை. மனோகரன் விசேட வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டார். சாகித்தியரத்னா அன்னலட்சுமி இராஜதுரை, கலாபூ‘ணம் நிலாம், தனபாலசிங்கம், கலாபூஷணம் மீரா இஸ்ஸதீன், இரா. அ. இராமன், ரசீத் எம். இம்தியாஸ், சற்குருநாதன், டட்லி ஜோன்ஸ், நந்தன வீரசிங்க, வி. என். மதியழகன் ஆகியோர் ஊடகத்துறை வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர். ஊடகத்துறை சார்ந்த பல்வேறு விருதுகளும் வழங்கப்பட்டன. மர்லின் மரிக்கார், லோரன்ஸ் செல்வநாயகம், என். எச். எப். ‘ஹஸ்னா, எஸ். கே, புவனேஸ்வரன் கஜிந்தன், சண்முகராஜா நேசராஜா ஆகியோர் அவரவர் சார்ந்த ஊடகத் துறைகளில் விருதுகள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

இவ்விருது விழாவில் தமிழ் இலக்கியத் துறை தொடர்பான சிறப்பு விருதுகளும் பலருக்கு வழங்கப்பட்டன. இவ்வகையில், இக்பால் அலி (சிறுவர் பாடல்), ரீ.எல். ஜவ்பர்கான் (கவிதை), ஓ. கே. குணநாதன் (சிறுகதை), மொழிவாணன் (நாவல்), ரா. நித்தியானந்தன் (திறனாய்வு) ஆகியோர் அத்தகைய சிறப்பு விருதுகள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர். இவர்களோடு, தொழு நோய் நிபுணர் வைத்தியர் எச். எம். ஏ. டி. எம். விஜேசேகர, அலைன்ஸ் அபிவிருத்தி நம்பிக்கை நிதியப் பணிப்பாளர் ரகு பாலச்சந்திரன், தலைமை நிகழ்ச்சி அதிகாரி வில்லியம்ஸ் ஜோன்ஸ் அன்டனி, காவேரி கலா மன்றத் திட்ட முகாமையாளர் ‘ஹானா ஆகியோரும் நிகழ்ச்சியில் கௌரவிக்கப்பட்டனர்.

தினகரனைப் பொறுத்தவரை, இவ்விருது விழா நல்ல ஒரு தொடக்கமாக அமைந்துள்ளது. இவ்விழாவினைச் சிறந்த முறையில் ஏற்பாடு செய்து, சிறந்த பணிகளை ஆற்றிவருவோரை விருதுகள் வழங்கிக் கௌரவித்த தினகரன், தினகரன் வாரமஞ்சரி பிரதம ஆசிரியர் செந்தில்வேலவரும், அவரது ஆசிரியர் குழாத்தினரும், காவேரி கலாமன்றத்தைச் சார்ந்தவர்களும், இந்நிகழ்ச்சியின் பின்னணியில் இருந்தவர்களும் நமது நன்றிக்கும், வாழ்த்துக்கும், பாராட்டுக்கும் உரியவர்கள். இத்தகைய விருது விழா ஆண்டுதோறும் இடம்பெறவேண்டும். தினகரன் இன்று போல் என்றும் வாழ்க!

## நம் பாராட்டுக்கு உரியவர்

சென்ற ஆண்டில் பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறையில் இடம்பெற்ற நிகழ்ச்சிகளில் ஒன்று, பேராதனைப் பல்கலைக்கழக முன்னாள் மாணவரும், இலங்கைத் தமிழ் நாடக அரங்க ஆளுமையாளருமான ஏ. சீ. தாசீசியஸ் குறித்த ஆவணப்படத் திரையிடல் நிகழ்வாகும். இந்தியத் தேசிய விருது பெற்ற ஆவணத் திரைப்பட இயக்குநரும், எழுத்தாளரும், கலை விமர்சகருமான அம்ஷன்குமாரின் இயக்கத்தில் உருவான ஆவணத் திரைப் படமாக இது அமைந்திருந்தது. தாசீசியஸின்

முழு ஆளுமையையும் வெளிப்படுத்தும் சிறந்த ஆவணத் திரைப்படமாக இது உருவாக்கப்பட்டிருந்தமை பாராட்டுக்குரியதாகும். அம்ஷன்குமாரும், அவரது துணைவியும் நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்த் துறைத்தலைவர் பேராசிரியர் ஸ்ரீ. பிரசாந்தன் தலைமையில் நிகழ்ந்த இந்நிகழ்வில், பேராசிரியர் நு.ஃ.மானும், நானும் கருத்துரைகள் வழங்கினோம். ஏற்புரையினை அம்ஷன்குமார் நிகழ்த்தினார். ஆவணப்படத் தயாரிப்புத் தொடர்பான திரையிடல் நிகழ்ச்சியோடு, சிறந்த கலந்துரையாடலும் இடம்பெற்றமை மகிழ்ச்சியைத் தந்தது.

நாடகர் - ஊடகர் - ஏடகர் ஈழக்கூத்தன் ஏ.சீ. தாசீசியஸ் என்னும் தலைப்பில் அமைந்த தாசீசியஸ் பற்றிய பவளவிழா மலரினையும் அம்ஷன்குமார் வழங்கினார். 2016 இல் வெளிவந்த இம்மலரின் தேடல் - திரட்டல் - தொகுத்தல் முயற்சிகளை பொன் ராசா அன்ரன் சிறப்பான முறையில் செய் திருந்தார். அம்ஷன்குமாரின் வருகை, பல்கலைக்கழக மாணவர்களுக்கும் சிறந்த உந்து சக்தியாக விளங்கியமையை அவதானிக்க முடிந்தது.

## ஒரு மகிழ்ச்சி கலந்த நாள்

அண்மையில் ஒரு மகிழ்ச்சி கலந்த நாள் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் எனக்கும், தமிழ்த்துறை ஆசிரியர்கள், மாணவர்களுக்கும் கிடைத்தது. குறிப்பிட்ட அந்நாளில் காலையில் பேராசிரியர் பிரசாந்தன் தலைமையில் தமிழ்த்துறை நடத்திய நிகழ்வில் இலங்கையின் புகழ் பெற்ற நாடகத்துறைக் கலைஞர்களான பாலேந்திரா - ஆனந்தராணி தம்பதியினர் கலந்துகொண்டு, தமது நாடக அனுபவங்களைப் பகிர்ந்துகொண்டனர்.

அன்றைய மாலைப் பொழுதில் பேராதனைப் பல்கலைக்கழக இரண்டாம் ஆண்டு மாணவர்களின் நாடக நாள் நிகழ்வு பேராசிரியர் பிரசாந்தன் தலைமையில் நடைபெற்றது. வடு, தேடல், பாதை மாறும் பயணம் ஆகிய நாடகங்கள் மேடையேற்றப்பட்டன. மாணவர்களின் நாடக ஆர்வத்தையும், திறமையையும் அவர்கள் மேடையேற்றிய நாடகங்கள் நன்கு புலப்படுத்தின. நாடகங்கள் தொடர்பான கருத்துரையை நான் வழங்கினேன்.

வடு என்ற நாடகம், சமுதாயத்தின் தவறான போக்குகளால் தனிமனிதர்கள் மத்தியில் ஏற்படும் மன உளைச்சல்கள், மனப் பிறழ்வுகளை எடுத்துக்காட்டும் முறையில் அமைந்திருந்தது. கதாநாயகியாக நடித்த பிரியங்காவும், அவரின் நகைச்சுவை நண்பியாக நடித்த மதுராங்கியும் தம் நடிப்புத் திறமையை நன்கு வெளிப்படுத்தினர். பகிஷா, கார்த்திகா, ருகையா, உஷா, அக்மா, ரிம்ஷா ஆகியோர் தம் பாத்திரங்களுக்கு ஏற்பச் சிறப்பாக நடித்தனர். அப்பாவாக நடித்த சுகன்யா, மனச்சாட்சியாக நடித்த ஆர்த்திகா ஆகியோரும் தம் நடிப்புத் திறனை வெளிப்படுத்தினர். உஷா இந்நாடகத்தை எழுதிச் சிறப்பாக இயக்கியிருந்தார்.

தேடல் என்ற நாடகத்தை ஷெறின் சுஜானந்தி எழுதித் திறம்பட இயக்கியிருந்தார். தம் பிள்ளைகளின் தவறுகளைப் பெற்றோர் ஏற்றுக்கொள்ளாத நிலையினையும், பாதிப்புகள் ஏற்பட்டபின் நிலைகுலைவதையும் நாடகம் நன்கு உணர்த்தியது. நாடகத்தின் குறியீட்டுப் பாத்திரங்களாக ஷெறின் சுஜானந்தி, சுடர்ச்செல்வி ஆகியோர் நல்ல முறையில் நடித்திருந்தனர். இளைஞனாக நடித்த சரண்யா, தம் நடிப்புத்திறனை நன்கு வெளிப்படுத்தினார். நடன ஆசிரியையாக நடித்த தனஞ்சிகா, தமது நடனத் திறமையையும், நடிப்புத் திறனையும் சிறப்பாக இனங்காட்டினார். ஆயிஷா, வாகினி, ஜஹான், லதனிகா, ஜென்சிகா ஆகியோரும் தத்தம் பாத்திரங்களை உணர்ந்து நடித்தனர்.

தவறான நட்பு, ஓர் இளைஞனின் வாழ்வை எந்த அளவுக்கு நாசமாக்குகிறது என்பதைச் சிறப்பாக எடுத்துக்காட்டும் நாடகமாகப் பாதை மாறும் பயணம் அமைந்திருந்தது. குறியீட்டுப் பாணி கலந்த நாடகமாக இது விளங்கியது. இந்நாடகத்தைக் கேதுசன் சிறப்புற எழுதி இயக்கியிருந்தார். மகனாக நடித்த விதுர்ஷன், மகளாக நடித்த பிரியந்தினி பாராட்டும் முறையில் நடித்திருந்தனர். கஜேந்தினி, றிப்கா ஆகியோர் தம் நடிப்புத்திறனை நன்கு வெளிப்படுத்தினர். இந்நாடகத்தில் பங்கேற்ற சுமதினி, பஹீமா, ருஸ்கா, கோகிலா, கேதுசன் ஆகியோரும் திறம்படத் தம் பங்களிப்பினைப் புலப்படுத்தினர்.

❍❍❍

# வாசகர் பேசுகிறார்

ஞானம் டிசம்பர் 2024 காலதாமதமாகவே கிடைத்தது. எனினும், அனைத்து விடயங்களையும் படித்து முடித்தேன். ஆசிரியர் தலையங்கமாக "பெண்கள் அறிவை வளர்த்தால் வையம் பேதமை அற்றிடும் காணீர்!" என்ற தலைப்பு பெண்களை பெருமைப்படுத்தியுள்ளது. இலங்கை இலக்கிய வரலாற்றில் முதன்முறையாக பெண் ஆளுமையாளரான **அன்னலட்சுமி இராஜதுரை** அவர்கள் சாஹித்திய விருது கிடைத்த அட்டைப்படமும், அவர்பற்றிய தி.ஞானசேகரன் ஐயாவின் கட்டுரையும் இரட்டிப்பு மகிழ்வினை தந்தது.

இம்முறை கவிதைகள் அதிகமாய் அலங்கரித்துள்ளன. (கவிதைகளை நடு இரண்டு பக்கங்களிலும் அல்லது தொடர்ச்சியான பக்கங்களிலும் அச்சாக வருகின்றபோது அவை இன்னும் சஞ்சிகைக்கு அழகுசேர்க்கும் என்பது எனது சின்ன அபிப்பிராயம்).

நீண்ட காலங்களுக்கு பிறகு நண்பர் **இ.இராஜேஸ்கண்ணனின்** சிறுகதை ஒன்றை வாசிக்கின்ற சந்தர்ப்பம் கிடைத்தது. சிறுகதையில் இராஜேஸ்கண்ணனுக்கு என்று தனிமொழியை அவர் கையாண்டு வருவது அவருடைய தனித்துவமாகும். எமது பழைய பாரம்பரியங்களை சிறு கதைகள் மூலமாககொண்டு வந்து நிறுத்துவதில் சில உத்திகளை அவர் கையாள்கிறார். அந்தக் கால பேச்சுவழக்கு சொற்கள், வீட்டிலே உள்ள பாவனை பொருள்கள் என யாவும் கதையிலே வருகின்றன. அச்சொற்கள் இன்றைய சந்ததியினருக்கு தெரிவதில்லை. அவை பல்கலைக்கழக மாணவர்கள் மூலமாக ஆய்வுநிலைக்கு உள்படுத்தப்படவேண்டும்.

ஞானத்தின் நடு பன்னிரு பக்கங்களில் வண்ணமாய் வருகின்ற ஞானம் பாலச்சந்திரனின் பதிவுகள் அபாரம் என்று சொல்லலாம். ஞானம் இதழை தூக்கியதும் அந்த பக்கங்களைப் புரட்டும்படி மனம் அவாவுகின்றது. மிக அருமையான புதுவடிவ கட்டுரை, அது.

ஞானத்தின் வழமையான ஏனைய கவிதை, சிறுகதை, கட்டுரை ஆகியனவும் இலக்கிய மனதுக்கு ஒரு சுவையை தருகின்றது. **– சமரபாகு சீனா உதயகுமார், வல்வெட்டித்துறை**

❍

ஞானம் 291, 292, 293, 294, 295 சில மாற்றங்களுடன் வெளிவருவது கண்டேன். பீ. எச். அப்துல் ஹமீத் செவ்வி, மகாராமாயணம் ஓர் அறிமுகம், வெளிர்நீலப் புள்ளி, எண்களும் எண்ணங்களும், பஞ்ச இரத்திரனம் என ஊடகவியல், விஞ்ஞானம், இலக்கியம், ஆன்மீகம் என ஞானம் பாலச்சந்திரன் தரும் கட்டுரைகள் காத்திரமானவை. இவைகள் வண்ணங்களில் வெளிவந்துள்ளமை ஒருவகையில் புதுமையே. வாழ்த்துக்கள். **– மொழிவரதன்**

❍

இதழ் 295 கிடைத்தது. மகாபாரதம் கேள்வி பதிலாக பகுப்பாய்வு செய்துள்ளமையைப் படித்தேன். தற்கால சினிமாப் பாடல்கள் கேள்வி பதில் முறையாக அமைவதை சுட்டிக் காட்ட விரும்புகிறேன். சோக்கிரடீஸ் கேள்வி பதிலாக மக்களை எழுச்சியுறச் செய்தமை கவனிக்கத் தக்கது. பொதுவாக பரீட்சைகளும் இவ்வாறு அமைவது குறிப்பிடத்தக்கது. **– சி. குமாரலிங்கம்**

❍ ❍ ❍

## திருத்தம்

கடந்த 295ஆவது ஞானம் இதழில் " ....... பிரபல எழுத்தாளரான **மு. பொன்னம்பலம்** 11.07.2024 திங்கட்கிழமை அமரரானார்....." என்றுள்ளது . இது தவறான தகவலாகும். மு. பொ. 6.11.2024 புதன்கிழமை அமரரானார் என்பதே சரியான தகவல் ஆகும். இவ்வாறான தகவல் பிழைகள் எதிர்காலத்தில் தேவையற்ற குழப்பங்களை ஏற்படுத்தலாம்.

**– தேவமுகுந்தன், கொழும்பு 6**

# பொங்கல் என்பது மங்கலம் ஆகும் !

மார்கழி மாதம் மனமுறை மாதம்
தேவர் விரும்பும் திருவுறை மாதம்
சைவம் வைணவம் போற்றிடும் மாதம்
மெய்யாம் இறையினைத் துதித்திடும் மாதம்

இறையினைத் துதித்து எல்லோர் மனமும்
புனிதம் ஆகியே நிற்பது தையிலே
தையிலே வருவதோ தலைநிமிர் பெருவிழா
அதுவே தமிழரின் ஆனந்தப் பெருவிழா

உழவை மதிக்கும் உன்னதப் பெருவிழா
உழைப்பை உவக்கும் உழைப்பவர் திருவிழா
நன்றியை நவிலும் நயப்புடைப் பெருவிழா
நல்லதை நல்கிடும் தைப்பொங்கல் நல்விழா

சமயமும் கலக்கும் சமத்துவம் இருக்கும்
தமிழர் யாவரும் பொங்கலைப் பொங்குவார்
பொங்கிய பொங்கலைப் பங்கிட்டு மகிழ்வார்
பொங்கல் என்பதே பூரிப்பைத் தந்திடும்

நீராடி யாவரும் புத்துடை அணிவார்
மாவிலை தோரணம் வாசலில் அமைப்பார்
கோலம் போடுவார் கும்பம் வைப்பார்
குத்து விளக்கினை ஒளிர்ந்திடச் செய்வார்

அப்பா அம்மா தாத்தா பாட்டி
அனைவரும் மகிழ்வாய் அங்கே வருவார்
பொங்கற் பானையை அலங்காரம் செய்து
மங்கலம் பொங்கென அடுப்பினில் வைப்பார்

பாலினை யாவரும் பகிர்ந்துமே விடுவார்
பொங்கும் பாலினை பொறுமையாய்ப் பார்ப்பார்
வெண்ணுரை தள்ளிடப் பாலுமே பொங்கும்
யாவரும் அரிசியைப் பானையில் இடுவார்

சர்க்கரை தேனைப் பொங்கலில் சேர்ப்பார்
சந்தோஷம் அங்கே நிறைந்துமே பொங்கும்
அத்தனை பேரும் பொங்கலைப் படைத்து
ஆதவன் நோக்கி அர்ப்பணம் செய்வர்

ஆலயம் நோக்கி அனைவரும் செல்வார்
ஆனந்தம் மகிழ்வு அமைந்திட வேண்டுவார்
எண்ணிய காரியம் ஏற்றமாய் அமைந்திட
இறையின் திருவடி வீழ்ந்தே வேண்டுவார்

உறவுகள் வருவார் உவகை கொள்ளுவார்
பெற்றும் கொடுத்தும் பெருமகிழ் வெய்துவார்
பெரியவர் ஆசியைப் பெற்றிட யாவரும்
அருகினில் சென்று ஆவலாய் நிற்பார்

ஆசிகள் பெற்றவர் அனைத்தையும் பெற்றதாய்
அக மகிழ்வுடனே ஆனந்தம் அடைவார்
பெருநாள் திருநாள் பெறுமதி என்பதை
உணரும் போது உள்ளம் உவக்கும்

பொங்கற் பண்டிகை பூரிப்பை ஊட்டும்
எங்கும் பட்டாசு மத்தாப்பும் இருக்கும்
பாடலும் இருக்கும் பட்டிமன்றமும் இருக்கும்
யாவரும் மகிழும் கோலமும் பெருகும்

இல்லார் இருப்பார் யாவரும் பொங்குவார்
இல்லம் அனைத்தும் பொங்கல் இருக்கும்
பொங்கல் என்பது மங்கலம் ஆகும்
பொங்கி மகிழ்வோம் போற்றுவோம் இறையை



**மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா**
மேனாள் தமிழ்மொழிக் கல்வி இயக்குநர்
மெல்பேண் ..... அவுஸ்திரேலியா

இலங்கைத் தமிழ் இலக்கிய நிறுவகமும் இலண்டன் தமிழ் இலக்கிய நிறுவகமும் இணைந்து வழங்கும்

## இரா. உதயணன் இலக்கிய விருது 2023/2024

இவ்வாண்டு நாவல், சிறுகதை, கவிதை, சிறுவர் இலக்கியம். தமிழ் வளர்ச்சி இலக்கிம், அயலகப் படைப்பாளிகளின் நூல்கள் என விருதுக்காகப் பத்து (10) நூல்கள் தேர்ந்தெடுக்கப் பட்டு இரா. உதயணன் இலக்கிய விருதுடன் தலா ரூபா 10.000 ஆயிரம் வீதம் 100.000. பணப்பரிசும் வழங்கப்படவிருக்கிறது.

இவ்வாண்டுக்கான விருதுத் தேர்வுக்காகப் படைப்பாளிகள் நூல்களை அனுப்பி வைக்கலாம். அனைத்துப் படைப்புகளும் முதல் பதிப்பாக இருத்தல் வேண்டும். அயலகப் படைப்பாளிகளுக்கான விருதுக்குரிய நூல்கள் தவிரந்த ஏனைய துறைசார்ந்த நூல்கள் அனைத்தும் இலங்கையில் வாழும் எழுத்தாளர்களினால் எழுதப்பட்டிருக்க வேண்டும். இலங்கையில் ISBN பெற்றிருத்தல் வேண்டும்.

- உலகின் எந்தப் பகுதியிலும் வாழும் எழுத்தாளர்களினாலும் எழுத்தப்பட்டிருக்கலாம்.
- உலகின் எந்தப் பாகத்திலும் பதிப்பித்திருக்கலாம்.
- சிறுகதை, நாவல் ஆகிய இரு துறைசார் நூல்கள் மட்டும் அனுப்ப வேண்டும்.
- அனைத்து நூலக்களும் 2023/2024 தை முதலாம் திகதி தொடக்கம் 2023/2024 மார்கழி 31ஆம் திகதிவரையான காலப்பகுதியில் பதிப்பித்திருக்க வேண்டும்.
- தேர்விற்காக மூன்று பிரதிகள் (நூல்கள்) அனுப்பட வேண்டும்.
- நூல்கள் யாவும் : 2025 பெப்ரவரி 28ம் திகதிக்கு முன் அனுப்பட வேண்டும்.

நூல்கள் அனுப்ப வேண்டிய முகவரி

**இரா. உதயணன் இலக்கிய விருது - 2023/2024**
**இலங்கைத் தமிழ் இலக்கிய நிறுவகம், இல.115 மன்னார் வீதி, வைரவபுளியங்குளம், வவுனியா.**
தொ.பே.இல. 00 44 7747794358 ; 0094 771 877 999

## எழுத்தாளர் 'குரு அரவிந்தன் வாசகர் வட்டம்' நடத்தும் உலகளாவிய 3வது திறனாய்வுப் போட்டி - 2025

தமிழ் இலக்கிய உலகில் புகழ்பெற்ற எழுத்தாளர் குரு அரவிந்தன் அவர்களின் தமிழ் இலக்கிய சேவையைப் பாராட்டும் முகமாகவும், வாசிப்பு, எழுத்துப் பழக்கத்தை ஊக்கு விக்கும் நோக்கமாகவும் இடம்பெறும் குரு அரவிந்தன் எழுதிய நாவல், சிறுகதை தொடர்பான திறனாய்வுப் போட்டி.

15 பரிசுகள், மொத்தம் 1,50,000 ரூபாய்கள், இலங்கை ரூபாயில் வழங்கப்படும்.

| | | | |
|---|---|---|---|
| 1ஆம் பரிசு | - 30,000/= | 4ஆம் பரிசு | - 15,000/= |
| 2ஆம் பரிசு | - 25,000/= | 5ஆம் பரிசு | - 10,000/= |
| 3ஆம் பரிசு | - 20,000/= | | |

**போட்டி முடிவு 31. 03. 2025**

10 பாராட்டுப் பரிசுகள் இலங்கை ரூபாய்கள் தலா 5000/=

குரு அரவிந்தன் அவர்களின் படைப்புகளுக்கான திறனாய்வுப் போட்டி. குறைந்தது 2 புதினங்கள் அல்லது 4 சிறுகதைகள் பற்றி உங்களின் கருத்துரைகளைத் தமிழில் அல்லது ஆங்கிலத்தில் 5 பக்கங்களுக்குள் அல்லது 1600 சொற்களுக்கு மேற்படாமல் யூனிக்கோட் மற்றும் வேர்ட் (Unicode and Word) அச்சுப்பிரதியாக அனுப்பவும். மாணவ, மாணவிகளாயின் தனியாகக் குறிப்பிடவும். வயது வரம்பு இல்லை. ஒருவர் ஒரு கட்டுரை மட்டுமே அனுப்பலாம். பரிசுபெற்ற கட்டுரைகளைத் திருத்தி நூலாக வெளியிடும் உரிமை வாசகர் வட்டத்திற்கு உரியது.

மின்னஞ்சல் வழியாக ஆங்கிலத்தில் உங்களின் முழுப்பெயர், தெளிவான அஞ்சல் முகவரி, மின்னஞ்சல் முகவரி, செல்போன் எண் விவரங்களோடு அனுப்பவேண்டும்.

போட்டி முடிவுகள் 30 ஆம் திகதி ஏப்ரல் மாதம் 2025 இணையத்தில் வெளியிடப்படும்.

மின்னஞ்சல்: kurufanclub@gmail.com

இணையம்: https://kurunovelstory.blogspot.com/> http://tamilaram.blogspot.com/ https://canadiantamilsliterature.blogspot.com/

செயலாளர், குரு அரவிந்தன் வாசகர் வட்டம். kurufanclub@gmail.com


GNANAM - Registered in the Department of Post of Sri Lanka under No. DOP/News/16/2025

கந்தபுராண கலாசாரத்தின் கலங்கரை விளக்கம்

# காசிவாசி செந்திநாதையர்

## நூற்றாண்டுச் சிறப்பிதழ்

(1924 – 2024)




விலை:

ரூபா 1500/=

ஞானம் பதிப்பகம்
3B, 46ஆவது ஒழுங்கை, கொழும்பு 6.
+ 94 11 2586013 / + 94 717 362 862
editor@gnanam.info

PRINTED BY UNIE ARTS (PVT) LTD., COLOMBO 13. TEL: 011 2330195

ISSN 2478-0340